கலித்தொகை மூலமும்

தை. ஆ. கனகசபாபதி முதலியார்

இயற்றிய

விளக்கவுரையும்

(பாலைக்கலி)

பன்னூற்கழகம்

6, வேங்கடாத்திரி நாயக்கன் வீதி,

குயப்பேட்டை, பிரம்பூர் பாரக்ஸ், சென்னை.

உரிமை
உரையாசிரியர்க்கே.

1937

விலை ரூ. 14.00

முதற்பதிப்பு 500 பிரதிகள்

பொருளடக்கம்

			பக்கம்
1.	ஆங்கில முன்னுரை	...	v
2.	முகவுரை	....	xi
3.	பாலைக்கலியும் விளக்கவுரையும்	....	1
4.	செய்யுள் முதற்குறிப்பகராதி	....	140
5.	சில குறிப்புக்கள்	....	141

FOREWORD

THE world is full of poetry. There is poetry of the air: there is poetry of the sea: there is poetry of the mountains. There is poetry of children: there is poetry of women: there is poetry of life. In short, there is no place where there is no poetry. It cannot be otherwise, for the Maker is Himself a poet—the Best Perfect Poet.

Few, however, see anywhere any poetry at all. It is those who not only see it themselves, but also open the eyes of others to see it that we call poets.

True poets are the sons and interpreters of the Great Poet. They have been sent by Him into the world to sing of all that is good, and to lead men finally to Him.

Now, if it is the mission of poets to sing of goodness, and if the source of all goodness is religion, then, the East, which is the home of religions, is the home of poetry too.

There is also another thing that is conducive to the growth of poetry—the geography of a country. Swift sadly remarked that the chilling climate of Britain hardly bore a brig of bays in fifty years. It is not so with the sunny East. There have been scores of poets there in an age.

Perhaps no land can boast of so many poets as the Land of the Tamils. In fact, their poets are the Tamils' chief glory.

Great poets are profound philosophers, for philosophy is but a handmaid to religion. Tamil poets have their own philosophy too :—

On earth there is nothing great but man. What makes him so great is religion. There are religions and religions in the world. But true religion lies not in talk, but in walk. In other words, a good life is the only religion. There can be no good life without humanity: and no humanity without love. And the nursery of love is home.

Now, man has three homes. There is the highest home, often known as heaven, of which he is a candidate—the home which in this life no human eye could ever see, no human mind could ever imagine, and no human words could ever describe : for heaven were not heaven, if man knew what it were. The other two are the parental home and the marital home.

Love must sprout in the former and be fostered in the latter, before it is finally transplanted in the home above.

Birth is much : breeding is more. Even so, sprouting is much : fostering is more. Hence, the marital home is more important than the parental home. How love may begin, grow, and mature

there best, and how at last it may be perceived there that all love is lost but upon God—these, in brief, are the mystic philosophical meanings conveyed by the so-called Erotics, which form the majority of the eight ancient Tamil higher classics, and some of the eighteen ancient Tamil minor classics.

Great saints like Nammalvar, Manickavasakar, and Thiruthakkar would have never sung their erotics and erotic epic, unless those poems had these inner meanings. In fact, the name by which these erotics are known in Tamil means only "works with inner meanings".

The Tamil erotics, then, are the best works in the language, and it is their principle that 'men must be taught as if you taught them not'.

Apart from the high ideals and philosophy of life they contain, they are rich in figurative implications, philosophy of taste, and human Psychology (the *Rasa* of the Sanskritists) without which, according to the Indian literary standard, there can be no poetry.

Of the many Tamil classical erotics there is one which is pre-eminent. It is the Kali, often known as the Kali-thohai. Unlike the rest of its kind, it is highly dramatic and free from grammatic stiffness. It is written, as its name implies, in a felicitous metre, while the rest of its kind are in other metres common to all themes.

The Kali metre is the special erotic metre which the ancient Tamil genius has invented for the purpose. There are four different kinds of stanzas of this metre used in the Kali, and one of them, in which the greater number of the verses of the book is written, is of great beauty. The varied melody of the different parts of the stanzas of this kind, especially of the second part, which generally consists of three groups of lines somewhat similar to the parallelism of Hebrew poetry, is charming. The object of the exquisite music of the stanzas is to melt the hardest heart and impress upon it the high ideals and philosophy of life.

Thus, the Kali is quite unique. And very truly has an ancient Tamil poet said : "We don't want either the Chinthamani of the great Saint Thiruthakkar, or the rich beauties of the poem of Kambar ; we won't take up either the Sacred Kural, or the Great Story of Kongu Vel ; but we will enjoy the brimming beauty and philosophy of the Kali."

This delightful work was first edited very neatly with its old commentary, in 1887, by that great scholar and lover of Tamil who has done so much for the sake of the language, the late lamented Rao Bahadur C. W. Thamotharam Pillay, and, though priced at Three and a Half Rupees a copy only, was often given away by

him most generously at lower prices to all those who evinced a sincere love for Tamil but were too poor to pay the full price. This edition soon went out of print.

The next edition, a costly one, was printed in 1925 by my late lamented learned friend Mr. E. V. Anantharama Iyer, who edited also the text without the commentary.

This edition of the Kali by Mr. T. A. Kanakasabhapathy Mudaliar, being adapted to the means of all and easy to be comprehended, is a popular one, and is quite a different work altogether.

The paraphrase of the old commentary, which is generally as dark as the text itself, has been omitted, and a very easy and clear word-for-word paraphrase with minimum of latitude has been substituted. The violent shuffling of the words of the stanzas, which is one of the vices of the old learned commentary, has been very carefully avoided. The originality of interpretation of some of the hard passages of the text is another notable feature, and all, who feel the truth of Mill's famous dictum that genius can live only in an atmosphere of freedom, and that whatever crushes individuality is despotism which is everywhere the standing hindrance to human advancement, will welcome it surely. Real poetry, unlike the lines of versifiers, is often hard to paraphrase, and it is very gratifying to see the

spirited author tackling the difficulties honestly, and rendering every possible help by means of brief and judicious grammatical and other notes, to understand and appreciate the inimitable original. My scholarly friend, though young, never parades his knowledge by quoting profusely, or by quoting ridiculously even from later and far inferior works. His quotations are few, but they are apt, choice and sparkling. The get-up and typography of the book are bold and quite inviting. The punctuation and the removal of many of the hard *Sandhis* without any detriment to the music of the lines are a great help indeed: the stanzas thereby put on a very winning smile. To see the book is but to love it, to love the Kali, and to love and honour the noble language.

Mr. Mudaliar has my hearty thanks for his great labour of love. And it is my ardent wish and prayer that he may be able to print and give the world the rest of the Kali very soon.

ROYAPETTAH, MADRAS,
25-9-1937.

S. D. SARGUNAR,
Lecturer in Tamil, (Retired),
Madras Christian College

முகவுரை

'கல்வி வல்லார் கண்ட கலி', 'கற்றறிந்தார் சொல்லுங் கலி', 'கற்றறிந்தார் ஏத்துங் கலி' எனப் பலவாறு போற்றப் பெற்றதும், அகப்பொருளுக்குத் தலைசிறந்த இலக்கியமாய் இருப்பதும், நூற்றைம்பது கலிப்பாக்களைக் கொண்டதும் ஆகிய கலித்தொகை சங்க நூல்களுள் ஒன்று. இது கலிப் பாவால் தொகுக்கப்பட்டதாகலின், 'கலித்தொகை' என்னும் பெயர் பெற்றது. இந்நூலுள் அமைந்துள்ள கடவுள் வாழ்த் தையும், நெய்தற்கலியையும் நல்லந்துவனாரும், பாலைக்கலியைச் சேரமான் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக்கலியைக் கபிலரும், மருதக்கலியை மதுரை மருதன் இளநாகனாரும், முல்லைக்கலி யைச் சோழர் நல்லுருத்திரனாரும் இயற்றினர் என்பர். நெய் தற்கலியைப் பாடிய ஆசிரியர் நல்லந்துவனாரே இந்நூலைத் தொகுத்தனர் என்பர் பலர். பொருள், தொடர் முதலியவற் றின் நிலை நோக்கி நூற்றைம்பது கலியும் ஓர் ஆசிரியராலேயே இயற்றப்பெற்றிருத்தல் கூடும் எனக் கருதுவாரும் உளர்.

இதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய ஒரு வகை யான பொழிப்புரை உண்டு. அது தமிழறிவு பெரிதுமுடை யார்க்கன்றி ஏனையோர்க்குப் பெரிதும் பயன்படாமையானும், ஆசிரியரின் மனோபாவனைக்கு அரண் செய்யும் வகை பல இடங்களில் அமைந்திலாமையானும், இக்கலிகளை ஓதி ஓதி யான் பெறும் இன்பம் என்னனையாரும் பெறவேண்டும் என் னும் ஆசையானும் யானும் ஒரு விளக்கவுரை எழுதலாயி னேன். எனினும், பெரிதும் முயன்று முதலில் உரை எழுதி

உதவிய ஆசிரியர் நச்சினார்க்கினியர்க்கு என் தாழ்மையான வணக்கம் என்றும் உரியதாகுக.

இந்நூலுள் கூறப்பெறும் நிகழ்ச்சிகள் யாவும் உண்மையெனக் கொண்டு அக்காலப் பழக்க வழக்கங்களை ஆராயப் புகுதல் வீண் காலப் போக்கே. ஏனெனில், இல்லது இனியது நல்லதென நிறுத்திப் புலவர் இயற்றிய நூல்களுள் இஃது இல்லதன்பாற்படும்.

"'காட்சி' என்பது தலைமகன் தலைமகளைக் காண்டல். 'தலைமகன்' என்றும், 'தலைமகள்' என்றும் கூறிய இவர் யாரெனின், இல்லது இனியது நல்லது என்று புலவர் நாட்டிக் கூறிய மூன்றனுள் இல்லதாகிய புனைந்துரையால் தோன்றினாரென்க. இவரது இலக்கணம் யாதோவெனின், பிணி மூப்பு இறப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவுந் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையராய்ப் பொருவிறந்தாரென்ப" என்றார் பிறரும்.

நிகழக்கூடாததொன்றை நிகழ்கின்றதாகக் கூறி, மக்கள் மனத்தைப் பண்படுத்தி உயர்த்துவார் கவிக்கரசரே. அன்னோர்க்குத் துணை புரியவே அகப்பொருள் எழுந்தது.

அவ்வகப்பொருள் இலக்கணம் தனிப்பட்ட ஒரு குடும்பத்தின் தொடர்புடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறற்குத் துணை செய எழுந்ததன்று. இக்கூற்றின் உண்மையை அகப்பொருள் அமைப்பே நன்கு உணர்த்தும்.

குறிஞ்சி, மருதம், பாலை, முல்லை, நெய்தற்றிணைகளுக்குப் புணர்ச்சி, ஊடல், பிரிவு, இருத்தல், இரங்கல் உரிப்பொருளென்றும்; குறவர், உழவர், மறவர், இடையர், பரதர் மக்களென்றும்; பைந்திணை காத்தல், களைகட்டல், ஆறலைத்

தல், ஆநிரை மேய்த்தல், மீன் பிடித்தல் முதலியன தொழில் என்றும் அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றது. இதனால், ஐந்திணைகளுள் ஒன்று மற்றொன்றோடு தொடர் புடையதன்று என்பது நன்கு புலனாகும்.

உரிப்பொருளாம் புணர்ச்சி, ஊடல், பிரிவு, இருத்தல், இரங்கல் என்னும் உணர்ச்சிகள் ஐந்துமே மாந்தர் தம் வாழ்வில் பெறுவனவாமென நம் அறிஞர் கருதினர் போலும். சிற்சிலபோது கவிஞர் தம் கருத்துக்கள் விளக்கமுற ஒரு திணையின் முதற்கருஉரிப் பொருள்களுள் சில மற்றொரு திணையில் மயங்கவும் செய்யுள் செய்வர். அவரவர் திறமைக் கேற்ப அம்மயக்கமும் அழகு செய்யும்.

பண்டைநாட் கவிஞர் தம் கருத்திற்கியைந்த பொருளைக் கொள்ளுமாறு சொற்களை ஏவல் கொண்டனரேயன்றி அவற் றின் ஆட்சிக்கு அடிமைப்பட்டாரில்லை. இல்லையாயின், 'ஓம்பல்', 'நந்தல்' முதலிய சொற்களுக்கு மாறுபட்ட பொருள் இருத்தற்கு வழியில்லை. பின்னைப் புலவருள் பெரும்பாலோர் தம் கருத்தின்பொருட்டுச் சொற்களுக்கு வேறு பொருள் அளிக்கவோ சொற்களைப் படைக்கவோ ஆற்றலிலராய் நிகண்டுகட்கு அடிமைப்பட்டனர். உலகம் போற்றும் பெருங் கவிஞராம் ஜகப்பிரியர் நாடகங்களுக்கெனத் தனிப்பட்ட இலக்கண நூல்களும் அகராதிகளும் தோன்றியிருத்தலை இற்றைநாள் தமிழர் மறத்தல் ஆகாது.

ஆதலின், சங்கச் செய்யுட்களுக்கு உரை கூறுங்கால், கருத்தின் போக்கிற்கியையச் சில சொற்களுக்கு அகராதி களில் பொருள் இல்லையாயின், அகராதிப் பொருளுக்கியையப் பொருள்கூறி ஆசிரியர் கருத்துக்களைச் சிறைசெய்தல் பெருந் தவறாம். ஆன்றோர் கருத்துக்களை அறிதற்குத் துணைசெய்ய

எழுந்த கருவிகளில் அகராதி ஒன்று. இற்றைநாள் நமக்குக் கிடைத்துள்ள அகராதிகளில் பலபதங்களுக்கு நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர் கொண்ட பொருள்கூடக் காணப்பெறவில்லை.

நூல்களில் இடம் பெற்றுள்ள சொற்கள் யாவற்றிற்கும் ஆன்றோர் ஆட்சிக்கியையப் பொருள் கூறவல்ல நூல்கள் இல்லையாதலானும், இருக்க இயலாதாகலானும், மொழியின் திறத்தை முற்றிலும் கூற இயலாத இலக்கணத்திற்கும் அகராதிகட்கும் கல்வியாளர் தம்மை அடிமையாக்கிக்கொண்டு ஆன்மத் தூண்டுதலால் எழுந்த செய்யுட்களுக்குப் பொருள் கூற முற்படலாகாது. ஆதலின், யானும் சில சொற்களுக்குக் கவிஞரின் கருத்திற்கியையக் கருத்துப் பொருள் கூறியுள்ளேன்.

இந்நூலாசிரியர், ஊற்றென எழுந்த தம் உள்ளக் கிளர்ச்சிகட்கே உருவளித்தனரேயன்றி வாக்கியங்கள் எழுதினாரில்லை. வாக்கிய அமைப்பொன்றனையே பெரிதாகக் கருதும் புலவர்க்கு இந்நூற் செய்புட்கள் இன்பமளியா. பின்னும் மனோபாவனை அற்றவர் இந்நூலுள் எழுத்துக் கூட்டத்தைக் காண்பரேயன்றி வேறொன்றையும் காணார்.

(கலித்தொகையாகிய இந்நூல் பலதிறப்பட்ட ஓசை நயத்தால் இன்பச் சுவையை மக்கட்கு ஊட்டுதற்கென்றே எழுந்த கலிப்பாவினால் முற்றும் இயற்றப்பெற்றிருத்தலானும், மக்கள் மனத்தைப் பண்படுத்தி உயர்த்தவல்ல அகப்பொருள்பற்றி வருதலானும், எண்வகை வனப்புள் 'அழகு' என்னும் வனப்பைக்கொண்டு விளங்குதலானும், மனோ தத்துவத்தை நன்கு உணர்தற்குரிய கருவியாய் இருத்தலானும் அறிஞரால் பெரிதும் போற்றப்பட்டுவருகின்றது.

இந்நூலினைத் தமிழரும் பிறரும் ஓதியுணர்ந்து தனிப் பெருவாழ்வு எய்துமாறு நச்சினார்க்கினியர் உரையோடு முதன்முதல் அச்சிட்டு உதவிய தமிழ்த்தாயின் தவப்புதல்வர் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் ஆன்மா நிரந்தர அமைதியில் என்றும் நிலைநிற்பதாக !

அவர் பதிப்புச் செலவழிந்துவிடவே, பிரஸிடென்ஸி காலெஜ் தமிழ்ப் பேராசிரியராய் இருந்த உயர்திருவாளர் இ. வை. அனந்தராமையர் அவர்கள் 1925-ஆம் ஆண்டு ஒரு பதிப்பு வழங்கினார்கள்.

இன்று வெளிவரும் பாலைக்கலியின் விளக்கவுரை 1933-ஆம் ஆண்டு 'கலாநிலையம்' என்னும் அரிய தமிழ் வார வெளியீட்டில் வெளிவந்தது. அன்று எனக்கிருந்த அறிவிற் கேற்பத் தோன்றிய இஃது இன்றுள்ள என் அறிவிற்கேற்பப் பல திருத்தங்களைக் கொண்டிருக்கின்றது.

செய்யுள் யாப்பும், மெய்ப்பாடும் நச்சினார்க்கினியர் குறிப்பைப் பின்பற்றி எழுதப்பெற்றுள்ளன.

தமிழ் நாட்டின் தற்கால நிலையையொட்டி ஐந்நூறு பிரதிகளே அச்சிடப்பெற்றன.

கிறித்தவக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவரும், ஆரியம், ஆங்கிலம், ஆந்திரம், தமிழ் முதலிய மொழிகளில் பெரும்புலமை படைத்தவரும், அரிய தமிழ் நூல்களைப் பிறர்க்குப் போதிப்பதையே தம் காலப் போக்காகக் கொள்கின்றவரும், என் வாழ்வு நலம் பெறுதற்குரியன செய்துவருபவரும், என் ஆசிரியரும், இந்நூற்கு விளக்கவுரை எழுதும் வன்மையை என்னிடத்துத் தோற்றுவித்ததோடு பொருள் பொதிந்த முகவுரை எழுதி உதவியவரும் ஆகிய ஆசிரியர் ச. த. சற்குணர், பி. ஏ. அவர்கட்கு, அவர்தம்

அடித்தாமரைகளை வாழ்த்தி வணங்குவதல்லது கைம்மாருக ஏழையேன் யாது செய்யவல்லேன் !

இந்நூல் வெளி வருதற்கு உரியன செய்தவரும், பண்டைய தமிழ் நூல்களை வெளியிடுவதே தம் வாழ்வின் பயனெனக் கருதுபவரும், தமிழ் அறிஞரும் ஆகிய உயர்திருவாளர் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கட்கும், ஒப்புநோக்குதல் முதலிய அரிய உதவிகளைச் செய்தவரும், நட்பினர் ஆக்கத்தைத் தம் ஆக்கமாகக் கருதுபவரும், தமிழ்ப் புலமை பெரிதும் பெற்றவரும், என் நண்பரும் ஆகிய வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும், இந்நூல் தமிழ் நாட்டில் உலாவுதற்கு முதற்காரணராய் இருந்தவரும், பண்டைத் தமிழரின் அரிய இயல்களை அறிவதில் பெருவிருப்பினரும், என்பால் பேரன்புடையாரும் ஆகிய உயர்திருவாளர் ம. பா. கோவிந்த சிங்கு அவர்கட்கும், இந்நூலைத் தம் பத்திரிகையினின்றும் பெயர்த்து அச்சிட்டுக் கொள்ளுமாறு அனுமதி அளித்த 'கலாநிலைய'த்தின் ஆசிரியர் அவர்கட்கும் என் வணக்கம் உரியதாகுக.

சென்னை,
28—9—'37.

தை. ஆ. க.

கலித்தொகை மூலமும் விளக்கவுரையும்

கலி. 1

கடவுள் வாழ்த்து

முன்னிலைப் பரவல்

ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூறாமல் குறித்ததன்மேல் செல்லும் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி :

படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடுயர் அகலல்குல்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ !

மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணையெழில் அணைமென்றோள்
வண்டரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ !

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபாலம் ஆடுங்கால்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ !

எனவாங்கு,

பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
ஆணமில் பொருளெமக் கமர்ந்தனை ஆடி !

(தரவு)

ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூறாமல் குறித்ததன்மேல் செல்லும் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி :

ஆறு அறி அந்தணர்க்கு - (வேதத்திற்குரிய) ஆறு அங்கங்களை யும் அறியும் பிராமணர்க்கு, *அருமறை பல பகர்ந்து* - அரிய வேதங் கள் பலவற்றையும் அருளிச்செய்து, *தேறு நீர்* - தெளிந்த கங்கையை, *சடை கரந்து* - சடையிலே அடக்கி, *திரிபுரம் தீ மடுத்து* - முப்புரங் களில் தீயைச் செலுத்தி, *கூறாமல்* - வாக்கால் சொல்லப்படாமல், *குறித்ததன்மேல் செல்லும்* - (மனத்தால்) எண்ணுகின்ற எண்ணத் திற்கும் எட்டாமல் செல்லுகின்ற, *கடுங்கூளி* - விரைவினையுடைய பேயினது, *மாறா போர்* - தோற்றலில்லாத போரினைக்கொண்ட, *மணி மிடற்று எண் கையாய்* - நீல மணிபோலுங் கழுத்தையும் எட்டுக் கைகளையும் உடைய இறைவனே, *இனி கேள்* - இப்பொழுது (யான் கூறுவதைக்) கேள் :

அருமறைகளை அந்தணர்க்கு அருளிச்செய்தலும், கங்கையைச் சடையில் கரத்தலும், முப்புரங்களில் தீயைச் செலுத்தலும் ஆகிய வெளிப்படையான தொழில்களை இறைவன் செய்துள்ளானெனினும், வாக்கிற்கு எட்டாமல் இருத்தலோடு, நினைப்பவர் நினைப்பிற்கும் எட்டாமல் செல்கின்றவன் இறை வன் என்பார், 'கூறாமல் குறித்ததன்மேற் செல்லும் மணிமிடற்றெண் கையாய்' என்றார்.

'பகர்ந்து, கரந்து, மடுத்து, செல்லும் மணிமிடற்று எண்கையாய்' என்றும், 'கடுங்கூளி மாறாப்போர் மணிமிடற்று எண்கையாய் ' என்றும் கூட்டுக.

'கூறாமல் குறித்ததன்மேல் செல்லுங் கடுங்கூளி ' என்பதற்கு, ' சொல்லா மல் இறைவன் மனத்தால் குறித்த அப்பொருள்களின்மேல் போகின்ற விரை வினையுடைய பேய்' எனப் பொருள் கூறுவாரும் உளர்.

வேதத்திற்குரிய ஆறு அங்கங்களாவன:—நிருத்தம், வியாகரணம், சிட்சை, சந்தசு, சோதிடம், கல்பம் என்பன.

1. **நிருத்தம்** :—கடின பதங்களுக்குப் பொருள் கூறும் நூல். 2. **வியாகர ணம்** :—இலக்கண நூல். 3. **சிட்சை** :—பதங்களின் உச்சரிப்பையும் சுர பேதத்தையும் கூறும் நூல். 4. **சந்தசு** :—செய்யுள் இலக்கணத்தைக் கூறும் நூல். 5. **சோதிடம்** :—ஜோதிட நூல். 6. **கல்பம்** :—யாகம் முதலிய சடங்கு களுக்கு உரிய விதிகளைக் கூறும் நூல்.

மறையாவன:—இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நான்காம்.

இருக்குவேதம் :—அக்கி, வாயு முதலிய தேவர்களின் சொரூபங்களையும் குணங்களையும் விளக்கும் துதிகளைக் கொண்ட நூல்.

யஜுர்வேதம் :—யாகங்கள் செய்வதற்குரிய முறைகளையும் அவற்றின் பலன்களையும் கூறும் நூல்.

சாமவேதம் :—யாகங்களைச் செய்யும்பொழுது தேவர்களைச் சந்தோஷப் படுத்துவதற்காகவும், யாகம் செய்பவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காகவும், வீணைகானத்துடன் பாடிவந்த வேத மந்திரங்களின் தொகுதியைக் கொண்ட நூல்.

அதர்வணவேதம் :—போர்க்குரிய மார்க்கங்களையும், எதிரிகளைக் கொல்லவோ, வசீகரிக்கவோ, நோய்ப்படுத்தவோ செய்யக் கூடிய மந்திரங்களையும் கூறும் நூல்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், தைத்திரியம், பவுழியம், தலவகாரம், சாம வேதம் என மறை நான்கு என்பர்.

தைத்திரியம் :—கிருஷ்ணயஜுர் வேதப் பிரிவுகளில் ஒன்று. இதுவே தமிழ் நாட்டில் யஜுர் வேதமாகப் பயின்றுவந்தது என்பர்.

பவுழியம் :—இருக்குவேதத்தை உணர்த்தும் ஒரு வட சொல்லின் மரூஉ என்று கூறுவர்.

தலவகாரம் :—சாமவேதப் பிரிவுகளில் ஒன்று.

முன்னிலைப் பரவல் - கடவுளை முன்னிலைப்படுத்தித் துதித்தல்.

[**தரவு:**—கலிப்பாவிற்கு உறுப்பாய் முதலில் தரப்படுவது.]

(தாழிசை)

படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கோடுகோட்டி ஆடுங்கால் கோடுயர் அகலல்குல்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ !

படு பறை - (நின்கையில்) ஒலிக்கின்ற பறை, பல இயம்ப - பல ஓசைகளை உண்டாக்க, பல் உருவம் பெயர்த்து - பல வடிவங்களையும் சிதைத்து, நீ கொடுகொட்டி ஆடுங்கால் - நீ 'கொடுகொட்டி' என்னும் கூத்தை ஆடுகின்ற காலத்தில், கோடு உயர் - பக்கம் உயர்ந்த, அகல் அல்குல்-அகன்ற அல்குலினையும், கொடி புரை நுசுப்பினாளோ - கொடியையொத்த இடுப்பினையும் உடைய உமாதேவியோ, கொண்ட

சீர் தருவாள் - (தாளம் முடிந்துவிடும் காலத்தினைத் தன்னிடத்தே) கொண்ட சீரைத் தருவாள்!

எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடுதலின் 'கொடுகொட்டி' என்றார். முப்புரங்கள் தீப்பற்றி எரிதலைக் கண்டு இரக்கங் கொள்ளாது கைகொட்டி ஆடிய கொடுமையை நோக்கிக் 'கொடுகொட்டி' என்றார் என்று கூறுவாரும் உளர். 'கொடுங்கொட்டி' என்பது 'கொடுகொட்டி' என விகாரமாயிற்று என்பர் நச்சினார்க்கினியர். இது 'கொட்டி' எனவும்படும்.

மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணையெழில் அணைமென்தோள்
வண்டரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ!

மண்டு அமர் (முப்புராதிகளால் செய்யப்பட்ட) நெருங்கிச் செய்யும் போர், பல கடந்து - பல வென்று, மதுகையால் நீறு அணிந்து - அந்த வலியாலே (அப்பகைவர் வெந்து அவிந்த) சாம்பலை அணிந்து கொண்டு, பண்டரங்கம் ஆடுங்கால் - நீ 'பாண்டரங்கம்' என்னும் கூத்தை ஆடுகின்ற காலத்தில், பணை எழில் அணை - மூங்கிலின் அழகை மேற்கொண்ட, மென்தோள் - மெல்லிய தோள்களையுடைய, வண்டு அரற்றும் கூந்தலாளோ-வண்டுகள் ஒலிசெய்யும் கூந்தலையுடைய உமாதேவியோ, வளர் தூக்கு தருவாள் - (தாளத்து இடை) நிகழும் காலத்தினையுடைய தூக்கைத் தருவாள்!

'பாண்டரங்கம்' என்பது 'பண்டரங்கம்' என விகாரமாயிற்று. சிவபெருமான் வெண்ணீறணிந்து ஆடியதால் இக்கூத்துப் 'பாண்டரங்கம்' எனனும் பெயர் பெற்றது என்பர்.

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபாலம் ஆடுங்கால்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ!

கொலை உழுவை - கொலைத்தொழிலையுடைய புலியின், தோல் அசைஇ - தோலை உடுத்து, கொன்றை தார் - கொன்றைப் பூவால் செய்த மாலை, சுவல் புரள - சுவல்மேல் அசைய, தலை அம் கை கொண்டு-(பிரமனது) தலையை அழகிய கையிலே கொண்டு, நீ காபாலம் ஆடுங்கால் - நீ 'காபாலம்' என்னும் கூத்தை ஆடுகின்ற காலத்தில்,

முலை அணிந்த முறுவலாளோ - முல்லையரும்புகளைப் போன்ற பற்களை யுடைய உமாதேவியோ, *முன் பாணி தருவாள்* - (ஒரு தாளத்தின்) முதலெடுக்கும் காலத்தினையுடைய பாணியைத் தருவாள்!

‘முல்லை’ என்பது இடைகுறைந்து ‘முலை’ என நின்றது.

சுவல் - தோளின் மேற்பகுதி.

மூன்று தாழிசைகளிலும் வந்த ஐயவினா ஓகாரங்கள் பிரித்துக் கூட்டப் பெற்றன.

சீர், தூக்கு, பாணி என்பன தாளப்பகுதிகள்.

[**தாழிசை**—கலிப்பாவின் இரண்டாவது உறுப்பாகும். இது பெரும்பாலும் தாழ்ந்த ஓசையை உடையதாதலின், தாழிசை என்னும் பெயர் பெற்றது. கலிப்பாவின் உறுப்புக்களில் தாழிசையே சிறந்து நிற்கும். இஃது **இடைநிலைப்பாட்டு** எனவும்படும். ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வரும் இடைநிலைச் செய்யுட்கள் பாடிப்பாடி மிகவும் இன்புறத்தக்கன.]

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று சொல்லும்படியாக,

ஆங்கு - அசை.

[**தனிச்சொல்**—பெரும்பாலும் தாழிசையின் பின்னே வந்து நிற்கும் ஓர் உறுப்பு.]

(சுரிதகம்)

பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
ஆணமில் பொருளெமக் கமர்ந்தனை ஆடி!

பாணியும் தூக்கும் சீரும் என்றிவை—(அழித்தல் தொழிலை நீ நிகழ்த்துகின்ற காலங்களிலே) பாணி, தூக்கு, சீர் என்று சொல்லப் பட்ட இவற்றை, *மாண் இழை அரிவை காப்ப ஆடி* - மாட்சிமைப் பட்ட அணிகளை அணிந்த உமாதேவி காக்கும்படி ஆடி, *ஆணம் இல் பொருள் எமக்கு அமர்ந்தனை* - அன்பில்லாத பொருள்களாகிய எமக் காக (ஒரு வடிவுகொண்டு வந்து இவ்வுலகத்தில்) தங்கினாய்! (நின் திரு வருள் இருந்தவாறு என்னே!)

[**சுரிதகம்**—வெண்பாவால் அல்லது ஆசிரியப்பாவால் வரும். நேரே ஓடும் நீர், குழியாவது மேடாவது சார்ந்த இடத்தில் சுரிந்து அல்லது சுழிந்து ஓடும்.

அதுபோல இதுவரையிலும் கலியோசையால் நடந்த செய்யுள் வெண்பா அடிகள் அல்லது ஆசிரிய அடிகள் கொண்டு அவற்றிற்குரிய ஓசைபெற்றுச் சரிந்து நடந்து முடிவதால் இப்பெயர் பெற்றது என்பர் சிலர். 'சுவரிதகம் என்பது சுரிதகம் என நின்றது' என்பர் பிரயோக விவேக நூலார்.]

ஒரு தாளத்திற்கே பாணி, தூக்கு, சீர் என்னும் மூன்றும் உளவேனும், அவற்றுள் கொடுகொட்டிக்குச் சீரும், பாண்டரங்கத்திற்குத் தூக்கும், காபாலத்திற்குப் பாணியும் மிகுதி வகையால் சிறந்தமைபற்றி அவற்றையே அவைகளுக்கு உரியனவாகக் கூறினர்; செய்யுளில் முறை மாறி நின்றனவேனும் அவை நிகழும் முறைமையைச் சுரிதகத்துப் பாணியுந் தூக்கும் சீரும் என முறைப்படுத்தினர் என்னுங் கருத்துப்படக் கூறினர் நச்சினார்க்கினியர்.

[ஆசிரியர் தாம் கூறப்போகும் செய்தியைக் கேட்குமாறு இறைவனை விளித்து, 'கொடுகொட்டி ஆடுங்கால் கொடிபுரை நுசுப்பினளோ சீரைத் தருவாள்! பாண்டரங்கம் ஆடுங்கால் வண்டரற்றுங் கூந்தலாளோ தூக்கைத் தருவாள்! காபாலம் ஆடுங்கால் முலையணிந்த முறுவலாளோ பாணியைத் தருவாள்!' என மும்முறை ஐயத்தொடு வினவி, இறுதியில், 'பாணியுந் தூக்குஞ் சீரும் மாணிழை அரிவை காப்ப ஆடி அமர்ந்தனை' எனக் கூறினமை உற்றுநோக்குவார் உள்ளத்தே, ஒரு பேரின்பத்தை உண்டுபண்ணும்.]

[இஃது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகவொருபோது.]

பாலைக்கலி

கலி. 2 தோழி கூற்று

தன்னிடம் வந்து யாசித்தவர்க்குக் கொடுக்கப் பொருள் இல்லாமையால், தலைவன் தலைவியைப் பிரிந்து, பொருள் தேட எண்ணினான். இதனை உணர்ந்த தோழி, அவனை அடைந்து, "தலைவ, தலைவியின் மார்பை நீ பிரியாதிருத்தலே பொருளாம்; பிரிந்து போய்ப் பெறும் பொருள் பொருளன்று" என்று கூறி, அவன் போக்கை நீக்கினாள். பின்பு அவள் வந்து அச்செய்தியைத் தலைவிக்குக் கூறுகின்றாள் :

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்
சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குநர்
ஆறுகெட விலங்கிய அழலவிர் ஆரிடை
மறப்பருங் காதல் இவளீண் டொழிய
இறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய!

தொலைவாகி இரந்தோர்க்கொன் றீயாமை இழிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
நிலைஇய கற்பினாள் நீர்நீப்பின் வாழாதாள்
முலையாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை?

இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
தொல்லியல் வழாஅமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை?

இடனின்றி இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை ?

எனவிவள்,

புன்கண்கொண் டினையவும் பொருள்வயின் அகறல்
அன்பன் றென்றியான் கூற அன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைதல் அஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே !

(தரவு)

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,
அடங்காதார் மிடல்சாய, அமரர்வந் திரத்தலின்,
மடங்கல்போல், சினைஇ, மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு, முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால், முகம்போல ஒண்கதிர் தெறுதலின்,
சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற் றுதிர்வனபோல், வரைபிளந், தியங்குநர்
ஆறுகெட விலங்கிய அழலவிர் ஆரிடை
மறப்பருங் காதல் இவளீண் டொழிய,
இறப்பத் துணிந்தனிர், கேண்மின்மற் றைஇய !

தொடங்கற்கண் - (படைப்புக் காலமாகிய) முதலில், தோன்றிய- உண்டாகிய, முதியவன் முதலாக - முன்னவனாகிய பிரமன் முதலாக, அமரர் - தேவர், அடங்காதார் - (கட்டுக்கு) அடங்காதவராகிய அசுரரது, மிடல் சாய - வலிமை கெட, வந்து இரத்தலின் - (தன்னிடம்) வந்து வேண்டிக்கொண்டதால், மடங்கல் போல் சினைஇ - இயமனைப் போலக் கோபித்து, மாயம் செய் அவுணரை - வஞ்சகத்தைச் செய்து வந்த அரக்கரை, கடந்து அடு முன்பொடு - (வஞ்சியாது) எதிர்நின்று கொல்லும் வலிமையோடு, முக்கண்ணான் மூவெயிலும் உடன்றக்கால்- மூன்று கண்களையுடைய சிவபெருமான் மூன்று மதில்களையும் கோபித்தபொழுது, முகம் போல-(அப்பெருமானது) முகம் (சுட்டாற்)

போல, ஒள் கதிர் தெறுதலின் - ஒளி பொருந்திய சூரியன் சுடுதலால், சீறு அருங்கணிச்சியோன் - (தன்னைப்போலப் பிறிதொன்றும்) சீறுதற்கு இயலாத 'கணிச்சி' என்னும் ஆயுதத்தையுடைய அச்சிவபெருமானது, சினவலின்-கோபத்தால், அ எயில் - அம்மதில்கள், ஏறுபெற்று உதிர்வனபோல் - அழிதலைப்பெற்று உதிர்வன போல, வரை பிளந்து - மலைகள் வெடித்துவிழுந்து, இயங்குநர் ஆறு கெட - செல்கின்றவர்க்கு (உரிய) வழி கெடும்படி, விலங்கிய - தடுத்த, அழல் அவிர் ஆர் இடை - வெம்மை வீசும் (நடத்தற்கு) அருமையான வழியிலே, மறப்பருங்காதல் இவள் ஈண்டு ஒழிய - (உம்மை) மறக்க முடியாத அன்புள்ள இவள் இங்கே இறந்துபோகும்படி, இறப்ப துணிந்தனிர் - போகத் துணிந்தீர் ; மற்று ஐய - அப்படிப் போகத் துணிந்த பெரியீர், கேண்மின்-நான் சொல்வதைச் சிறிது கேட்பீராக!

'ஒண்கதிர் தெறுதலின் வரை பிளந்து இயங்குநர் ஆறு கெட விலங்கிய அழலவிர் ஆரிடை இறப்பத் துணிந்தனிர்' எனக் கூட்டி வினைமுடிபு செய்க.

'கணிச்சியைக் குந்தாலி என்றும், மழு என்றும் சொல்லுவர்.' (புறம். 42. உரை.)

தொடங்கற்கண் என்பதிலுள்ள 'கண்' என்பது காலத்தைக் காட்டியது.

ஐய கேண்மின் - ஒருமை பன்மை மயக்கம்.

(தாழிசை)

தொலைவாகி இரந்தோர்க்கொன் றீயாமை இழிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ?
நிலைஇய கற்பினாள் நீர்நீப்பின் வாழாதாள்,
முலையாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை?

நிலைஇய கற்பினாள் - நிலை பெற்ற கற்பினை உடையவளும், நீர் நீப்பின் வாழாதாள் நீர் பிரிவீராணுல் உயிர்விடுபவளுமாகிய தலைவியின், முலை ஆகம் பிரியாமை-முலையினையுடைய மார்பைப் பிரியாதிருத்தலே, பொருளாயின் அல்லதை - (சிறந்த) பொருளாயின் அல்லாமல், தொலைவாகி இரந்தோர்க்கு - (தம்மிடத்திலிருந்த பொருள்கள் எல்லாம்) நீங்குதல் பெற்று வந்து யாசித்தவர்க்கு, ஒன்று ஈயாமை இழிவு என - சிறிதும் கொடாதிருத்தல் இழிவு என்று எண்ணி, மலை இறந்து - மலைகளைக் கடந்து, செயல் சூழ்ந்த பொருள் - தேடுதற்கு நினைத்த பொருள், பொருள் ஆகுமோ - பொருளாகக் கருதப்படுமோ?

இல்லென, இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ?
தொல்லியல் வழாஅமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை?

தொல் இயல் வழாஅமை-பழைய தன்மையாகிய (உழுவல்) அன்பு வழுவாதிருத்தலை, துணை என - (தனக்குச் சிறந்த) துணையென்று, புணர்ந்தவள் - கூடியவளது, புல் ஆகம் பிரியாமை - அணைதற்குரிய மார்பைப் பிரியாதிருத்தலே, பொருளாயின் அல்லதை-(சிறந்த) பொருளாயின் அல்லாமல், இல் என இரந்தோர்க்கு - (எமக்குப் பொருள்) இல்லை என்று (வந்து கூறி) யாசித்தவர்க்கு, ஒன்று ஈயாமை இழிவு என - சிறிதும் கொடாதிருத்தல் இழிவு என்று எண்ணி, கல் இறந்து - மலைகளைக் கடந்து, செயல் சூழ்ந்த பொருள் - தேடுதற்கு நினைத்த பொருள், பொருள் ஆகுமோ-பொருளாகக் கருதப்படுமோ?

உழுவலன்பு - இடைவிடாது தொடர்ந்த அன்பு. 'உழுவல் எழுமையுந் தொடர்ந்த அன்புரைக்கும்.'

புல்லாகம் - சிறிய மார்பு எனக் கூறினும் அமையும்; நூல் நுழைவதற்கும் இடமின்றி நாளும் புடைபருத்த தனமுடைமையால் ஆகம் சிறுத்துக் காட்டிற்று.

இடனின்றி, இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை?

வடமீன் போல் தொழுது ஏத்த - அருந்ததியைப்போல எல்லாரும் தொழுது வாழ்த்தும்படி, வயங்கிய கற்பினாள் - விளங்கிய கற்பினையுடையவளது, தட மென்தோள் பிரியாமை - அகன்ற மெல்லிய தோள்களைப் பிரியாதிருத்தலே, பொருளாயின் அல்லதை - (சிறந்த) பொருளாயின் அல்லாமல், இடன் இன்றி இரந்தோர்க்கு - (இல் வாழ்க்கை நடத்துதற்கு) வழியின்றி யாசித்தவர்க்கு, ஒன்று ஈயாமை இழிவு என - சிறிதும் கொடாதிருத்தல் இழிவு என்று எண்ணி, கடன் இறந்து - காடுகளைக் கடந்து, செயல் சூழ்ந்த பொருள் - தேடுதற்கு நினைத்த பொருள், பொருள் ஆகுமோ - பொருளாகக் கருதப் படுமோ?

'இடம்', 'கடம்' என்பன இறுதிப்போலி பெற்று 'இடன்', 'கடன்' என வந்தன.

இதனால் தலைவனுக்கு அசைவு தோன்றிற்று.

(தனிச்சொல்)

எனவிவள்,

இவள் - (என் தலைவியாகிய) இவள்,

என - அசை.

(சுரிதகம்)

புன்கண்கொண் டினையவும், பொருள்வயின் அகறல்
அன்பன், றென்றியான் கூற, அன்புற்றுக்,
காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத், தாழ்புநின்
தொல்கவின் தொலைதல் அஞ்சி, யென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே !

புன்கண் கொண்டு இனையவும் - (ஈண்டுப்) பொலிவழிந்த கண் கொண்டு வருந்தவும், பொருள்வயின் அகறல் - நீர் பொருள் தேடப் பிரிதல், அன்பு அன்று என்று யான் கூற - அன்பன்று என்று யான் சொல்ல, அன்புற்று - இரங்கி, காழ்வரை நில்லா - பரிக்கோலால் குத்தவும் தன் நெறியில் நில்லாத, கடுங்களிறு ஒருத்தல் - கொடிய ஆண் யானை, யாழ்வரை தங்கியாங்கு - (மெல்லிய) யாழ் ஓசையிலே (கட்டுண்டு) நின்றாற்போல, தாழ்பு - தாழ்ந்து, நின் தொல் கவின் - உனது பழமையான (இயற்கை) அழகு, தொலைதற்கு அஞ்சி - கெடு தற்குப் பயந்து, காதலோர் - தலைவர், என் சொல்வரை தங்கினர் - என்னுடைய சொற்களுக்குக் கட்டுப்பட்டுத் தங்கினர் !

'களிறு' என்பது சாதியையும், 'ஒருத்தல்' என்பது ஆணையும் உணர்த்தி நின்றன.

யாழ் - ஆகுபெயர்.

யாழிசை தோழியின் சொற்களுக்கும் யானை தலைவனுக்கும் உவமை.

ஈண்டுத் தலைவனுக்கு அருளும் தலைவிக்குப் புணர்வு என்னும் உவகையும் உண்டாயின.

[இது முதல் நிலை ஒத்தாழிசைக் கலிப்பா.] (1)

கலி. 3

பொருள் தேடுதற்காகத் தலைவியைப் பிரியப்போவதாகத் தலைவன் தோழிக்குக் கூறினான். தோழி அச்செய்தியைத் தலைவிக்குக் கூற, அவள் பெரிதும் துன்பத்தில் ஆழ்ந்தாள். அதனைக் கண்ட தோழி, தலைவனை அடைந்து, தலைவியின் துன்பத்தை எடுத்துக்கூறிப் பிரியாதிருக்கும்படி அவனை வேண்டினாள். அவளுடைய சொற்களைக் கேட்டும் அவன் பிரிவதிலேயே நோக்கமுடையவனாய் இருந்தான். அதனால், தோழி மனம் நொந்து, "நீர் போகும் காடே நும்மைப் போகவிடாமல் தடுக்கும்" என்று சொல்லி, அவன் போக்கை நீக்க முயல்கின்றாள்.

அறனின்றி அயல்தூற்றும் அம்பலை நாணியும்
வறன்நீந்தி நீசெல்லும் நீளிடை நினைப்பவும்
இறைநில்லா வளையோட இதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு புல்லென்ற நுதலிவள்
விறல்நலன் இழப்பவும் வினைவேட்டாய் கேளினி!

உடையிவள் உயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை;
கடைஇய ஆற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன!

வல்லைநீ துறப்பாயேல் வகைவாடும் இவளென
ஒல்லாங்கியாம் இரப்பவும் உணர்ந்தீயாய் ஆயினை
செல்லும்நீள் ஆற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன!

பிணிபுநீ விடல்சூழின் பிறழ்தரும் இவளெனப்
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வாய் ஆயினை;
துணிபுநீ செலக்கண்ட ஆற்றிடை அம்மரத்
தணிசெல வாடிய அந்தளிர் தகைப்பன!

எனவாங்கு,

யாம்நிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை;
ஆனாது இவள்போல் அருள்வந் தவைகாட்டி
மேல்நின்று மெய்கூறும் கேளிர்போல் நீசெல்லும்
கானம் தகைப்ப செலவு.

(தரவு)

அறனின்றி அயல்தூற்றும் அம்பலை நாணியும்
வறன்நீந்தி நீசெல்லும் நீளிடை நினைப்பவும்
இறைநில்லா வளையோட இதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு புல்லென்ற நுதலிவள்
விறல்நலன் இழப்பவும் வினைவேட்டாய் கேஎளினி !

அறன் இன்றி - நீதி இன்றி, அயல் தூற்றும் - அண்டையிலுள்ள பெண்கள் பரப்பும், அம்பலை நாணியும் - பழிச் சொல்லுக்கு வெட்கப்படுதலாலும், வறன் நீந்தி - வறண்ட நிலத்தைக் கடந்து, நீ செல்லும் நீள் இடை நினைப்பவும் - நீ போகும் நீண்ட வழியை நினைப்பதாலும், இறை நில்லா வளை ஓட-முன்கையில் நில்லாமல் வளை கழலவும், இதழ் சோர்பு பனி மல்க - இமையினின்று (முன்னர்ப் பெருகி) வீழ்ந்து பின்னர் இமை நிறையும்படி கண்ணீர் பெருகவும், பொறை நில்லா நோயோடு - பொறுக்கும் அளவில் நில்லாத காம நோயாலே, புல் என்ற நுதல் இவள்-பொலிவழிந்த நெற்றியையுடைய இவள், விறல் நலம் இழப்பவும் - தனது வெற்றியையுடைய நலத்தை இழக்கவும், வினை வேட்டாய் - போரை விரும்பினவனே, இனி கேஎள் - இப்பொழுது (யான் கூறுவதைக்) கேள் !

அறன் - (அறம்) மகரத்திற்கு னகரம் போலியாக வந்தது.
'ஓடவும், மல்கவும், இழப்பவும் வினைவேட்டாய் கேள்' எனக் கூட்டுக.
ஓட, மல்க என்னும் ஈரிடத்தும் உம்மைகள் தொக்கன.

(தாழிசை)

உடையிவள் உயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை ;
கடைஇய ஆற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன !

உடை இவள் - (நின்னை உயிராக) உடைய இவள், நீ நீப்பின் உயிர் வாழாள் என - நீ பிரிவாயானால் உயிரோடு இருக்கமாட்டாள் என்று, பல இடைகொண்டு யாம் இரப்பவும் - பல சொற்களைக் கொண்டு யாம் வேண்டிக்கொள்ளவும், எம கொள்ளாய் ஆயினை - எம்முடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனாய் ; கடைஇய ஆற்றிடை - (ஆனால் நீ நின் நெஞ்சைச்) செலுத்திய வழியிலே, நீர் நீத்த வறுஞ்சுனை - நீரில்லாத பாழ்பட்ட சுனைகளிலேயுள்ள, அடையொடு

வாடிய அணி மலர் - இலைகளோடு வாடிய அழகிய மலர்கள், தகைப்பன - (நின்னைப் போகவிடாமல்) தடுப்பன ஆகும் !

வல்லைநீ துறப்பாயேல் வகைவாடும் இவளென
ஒல்லாங்கியாம் இரப்பவும் உணர்ந்தீயாய் ஆயினை;
செல்லும்நீள் ஆற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன !

வல்லை நீ துறப்பாயேல் - விரைவிலே நீ நீங்குவாயானால், இவள் வகை வாடும் என - இவள் உறுப்புக்கள் கெடுமென்று, ஒல்லாங்கு யாம் இரப்பவும் - (நினக்குப்) பொருந்தும் வழியிலே யாங்கள் வேண்டிக்கொள்ளவும், உணர்ந்தீயாய் ஆயினை - (இவள் வருத்தத்தை) அறியாதவனாய் ; செல்லும் நீள் ஆற்றிடை - (ஆனால்) நீ போகும் நீண்ட வழியில், சேர்ந்து எழுந்த மரம் வாட - தாம் சேர்ந்து படர்ந்த மரம் வாடியதால், புல்லுவிட்டு இறைஞ்சிய - அதனைப் பற்றுதலைக் கைவிட்டுச் சிதறிய, பூங்கொடி - மலர்க்கொடிகள், தகைப்பன - (நின்னைப் போகவிடாமல்) தடுப்பனவாகும் !

பிணிபுநீ விடல்சூழின் பிறழ்தரும் இவளெனப்
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வாய் ஆயினை ;
துணிபுநீ செலக்கண்ட ஆற்றிடை அம்மரத்
தணிசெல வாடிய அந்தளிர் தகைப்பன !

பிணிபு - (இவளோடு) சேர்ந்து இருத்தலை, நீ விடல் சூழின் - நீ கைவிடக் கருதுவாயானால், பிறழ்தரும் இவள் என - இறந்துவிடுவாள் இவள் என்று, பணிபு வந்து இரப்பவும் - தாழ்ந்து வந்து (யாங்கள்) வேண்டிக்கொள்ளவும், பல சூழ்வாய் ஆயினை - (போருக்குச் செல்லப்) பலவற்றையும் எண்ணுபவனாய் ; நீ துணிபு செல கண்ட ஆற்றிடை - (ஆனால்) நீ (போதற்கு மனத்தால்) நிச்சயித்துக் கண்டு வைத்திருக்கும் வழியில், அ மரத்து அணி செல வாடிய அம் தளிர் - முற்கூறிய மரத்தின் அழகு போகும்படி வாடிக் கிடக்கும் அழகிய தளிர்கள், தகைப்பன - (நின்னைப் போகவிடாமல்) தடுப்பனவாகும் !

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று.

ஆங்கு - அசை.

'(சுரிதகம்)

யாம்நிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை ;
ஆனு திவள்போல் அருள்வந் தவைகாட்டி
மேல்நின்று மெய்கூறும் கேளிர்போல் செல்லும்
கானம் தகைப்ப செலவு.

யாம் நின் கூறவும் - யாங்கள் நினக்குப் (பலவற்றைச்) சொல்லவும், எம கொள்ளாய் ஆயினை - எம்முடைய வார்த்தைகளை (மனத்தில்) கொள்ளாதவனானாய்; ஆனாது இவள்போல்-(இனி) இடைவிடாது இவளைப் போல, அருள் வந்தவை காட்டி - (கண்டார்க்கு) அருள் வருவதற்குக் காரணமானவற்றைக் காட்டி, மேல் நின்று மெய் கூறும் கேளிர் போல் - (உனக்கு) மேலாய் நின்று உண்மைகளைக் கூறும் உறவினர்போல, நீ செல்லும் கானம் செலவு தகைப்ப - நீ போகின்ற காடுகள் (உனது) செல்கையைத் தடுப்பனவாகும்.

இதனால் தோழிக்கு அச்சமும் தலைவனுக்கு இழிவும் பிறந்தன.
[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா] (2)

கலி. 4

'பொருள் தேடப் போகின்றேன்' என்று தலைவன் கூறக் கேட்ட தோழி, "நீர் புணர்ச்சிக் காலத்தில் நடத்திய செயல்களால் நுமது எண்ணத்தைத் தலைவி அறிந்து பெரிதும் வருந்துகின்றாள். பின்னும் நீர் பிரிவீரானால் அவள் இறந்தேவிடுவாள். ஆதலினால், நீர் பிரிந்து போதலை ஒழிவீராக" எனக் கூறுகின்றாள்.

வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கின்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்கும் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை
வெள்வேல் வலத்திர் பொருள்தரல் வேட்கையின்
உள்ளினிர் என்ப தறிந்தனள் என்தோழி !

காழ்விரி கவையாரம் மீவரும் இளமுலை
போழ்திடைப் படாஅமல் முயங்கியும் அமையாரென்
தாழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை எவன்கொல் அறியேன் என்னும்!

முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறும் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனவுரைத்தும் அமையாரென்
ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர்
உள்ளுவ தெவன்கொல் அறியேன் என்னும்!

நுண்ணெழில் மாமைச் சுணங்கணி ஆகந்தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையாரென்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொல் அறியேன் என்னும்!

எனவாங்கு,

கழிபெரு நல்கலொன் றுடைத்தென என்தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள் ஒருநாள்நீர்
பொழுதிடைப் படீப்பின் வாழ்வாளோ
ஒழிகினிப் பெருமநின் பொருட்பிணிச் செலவே!

வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கின்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்கும் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை
வெள்வேல் வலத்திர் பொருள்தரல் வேட்கையின்
உள்ளினிர் என்ப தறிந்தனள் என்தோழி !

வலி முன்பின் - மிக்க பலத்தினால், வல் என்ற யாக்கை - உறுதியான உடம்பையும், புலி நோக்கின் - புலியின் தோற்றத்தினையும் கொண்ட, சுற்று அமை வில்லர் - சுற்றுக்கள் பொருந்திய வில்லையுடையவரும், சுரி வளர் பித்தையர் - (நுனி) சுருண்டு வளர்ந்த மயிரினையுடையவரும் ஆகிய, அற்றம் பார்த்து அல்கும்-சமயம் பார்த்து மறைந

திருக்கும், கடுங்கண் மறவர் - அஞ்சாமையையுடைய மறவர், தாம் கொள்ளும் பொருள் - தாம் அடைதற்கு (ஏற்ற) பொருளை, வம்பலர் இலர் ஆயினும் - வழிப்போக்கர் (தம்மிடத்து) இல்லாதவராயினும், துள்ளுநர் காண்மார் - (அவர்) துடித்துச் சாகின்றவராதலைக் காணும் பொருட்டு, தொடர்ந்து உயிர் வௌவலின் - தொடர்ந்துபோய் (அவர்) உயிரைக் கைக்கொள்ளுதலினால், புள்ளும் வழங்கா - பறவைகளும் சஞ்சரியாத, புலம்பு கொள் ஆர் இடை - தனிமையைக் கொண்ட (செல்வதற்கு) அருமையாகிய வழியை, வெள் வேல் வலத்திர் - வெண்மையான வேலை வலக்கையில் உடையீராய், பொருள் தரல் வேட்கையின் - பொருள் தேடுதலில் உள்ள ஆசையால், உள்ளினிர் என்பதை - நினைத்தீர் என்பதை, என் தோழி அறிந்தனள் - என் (தலைவியாகிய) தோழி அறிந்துகொண்டாள் !

'ஆரிடை உள்ளினிர்' எனக் கூட்டுக.

முன்பு - வலிமை.

சுற்று - வில் அழகாகத் தோன்றுவதற்காகவும், உறுதியாக இருப்பதற்காகவும் அமைக்கப்படும் கட்டுக்கள்.

(தாழிசை)

காழ்விரி கவையாரம் மீவரும் இளமுலை
போழ்திடைப் படாஅமல் முயங்கியும் அமையாரேன்
தாழ்கதுப் பணிகுவர் காதலர் ; மற்றவர்
சூழ்வதை எவன்கொல் அறியேன் என்னும் !

காழ் விரி - முத்து வடங்கள் விரிந்த, கவை ஆரம் - (கழுத்து) அகத்திலிட்ட மாலையானது, மீ வரும் - மேலே அசையும், இள முலை - இள முலைகளை, போழ்து இடை படாஅமல் - (தழுவாத) காலம் (சிறிதும்) இடையிலே உண்டாகாமல், முயங்கியும் - தழுவியும், அமையார் - (ஆசை) அடங்காதவராய், காதலர் - அன்புடைய தலைவர், என் தாழ் கதுப்பு - எனது (அவிழ்ந்து) தொங்கிய கூந்தலை, அணிகுவர் - அழகாக முடிப்பர் ; மற்று - அப்படிச் செய்கின்ற செயலால், அவர் சூழ்வதை எவன்கொல் - அவர் நினைக்கின்ற காரியம் யாதோ, அறியேன் என்னும் - உணரேன் என்று கூறுகின்றாள்!

முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறும் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனவுரைத்தும் அமையாரேன்

ஒள்ளிழை திருத்துவர் காதலர் ; மற்றவர்
உள்ளுவ தேவன்கொல் அறியேன் என்னும் !

முள் உறழ் முளை - முள்ளை ஒத்த (நாணல்) முளையைப் போன்ற, எயிற்று அமிழ்து ஊறும் - பற்களிலிருந்து அமுதம் போலச் சுரக்கின்ற, தீ நீரை - (வாயில் ஊறும்) இனிய நீரை, கள்ளினும் மகிழ் செய்யும் - கள்ளைக்காட்டிலும் இன்பத்தைக் கொடுக்கும், என உரைத்தும் - என்று கூறியும், அமையார் - (ஆசை) அடங்காதவராய், காதலர் - அன்புடைய தலைவர், என் ஒள் இழை-எனது ஒளி பொருந்திய அணிகளை, திருத்துவர் - (புணர்ச்சியால் குலைந்த நிலைமையிலிருந்து) திருத்தி அமைப்பர் ; மற்று - அப்படிச் செய்கின்ற செயலால், அவர் உள்ளுவது எவன்கொல் - அவர் நினைக்கின்ற காரியம் யாதோ, அறியேன் என்னும் - உணரேன் என்று கூறுகின்றாள் !

நுண்ணெழில் மாமைச் சுணங்கணி ஆகந்தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையாரென்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் ; மற்றவர்
எண்ணுவ தேவன்கொல் அறியேன் என்னும் !

நுண் எழில் - நுட்பமான அழகினையும், மாமை - மாந்தளிர் போன்ற நிறத்தினையும் கொண்ட, சுணங்கு அணி ஆகம் - தேமலை அலங்காரமாகப்பெற்ற (என்) மார்பு, தம் கண்ணொடு தொடுத்(த)து என - தம் கண்களோடு கட்டினது போன்று, நோக்கியும் - (அதைக் கண்ணிமையாமல்) பார்த்தும், அமையார் - (ஆசை) அடங்காதவராய், காதலர் - அன்புடைய தலைவர், என் ஒள் நுதல் - எனது ஒளி பொருந்திய நெற்றியை, நீவுவர் - (புணர்ச்சியால் உண்டாகிய வியர்வை நீங்கும்படி) துடைப்பர் ; மற்று - அப்படிச் செய்கின்ற செயலால், அவர் எண்ணுவது எவன்கொல் - அவர் நினைக்கின்ற காரியம் யாதோ, அறியேன் என்னும் - உணரேன் என்று கூறுகின்றாள் !

‘தொடுத்தது என’ என்பது ‘தொடுத்தென’ என விகாரமாயிற்று. இதனால் தலைவிக்கு ஆராய்ச்சி பிறந்தது.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

கழிபெரு நல்கலொன் றுடைத்தென என்தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள் ஒருநாள்நீர்
பொழுதிடைப் படநீப்பின் வாழ்வாளோ?
ஒழிகினிப் பெருமநின் பொருட்பிணிச் செலவே!

கழி பெரு நல்கல் - (புணர்ச்சிக்குப் பின்பு நீர் காட்டிய) மிகப் பெரிய அன்பு, ஒன்று உடைத்து என - (பிரிவு என்னும்) ஒரு கருத்தை உடையது என்று, என் தோழி - எனது (தலைவியாகிய) தோழி, அழிவொடு கலங்கிய எவ்வத்தள் - (நெஞ்சு) அழிவால் கலங்கிய துன்பமுடையவளாயிருக்கின்றாள்; ஒரு நாள் - ஒரு நாளினது, பொழுது - (ஒரு) வேளை, நீர் இடைப்பட நீப்பின் - நீர் (கூடுதல்) நடுவில் விட்டுப்போகும்படி பிரிவீரானால், வாழ்வாளோ - (தலைவி) உயிரோடு இருப்பாளோ? பெரும - பெருமையுடைய தலைவனே, நின் பொருள் பிணி - நின்னுடைய பொருளாசையாகிய நோயால், செலவு - செல்லுதல், இனி ஒழிக - இப்பொழுது நீங்குவதாக!

இதனால் தலைவனுக்கு இழிவு பிறந்தது.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (3)

கலி. 5

தலைவன் பொருள் தேடும்பொருட்டுப் பிரியப்போவதை அறிந்த தோழி அவனை அடைந்து, " நீர் கடத்தற்கரிய காட்டைக் கடந்து தேடும் பொருளைக்காட்டிலும் யாங்கள் உமக்குச் சிறந்தவர்கள் என்ற எண்ணம் உம்முள்ளத்தில் இருந்திருக்குமாயின், தீய நாட்களும் கிரகங்களும் நட்சத்திரங்களும் உம்மைப் போகவிடாமல் தடை செய்யும். அன்றியும், நீர் பிரியின், அந்நாளே இங்குத் தலைவியின் உயிரைக் கொண்டு செல்லும்" என்று சொல்லி, அவன் போக்கை நீக்குகின்றாள்.

பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர் பட்ட ஆறுமயங் கருஞ்சுரம்
இறந்துநீர் செய்யும் பொருளினும் யாம்நுமக்குச்

சிறந்தனம் ஆதல் அறிந்தனிர் ஆயின்
நீளிரு முந்நீர் வளிகலன் வெளவலின்
ஆள்வினைக் கழிந்தோர் போறல் அல்லதை
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவம்
நாளும் கோள்மீன் தகைத்தலும் தகைமே!

கல்லெனக் கவின்பெற்ற விழாவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ!

ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண் டமைவாளோ!

ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ!

எனவாங்கு,

பொய்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வ
தந்நாள்கொண் டிறக்குமிவள் அரும்பெறல் உயிரே!

(தரவு)

பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர் பட்ட ஆறுமயங் கருஞ்சுரம்
இறந்துநீர் செய்யும் பொருளினும் யாம்நுமக்குச்
சிறந்தனம் ஆதல் அறிந்தனிர் ஆயின்
நீளிரு முந்நீர் வளிகலன் வெளவலின்
ஆள்வினைக் கழிந்தோர் போறல் அல்லதை
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவம்
நாளும் கோள்மீன் தகைத்தலும் தகைமே!

பாஅல் அம் செவி-(பல) பகுதிகளைக் கொண்ட அழகிய காதுகளையும், பணை தாள் - பருத்த கால்களையும் உடைய, மா நிரை - பெருங் கூட்டமாகிய, மாஅல் யானையொடு - மயக்கங்கொண்ட யானைகளோடு, மறவர் - மறவரும், மயங்கி - கூடிய காரணத்தால், தூறு அதர் பட்ட- புதர்கள் (எல்லாம்) வழிகள் ஆகிய, ஆறு மயங்கு அருஞ்சுரம் -

(பழைய) வழிகள் கலங்கிய (கடப்பதற்கு) அரிய காட்டை, இறந்து - கடந்து, நீர் செய்யும் பொருளினும் - நீர் தேடும் பொருளைக்காட்டிலும், யாம் - யாங்கள், நுமக்கு சிறந்தனம் ஆதல் - உமக்குச் சிறந்தவர்களாய் இருத்தலை, அறிந்தனிர் ஆயின் - நீர் அறிந்திருப்பீராயின், நீள் இரு முந்நீர் - நீண்ட பெரிய கடலிலே, வளி - காற்றானது, கலன் வௌவலின் - (தம்) கப்பலைச் சிதற அடிப்பதால், ஆள்வினைக்கு - (தாம் எடுத்துக்கொண்ட) முயற்சி (கெடுதல்) காரணமாக, அழிந்தோர் போறல் அல்லதை - வருந்தியவரைப் போல இருத்தலே அல்லாமல், கேள் பெருந்தகையோடு - தலைவரும் பெருந்தன்மையை உடையவரும் ஆகிய நும்மொடு, எவன் பல மொழிகுவம் - எங்ஙனம் பல வார்த்தைகளைச் சொல்லுவோம்—நாளும் கோள் மீன் -(தீய)நாட்களும் கிரகங்களும் நட்சத்திரங்களும், தகைத்தலும் தகை(யு)ம்-(நும்மைத்) தடுக்கவும் தடுக்கும் !

இதனால் தோழிக்கு இடுக்கண் பிறந்தது.

தகைம் - (தகையும்) உயிர்மெய் கெட்டு நின்றது.

ஏ - அசை.

'(நீர்) அறிந்தனிர் ஆயின் நாளும் கோள்மீன் தகைத்தலும் தகையும்' எனக் கூட்டுக.

(தாழிசை)

கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகோண் டமைவாளோ !

கல் என - கல் என்னும் ஓசை உண்டாக, கவின் பெற்ற விழா - அழகு பெற்ற திருவிழாவை, ஆற்றுப்படுத்த பின் - நடத்திய பின் நாள், புல் என்ற களம்போல - (தோன்றும்) பொலிவு அழிந்த இடம் போல, புலம்பு கொண்டு - தனிமை அடைந்து, அமைவாளோ - (தலைவி துக்கத்தை அடக்கிக்கொண்டு) இருப்பாளோ ! (இறந்தேவிடுவாள்.)

'திருவிழாவினால் சிறப்பினைப் பெற்ற இடம் அவ்விழா நீங்கி மறு முறை வருகின்ற வரையிலும் தனிமைகொண்டு அழியாமல் இருப்பது போல, நீர் பொருள் தேட நீங்கித் திரும்பும் அளவும் தலைவி உயிரோடு இருக்கமாட்டாள்' என்பது கருத்து.

திருவிழா நடக்கின்ற இடம் பெரிதும் அழகுடன் விளங்கும். அவ்விழா முடிந்த மறுநாள் அங்குப் போவார் இல்லாமையால், அது சுடுகாடு போலத் தோன்றும். அதனால், 'புல்லென்ற களம்' என்றார்.

ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண் டமைவாளோ !

ஆள்பவர் கலக்குற - நாட்டை ஆள்கின்ற அரசர் கலக்க, அலை பெற்ற நாடு போல் - துன்பத்தைப் பெற்ற நாட்டைப் போல, பாழ் பட்ட முகத்தோடு - அழகு கெட்ட முகத்தோடு, பைதல் கொண்டு - வருத்தத்தைக் கொண்டு, அமைவாளோ - (தலைவி) பொருந்தியிருப் பாளோ ! (இறந்தேவிடுவாள்.)

'ஆள்கின்ற அரசர் கலக்கப் பொலிவிழந்த நாடு, அவ்வரசர் நல்ல மனம் பெறுமளவும் அழியாமல் இருப்பது போல, நீங்கி நீர் திரும்புமளவும் தலைவி உயிரோடு இருக்கமாட்டாள்' என்பது கருத்து.

ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ !

ஓர் இரா வைகலுள் - ஓர் இரவுப் பொழுதில், தாமரை பொய் கையுள் - தாமரையையுடைய தடாகத்தில், நீர் நீத்த மலர் போல - நீர் நீங்கிய மலர் (அந்த இரவு முழுவதும் அழியாமல் இருப்பது) போல, நீ நீப்பின் - நீ பிரிவாயானல், வாழ்வாளோ - உயிரோடு (தலைவி) இருப்பாளோ ! (இறந்தேவிடுவாள்.)

'பொய்கையிலுள்ள நீர் ஓர் இரவு முழுவதும் நீங்கி மறுநாள் வருமளவும் அதிலுள்ள தாமரைப் பூ வாடாமல் இருப்பது போல, நீங்கி நீர் திரும்புமளவும் தலைவி அழியாமல் இருக்கமாட்டாள்' என்பது கருத்து.

ஓகாரம் மூன்றும் எதிர்மறை.

எனவாங்கு,

என - என்று நான் சொல்ல,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

போய்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வ
தந்நாள்கொண் டிறக்குமிவள் அரும்பெறல் உயிரே !

நெடுந்தகாய் - பெருங்குணத்தோய், பொய் நல்கல் புரிந்தனை - பொய்யாகிய அன்பைச் செய்து, புறந்தரல் கைவிட்டு - (இவளைக்) காப் பாற்றுதலைக் கைவிட்டு, நீ செல்வது எ நாளோ - நீ (விரும்பிய காட் டிலே) செல்வது எந்த நாளோ, அ நாள் - அந்த நாளே, இவள் அரும்

பெறல் உயிர் - இவளுடைய பெறுவதற்கு அருமையாகிய உயிரை, கொண்டு இறக்கும் - கொண்டு சென்றுவிடும்!

இதனால் தலைவனுக்கு இழிவு பிறந்தது.
புரிந்தனை - முற்றெச்சம்.
[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (4)

கலி. 6

தலைவன் பிரியப்போவதை அறிந்த தலைவி அவனை நோக்கி, "நீர் செல்லும் கடுஞ்சுரத்தில் உமக்கு உண்டாகும் துன்பத்தில் பாதியானும் நுகருமாறு என்னையும் உடன் அழைத்துக்கொண்டு போவீர்" எனக் கூறுகின்றாள்.

மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உள்நீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடென்றால்
என்நீர் அறியாதீர் போல இவைகூறின்
நின்நீர அல்ல; நெடுந்தகாய் எம்மையும்
அன்பறச் சூழாதே; ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்ல
தின்பமும் உண்டோ எமக்கு!

மரை ஆ மரல் கவர - மரை மானினது பெண் மரலைத் தின்னும்படி, மாரி வறப்ப - மழை குறைய, வரை ஓங்கு - (அதனால் உலர்ந்த மரம், செடி, கொடிகளையுடைய) மலைகள் வளர்ந்த, அருஞ்சுரத்து - (போதற்கு) அரிய காட்டின், ஆர் இடை - அரிய வழியில், செல்வோர் - போகின்றவர், புரையோர்தம் - குற்றத்தையுடைய மறவரது, சுரை அம்பு - சுரையை உடைய அம்பு, மூழ்க சுருங்கி - அழுந்துவதால் (உடல்) சுருங்கி, உள் நீர் - உள்ளே (ஊறும்) நீர், வறப்ப - வற்

றுவதால், புலர் வாடு நாவிற்கு - உலர்ச்சியால் வாடுகின்ற நாவிற்கு, தண்ணீர் பெறூஅ - தண்ணீர் பெறாததால் உண்டாகிய, தடுமாற்ற அருந்துயரம் - மனத்தடுமாற்றத்தையுடைய மிக்க துன்பத்தை, கண்ணீர் நனைக்கும் - (அவர்) கண்ணீர் (அவர் நாவிலே விழுந்து) நனைத்துப் போக்கும், கடுமைய காடு என்று - கடுமையை உடையன அக்காடுகள் என்று, என் நீர் அறியாதீர் போல-என்னுடைய தன்மையை அறியாதீர் போல, இவை கூறின் - (யான் நும்மொடு வருதலை மறுத்த) இம்மொழிகளை நீர் கூறின், நின் நீர அல்ல - (இச்சொற்கள்) நின் தன்மைக்குப் பொருந்துவன அல்ல; நெடுந்தகாய் - பெருங்குணத்தோய், அன்பு அற சூழாதே-(இனி நீ எம்மிடத்தில்) அன்பு நீங்கும்படி நினையாதே; நாடின் - ஆராயின், ஆற்றிடை - அவ்வழியில், நும்மொடு - உம்மோடு, துன்பம் துணையாக - (உண்டாகும்) துன்பத்தை (நுகர்தற்கு எம்மையும் உமக்குத்) துணையாகும்படி (கொண்டுபோதலாகிய), அது அல்லது-அச்செயலே (எமக்குப் பெரிய இன்பமே) அல்லாமல், எமக்கு இன்பமும் உண்டோ - எமக்கு வேறு இன்பமும் இருக்கின்றதோ!

மரை ஆ - 'ஆ' பெண்மையை உணர்த்திற்று; தொல் - பொருள் - சூ - 615.

அன்பு நீங்கின் உயிர் நீங்கும் என்பது கருத்து.

மரல் - ஒருவகைத் தாழை; இதனை 'மருள்' எனவும் கூறுவர்.

சுரை - அம்பிலே அதன் இறகு செருகுவதற்காக அமைந்திருக்கும் குழாய்.

ஆல் - அசை.

தலைவனுக்கு உண்டாகும் துன்பத்தைத் தலைவியும் பகிர்ந்துகொள்ள விழைகின்றமை போற்றுந்தகைத்து.

இதனால் தலைவிக்குக் கைம்மிகலும், தலைவனுக்கு இடுக்கணும் பிறந்தன.

[இது கட்டளைக் கலிவெண்பா.] (5)

கலி. 7

தலைவன் தோழியிடம் தான் பொருள் தேடச் செல்வதாகக் கூறினான். அதற்கு அவள் அவனை நோக்கி, "தலைவரே, நீர் இங்குச் செய்கின்ற செய்கையின் ஓசையால் தலைவிக்குப் பல மாறுதல்கள் உண்டாகின்றன. அன்றியும், நீர் பிரியின் இவள் உயிர் நீங்கும், நீர்

சென்று கொண்டுவரும் பொருள் இவள் உயிரையும் தரவல்லதோ ? ” என அவன் செலவு நீங்க வேண்டுகின்றாள்.

வேனில் உழந்த வறிதுயங் கோய்களிறு
வான்நீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅம்
கானம் கடத்திர் எனக்கேட்பின் யானொன்
றுசாவுகோ ஐய சிறிது ?

நீயே, செய்வினை மருங்கில் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வில் ஞாணுளர் தீயே !
இவட்கே, செய்வுறு மண்டிலம் மையாப் பதுபோல்
மையில் வாள்முகம் பசப்பூ ரும்மே !

நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே !
இவட்கே, சுனைமாண் நீலம் காரெதிர் பவைபோல்
இனைநோக் குண்கண் நீர்நில் லாவே !

நீயே, புலம்பில் உள்ளமொடு பொருள்வயின் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே !
இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோல்
இலங்கேர் எல்வளை இறையூ ரும்மே !

எனநின்,

செல்நவை அரவத்தும் இனையவள் நீநீப்பின்
தன்நலம் கடைகொளப் படுதலின் மற்றிவள்
இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே ?

(தரவு)

வேனில் உழந்த வறிதுயங் கோய்களிறு
வான்நீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅம்
கானம் கடத்திர் எனக்கேட்பின் யானொன்
றுசாவுகோ ஐய சிறிது ?

வேனில் உழந்த - முதுவேனிற் காலத்தாலே வருந்தின (உடல்), வறிது உயங்கு - (நீர் வேட்கையால் பின்னும்) சிறிதாக வருந்துகின்ற,

ஓய் களிறு - ஓய்ந்த யானைகள், வான் நீங்கு - மழை நீங்குவதற்குக் காரணமான (கொடுமையை உடைய), வைப்பின் - இடங்களிலே, வழங்கா தேர் - (மக்கள் ஏறிச்) செலுத்தாத பேய்த்தேராகிய, நீர்க்கு அவாஅம் - நீருக்கு ஆசைப்படுகின்ற, கானம் கடத்திர் என கேட்பின் - காட்டைக் கடந்து நீர் போவீர் என்று (யான் கூறுதலைத் தலைவி) கேட்பின், யான் ஒன்று - நான் ஒரு செய்தியைப்பற்றி, ஐய சிறிது உசாவுகோ - தலைவரே, (உம்மைச்) சிறிது கேட்கலாமோ ?

'வழங்காத் தேர் நீர்க்குக் களிறு அவாஅம் கானம்' எனக் கூட்டுக.

யானையின் உடல் காலத்தின் கொடுமையாலேயன்றி நீர் இல்லாமையாலும் குறுகிற்று என்று கொள்க.

பேய்த்தேர் - வெம்மையின் மிகுதியால், நீர் ஓடுவது போலத் தோன்றும் ஒரு பொய்த் தோற்றம். இதனைக் 'கானல் நீர்' என்பதும் உண்டு.

இதனால் தலைவனுக்குச் சூழ்ச்சி பிறந்தது.

(தாழிசை)

நீயே, செய்வினை மருங்கில் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வில் ஞாணுளர் தீயே !
இவட்கே, செய்வுறு மண்டிலம் மையாப் பதுபோல்
மையில் வாள்முகம் பசப்பூ ரும்மே !

நீயே - நீயோ, செய் வினை மருங்கில் - நீ செய்யப் (போகும்) செயலிடத்து, செலவு அயர்ந்து - போதலை விரும்பி, நின் கை புனை வல்வில் - உன்னுடைய கையினால் அலங்கரித்தலைப் பெற்ற வலிதாகிய வில்லினுடைய, ஞாண் உளர்தீயே - கயிற்றைத் தடவுகின்றாயே! இவட்கே - இவளுக்கோ, செய் உறு மண்டிலம் - (குற்றமுறுதுகையால்) செய்தலுற்ற சந்திரனிடத்தில், மை யாப்பது போல் - மேகம் பொருந்துகின்ற தன்மை போல, மை இல் - குற்றம் அற்ற, வாள் முகம் - ஒளியை உடைய முகத்திலே, பசப்பு ஊரும்மே-பசப்பு நிறம் பரவுகின்றதே !

யாழ - அசை.

செய்வுறு - 'செல்வுழி' என்ற இடத்துப்போல வகரம் வந்தது.

செய்வுறு மண்டிலம் - இல்பொருள் உவமை.

நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே !

இவட்கே, சுனைமாண் நீலம் காரெதிர் பவைபோல்
இனைநோக் குண்கண் நீர்நில் லாவே!

நீயே - நீயோ, வினை மாண் காழகம் - வேலைப்பாட்டால் சிறந்த துணியை, வீங்க கட்டி - இறுகக் கட்டி, புனை மாண் மரீஇய - அலங் கரிக்கும் தொழிலால் மாட்சிமை தங்கிய, அம்பு தெரிதியே - அம்பு களை ஆராய்கின்றாயே! இவட்கே - இவளுக்கோ, சுனை மாண் நீலம் - சுனையிடத்து மாட்சிமைப்பட்ட நீலோற்பலங்கள், கார் எதிர்பவை போல் - மழைத்துளிகளை எதிர்கொள்ளுவன போல (அமைந்து நீரைச் சொரியுமாறு), இனை நோக்கு உண்கண் - வருந்தும் பார்வையை உடைய மையுண்ட கண்களில், நீர் நில்லாவே - நீர்த்துளிகள் (ஒழுகு தலால்) நில்லாதனவாகின்றனவே!

'சுனையிலே மாட்சிமைப்பட்ட நீலோற்பலங்கள் மழையினால் தாம் பெற்ற நீரை ஒழுகவிடுவது போல, தலைவியின் வருந்தும் பார்வையையுடைய மையுண்ட கண்கள் நீர் சொரியும்' என்பது கருத்து.

நீயே, புலம்பில் உள்ளமோடு பொருள்வயின் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே!
இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோல்
இலங்கேர் எல்வளை இறையூ ரும்மே!

நீயே - நீயோ, புலம்பு இல் உள்ளமொடு - வருத்தம் இல்லாத மனத்தோடு, பொருள் வயின் செலீஇய - பொருளின்பொருட்டுப் போக, வலம் படு திகிரி - வெற்றியை உண்டாக்குகின்ற சக்கரத்தி னது, வாய் நீவுதியே - வாயைத் (தூசு போகத்) துடைக்கின்றாயே! இவட்கே - இவளுக்கோ, அலங்கு இதழ் கோடல் வீ - அசைகின்ற இதழ்களையுடைய வெண்காந்தட்பூக்கள், உகுபவை போல் - உதிர்ந்து வீழ்வன போல, இலங்கு ஏர் எல் வளை - விளங்கும் அழ கினையுடைய ஒளி பொருந்தின வளைகள், இறை ஊரும்மே - முன் கையினின்றும் விலகுகின்றனவே!

(தனிச்சொல்)

எனநின்,

நின் - (இவ்வாறு) உனது,

என - அசை.

(சுரிதகம்)

செல்நவை அரவத்தும் இனையவள் நீநீப்பின்
தன்நலம் கடைகொளப் படுதலின் மற்றிவள்
இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே ?

செல் நவை-செல்கையினால் (உண்டாகின்ற) குற்றம் பொருந்திய, அரவத்தும்-ஓசையிலும், இனையவள்-இத்தன்மையை அடையக்கூடியவள், நீ நீப்பின் - நீ விட்டுப் பிரிவாயானால், தன் நலம் கடைகொளப் படுதலின் - (இறந்துவிடும் காலத்தாலே) தன்னுடைய அழகு முற்றிலும் கொள்ளப்படுதலினால், முன்னிய தேஎத்து முயன்று செய் பொருள் - நீ கருதிய தேசத்திற்குச் சென்று முயன்று தேடும் பொருள், மற்று - உனக்கு இன்பந் தருதலேயன்றி, இவள் இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ - இவள் இனிய உயிரைத் தருதற்கும் வல்லதாகுமோ ?

'பொருள் இவள் இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ ?' எனக் கூட்டுக.
இதனால் தலைவனுக்கு அசைவு பிறந்தது.

[இது **கோச்சகம்.**] (6)

கலி. 8

தலைவன் பிரியப்போவதைக் குறிப்பால் அறிந்த தோழி அவனை அடைந்து, பொருளினது நிலையாமையையும், தலைவியோடு இல்லறம் நடத்துவதன் பெருமையையும் எடுத்துக் கூறி, அவன் செலவு நீங்க வேண்டுகின்றாள்.

நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்
உறலூறு கமழ்கடாஅத் தொல்கிய எழில்வேழம்
வறனுழும் நாஞ்சில்போல் மருப்பூன்றி நிலஞ்சேர
விறல்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின்மற் றைஇய:

வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோல்
ஏழுந்தம் பயன்கெட இடைநின்ற நரம்பறூஉம்
யாழினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ!

மரீஇத்தான் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது
பிரியுங்கால் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறும்
திருவினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ!

புரைதவப் பயனோக்கார் தம்மாக்கம் முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்வௌவும்
அரைசினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ!

எனவாங்கு,

நச்சல் கூடாது பெரும இச்செல
வொழிதல் வேண்டுவல்; சூழின் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப அதுமனும் பொருளே.

(தரவு)

நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்
உறலூறு கமழ்கடாஅத் தொல்கிய எழில்வேழம்
வறனுழும் நாஞ்சில்போல் மருப்பூன்றி நிலஞ்சேர
விறல்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின்மற் றைஇய:

நடுவு இகந்து ஒரீஇ - நடுவு நிலையை விட்டு நீங்கி, நயன் இல்லான் - அருளில்லாத அமைச்சன், வினை வாங்க - (தன் மனத்திற் கிடந்த) காரியத்தை வெளிப்படுத்த, கொடிது ஓர்த்த-(அதைக் கேட்டுக்) கொடிய செயலை (ச் செய்ய) நினைத்த, மன்னவன் கோல் போல - அரசனது கொடுங்கோல் (வருத்துமாறு)போல, ஞாயிறு கடுகுபு கதிர் மூட்டி - சூரியன் கடுகிக் கிரணங்களைச் செலுத்தி, காய் சினம் தெறு

தலின் - மிக்க கோபத்தால் சுடுதலால், உறல் - (முன்பு வண்டுகள்) பொருந்துதலையுடையதாய், ஊறு கமழ் கடாத்து - சுரக்கின்ற மணம் வீசும் மத நீரை உடையதாயிருந்து, ஒல்கிய எழில் வேழம் - (இப் பொழுது) கெட்ட அழகையுடையதாயிருக்கின்ற யானை, வறன் உழும் நாஞ்சில் போல் - காய்ந்த நிலத்தை உழுகின்ற கலப்பைகள் போல, மருப்பு ஊன்றி நிலம் சேர-கொம்புகளை ஊன்றி நிலத்தில் (சோர்ந்து) கிடக்க, விறல் மலை வெம்பிய - பலம் பொருந்திய மலைகள் கொதித் தலைப் பெற்ற, போக்கு அரு வெஞ்சுரம் - போதற்கு அருமையாகிய கொடிய காட்டை, சொல்லாது இறப்ப துணிந்தனிர்க்கு - (எங்களுக் குக்) கூறாமல் கடந்து போகத் துணிந்த நுமக்கு, ஒரு பொருள் சொல்லுவது உடையேன் - ஒரு செய்தியைச் சொல்லுந் தன்மையை உடையேன், ஐய கேண்மின் - பெரியீர் அதனைக் கேட்பீராக :

இதனால் தோழிக்குச் சூழ்ச்சி பிறந்தது.
ஐய கேண்மின் - ஒருமை பன்மை மயக்கம்.
மற்று - அசை.

(தாழிசை)

வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோல்
ஏழுந்தம் பயன்கெட இடைநின்ற நரம்பறூஉம்
யாழினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ !

வீழுநர்க்கு-விரும்புவார்க்கு, இறைச்சியாய் - விருப்பமாய், விரல் கவர்பு இசைக்கும் - விரலாலே தடவப்பட்டு ஒலிக்கும், கோல் ஏழும் தம் பயன் கெட - நரம்பு ஏழும் தம் (இன்பமாகிய) பயன் கெடும்படி, இடை நின்ற நரம்பு அறூஉம் - நடுவிலே நின்ற நரம்பு அற்றுப் போகும், யாழினும் - யாழைக்காட்டிலும், நிலை இல்லா பொருளையும்- நிலைபேறில்லாத பொருளையும், நச்சுபவோ-(அறிவுடையோர்) விரும்பு வாரோ !

மரீஇத்தான் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது
பிரியுங்கால் பிறரேள்ளப் பீடின்றிப் புறமாறும்
திருவினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ!

மரீஇ தான் கொண்டாரை - கூடித் தான் விரும்பினவரை, கொண்டக்கால் போலாது - (தான் மனத்தால்) கொண்ட காலத்தில் (அவர் இருந்த நிலைமை) போல அல்லாமல், பிரியுங்கால் - (அவரை) விட்டுப் பிரியும்பொழுது, பிறர் எள்ள பீடு இன்றி - பிறர் இகழும்

படி (அவருக்கு ஒருவிதப்) பெருமையும் இல்லாமல், புறம் மாறும் திருவினும் - (அவரை விட்டு) அயலே நீங்கும் இலக்குமியைக்காட்டினும், நிலை இல்லா பொருளையும் நச்சுபவோ - நிலைபேறில்லாத பொருளையும் (அறிவுடையோர்) விரும்புவாரோ !

'இலக்குமி முதலில் ஒருவரை அடையும்பொழுது அவர் நிலைமை சிறப்பாய் இருக்கின்றது. ஆனால் அவரை அவள் விட்டுப் பிரியும்பொழுது அவர் நிலைமை முன்னையினும் மிகவும் தாழ்வானதாகின்றது. அந்த இலக்குமியைக் காட்டிலும் நிலை இல்லாத செல்வத்தை அறிவுடையோர் விரும்பமாட்டார்' என்பது கருத்து.

கொண்டக்கால் - செய்யுள் இன்பங்கருதி வலி மிக்கது.

புரைதவப் பயனோக்கார் தம்மாக்கம் முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்வௌவும்
அரைசினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ !

புரை தவ - உயர்ச்சி மிகும்படி, பயன் நோக்கார்-(தாம் பெறும்) பயனைப் பாராதவராய், தம் ஆக்கம் முயல்வாரை - தமது ஆக்கத்திற்காக முயல்கின்ற அமைச்சரை, வரைவு இன்றி - அளவின்றி, செறும் பொழுதில் - (தாம்) கோபிக்கும்பொழுது, கண்ணோடாது உயிர் வௌவும் அரைசினும் - கருணை இன்றி(ப் பழமையைக் கவனியாது அவர் பொருள் முதலியனவன்றி) உயிரையும் கொள்ளும் அரசரைக் காட்டிலும், நிலை இல்லா பொருளையும் நச்சுபவோ - நிலைபேறில்லாத பொருளையும் (அறிவுடையோர்) விரும்புவாரோ ?

தாம் பெறும் பயனைக் கருதாது, அரசர் ஆக்கத்தையே கருதும் அமைச்சர் எனக் கொள்க.

அரைசு - (அரசு) இடைப்போலி.

(தனிச் சொல்)

எனவாங்கு,

என - என்று யான் சொல்ல,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

நச்சல் கூடாது பெரும இச்செல
வொழிதல் வேண்டுவல் ; சூழின் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்

தன்நகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப அதுமனும் பொருளே.

பெரும - தலைவனே, நச்சல் கூடாது - (பொருளை) விரும்புதல் பொருந்தாது (ஆதலால்), இ செலவு ஒழிதல் வேண்டுவல் - இச் செலவு (நின்னிடத்திருந்து) ஒழிதலை யான் விரும்புகின்றேன்; சூழின் - ஆராயின், பழி இன்று - பழி இல்லாமல், மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி - அரசன் காக்க வருகின்ற விருந்தினரைப் பாதுகாத்து, தன் நகர் விழைய கூடின் - தன் மனைவி விரும்பும்படி அவளுடன் கூடியிருப்பின், இன் உறல் - இனிய முயக்கத்தைப் பெறுதலை உடைய, வியல் மார்ப - அகற்சியையுடைய மார்பனே, அதுவே மனும் பொருள் - அதுவே நிலைபெறும் பொருளாம்.

நகர் - ஆகு பெயர்.
இன்று - எச்சத்திரிபு.
ஏகாரம் பிரித்துக் கூட்டப்பெற்றது.
இதனால் தலைவனுக்குக் கருதுதலும் தோழிக்குச் சூழ்ச்சியும் பிறந்தன.
[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (7)

கலி. 9

தலைவி தன் தாய்தந்தையரைத் துறந்து, தன் மனத்திற்கினிய தலைவனோடு சென்றாள். அச்செயலைப் பின்னர் உணர்ந்த செவிலி அவளைத் தேடிக்கொண்டு காட்டிடைச் செல்லலாயினள். அவள் இடைவழியில், திரிதண்டத்தைக் கையில் ஏந்திய அந்தணர் சிலர் தன் எதிரே வருதலைக் கண்டு, அவருள் தலைவனாய் இருந்தானை நோக்கி, "பெரும, தாமே அறிந்ததன்றிப் பிறர் அறியாக் கூட்டத்தாராய் இருந்தார் இருவர் இவ்வழிச் செல்லக் கண்டனையோ?" எனக் கேட்டனள். அதற்கு அந்தணர் தலைவன், "அன்னையீர், காட்டிடை அன்னோர் இருவரைக் கண்டு, அவர் செயல் அறம் எனவே கருதிப் பெயர்ந்தோம். ஆதலால், நீரும் அவர்க்குத் துன்பத்தைச் செய்ய நினையாதீர்" எனக் கூறுகின்றான்.

எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்

குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்;
அன்னா ரிருவரைக் காணிரோ பெரும?
காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை
ஆணெழில் அண்ணலோ டருஞ்சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர்;

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்!
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்!
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்!
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

எனவாங்கு,

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்!
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறந்தலைப் பிரியா ஆறுமற் றதுவே.

(தரவு)

எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக் கோளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்;

அன்னா ரிருவரைக் காணிரோ பெரும ?
காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை ;
ஆணெழில் அண்ணலோ டருஞ்சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர் ;

எறி தரு - (ஒளி) வீசுதலைச் செய்கின்ற, கதிர் தாங்கி - (சூரியனுடைய) கிரணங்களைத் தாங்கும் பொருட்டு, ஏந்திய குடை நீழல் - எடுக்கப்பட்ட குடையின் நிழலிலே, உறி தாழ்ந்த கரகமும் - உறியிலே தங்கிய கமண்டலத்தையும், உரை சான்ற முக்கோலும் - (அரி, அரன், அயன் என்னும் மூவரும் ஒருவர் என்று சொல்லும்) புகழ் அமைந்த முக்கோலையும், நெறிப்பட - முறைமைப்பட, சுவல் அசைஇ - தோளிலே வைத்து, வேறு ஓரா நெஞ்சத்து - (இறைவன் திருநாமமேயல்லாது) வேறு ஒன்றையும் நினையாத நெஞ்சத்தோடு, குறிப்பு ஏவல் செயல் மாலை - (உமது மனக்) குறிப்பின்படியே (ஐம்பொறிகளும்) ஏவல் செய்தலைப் பொருந்திய தன்மையை, கொளை நடை அந்தணீர் - கொள்ளுதல் அமைந்த நடையையுடைய அந்தணர்களே ! வெவ்விடை செலல் மாலை - வெம்மையையுடைய காட்டிலே போதலை இயல்பாக உடைய, ஒழுக்கத்தீர் - ஒழுக்கத்தையுடையவர்களே! இ இடை - இந்தக் காட்டிலே, என் மகள் ஒருத்தியும் - என்னுடைய மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும் - வேறொருத்தியின் மகன் ஒருவனும், தம்முளே புணர்ந்த - (பிறர் அறியாமல்) தமக்குள் தாமே கூடின, தாம் அறி புணர்ச்சியர் - தாமே அறிந்த கூட்டத்தையுடையராயினார் ; பெரும அன்னார் இருவரைக் காணிரோ - பெரியீர் அத்தன்மையையுடைய இருவரைப் பாராதிருந்தீரோ ? காணேம் அல்லேம் - பாராதிருந்தேமில்லை, கடத்திடை கண்டனம் - இக்காட்டிலே கண்டோம் ; ஆண் எழில் அண்ணலோடு - ஆண் (மக்கட்குக் கூறும்) அழகினையுடைய தலைவனோடு, அருஞ்சுரம் முன்னிய - (கடத்தற்கு) அருமையாகிய காட்டைக் கடந்து போகக் கருதிய, மாண் இழை - மாட்சிமைப்பட்ட அணியினையுடைய, மடவரல் - மிக்க இளமையை உடையவளின், தாயிர் போறிர் நீர் - தாயாராய் இருக்கும் தன்மையை உடையீர் போல இருக்கிறீர் நீர் ;

செவிலி சுரத்திலே சென்றுகொண்டிருந்த அந்தணர் யாவரையும் முதலில் 'அந்தணீர், ஒழுக்கத்தீர்' என விளித்துப் பின்பு அவருள் தலைவனாய் இருந்தானைப் 'பெரும' என்று அழைக்கலாயினள்.

தாங்கி - எச்சத்திரிபு.

(தாழிசை)

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும் !
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே !

பல உறு - பல (பயன்கள்) பொருந்திய, நறுஞ்சாந்தம் - வாசனை பொருந்திய சந்தன மரங்கள், படுப்பவர்க்கு அல்லதை - (அரைத்துப்) பூசிக்கொள்ளுகிறவர்க்கு(ப் பயன்படுமே) அல்லாமல், மலையுளே பிறப்பினும் - மலையிலே உண்டானாலும், மலைக்கு அவை என் செய்யும் - அம்மலைக்கு அம்மரங்கள் என்ன பயனை உண்டாக்கும்! நினையுங்கால் - ஆராயும்பொழுது, நும் மகளும் நுமக்கு ஆங்கு அனையளே - உம்முடைய மகளும் (பயன்படும் பருவத்தில்) உமக்கு அம்மரங்களைப் போன்றவளேயாவாள் ! (பயன்படாள்.)

தாம் - அசை.
உம் பிரித்துக் கூட்டப்பெற்றது.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும் !
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே !

சீர் கெழு - சிறப்புப் பொருந்திய, வெண் முத்தம் - வெண்மையான முத்துக்கள், அணிபவர்க்கு அல்லதை - அணிபவர்களுக்கு (ப் பயன்படுமே) அல்லாமல், நீருளே பிறப்பினும் - கடலிலே உண்டானாலும், நீர்க்கு அவை என் செய்யும் - அக்கடலுக்கு அம்முத்துக்கள் என்ன பயனைக் கொடுக்கும்! தேருங்கால் - ஆராயும்பொழுது, நும் மகளும் நுமக்கு ஆங்கு அனையளே - உம்முடைய மகளும் (பயன்படும் பருவத்தில்) உமக்கு அம்முத்துக்களைப் போன்றவளேயாவாள் ! (பயன்படாள்.)

தாம் - அசை.
உம் பிரித்துக் கூட்டப்பெற்றது.

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்!
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே !

ஏழ் புணர் இன் இசை - ஏழு நரம்புகளின் கூட்டுறவால் (எழும்) இனிய ஓசைகள், முரல்பவர்க்கு அல்லதை - பாடுவார்க்கு(ப் பயன்

படுமே) அல்லாமல், யாழுளே பிறப்பினும் - யாழினிடத்தே உண்டானாலும், யாழ்க்கு அவை என் செய்யும் - யாழுக்கு அவ்வோசைகள் என்ன பயனைக் கொடுக்கும்! சூழுங்கால் - ஆராயும் பொழுது, நும் மகளும் நுமக்கு ஆங்கு அனையளே - உம்முடைய மகளும் (பயன்படும் பருவத்தில்) உமக்கு அவ்வோசைகளைப் போன்றவளேயாவாள்! (பயன்படாள்.)

தாம் - அசை.

உம் பிரித்துக் கூட்டப்பெற்றது.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்!
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள் ;
அறந்தலைப் பிரியா ஆறுமற் றதுவே.

இறந்த கற்பினாட்கு - மிக்க கற்பை உடையவளுக்கு, எவ்வம் - துன்பத்தை, படரன்மின் - (செய்ய) நினையாதீர்! சிறந்தானை வழிபடீஇ - (தாய்தந்தையர்களைக்காட்டிலும்) சிறந்த கணவனை வழிபட்டு, சென்றனள் - (அவன் பின்னே) போனாள்; அதுவே அறந்தலை பிரியா ஆறு - (அவள் சென்ற) அச்செயலே தரும வழியினின்று மாறாத முறையாகும்.

மற்று - அசை.

இதனால் செவிலிக்குத் தன்மை பிறந்தது.

மணம் கொண்ட பின்னர்த் தலைவன் தலைவியைப் பொருள் முதலியவற்றின்பொருட்டுப் பிரிகின்ற செய்தியைக் கூறும் இத்திணையில் இச்செய்யுள் சேர்க்கப்பெற்றது 'இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலு முரிய தாகு மென்மனார் புலவர்' என்னும் தொல்காப்பிய அகத்திணை இயல் பதின்மூன்றும் சூத்திரவுரையில் 'இருவகைப் பிரிவும்' என்னும் தொடர்க்கு, 'தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும்' என இளம்பூரணர் கூறிய உரை நோக்கி என்க.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (8)

கலி. 10

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நோக்கி, "நீர் காட்டினைக் கடந்து பொருள் தேடும்பொருட்டுப் பிரியப்போகின்றீர் என்று யான் தலைவிக்குக் கூறுவேனானால், அப்பொழுதே அவள் உயிர் நீங்கும்" எனக் கூறி அவன் செலவை நீக்கினாள். பின்னர் அவள் தலைவிக்கு அச்செய்தியைக் கூறுகின்றாள்.

வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணும் இகந்துசெய் திசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவரால் கோல்கோடியவனிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்

இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின்
உடைபுநெஞ் சுகவாங்கே ஒளியோடற் பாள்மன்னோ
படையமை சேக்கையுள் பாயலின் அறியாய்நீ
புடைபெயர்வா யாயினும் புலம்புகொண் டினைபவள்!

முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ எனக்கேட்பின்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாள்மன்னோ
நனிகொண்ட சாயலாள் நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினும் துறப்பஞ்சிக் கலுழ்பவள்!

பொருள்நோக்கிப் பிரிந்துநீ போகுதி எனக்கேட்பின்
மருள்நோக்கம் மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாள்மன்னோ
இருள்நோக்கம் இடையின்றி ஈரத்தின் இயன்றநின்
அருள்நோக்கம் அழியினும் அவலங்கொண் டழிபவள்!

எனவாங்கு,

வினைவெஃகி நீசெலின் விடுமிவள் உயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவேல் நெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனனாற் செறிகநின் வளையே.

(தரவு)

வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணும் இகந்துசெய் திசைகெட்டான் இறுதிபோல்
வேரோடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கோலையஞ்சா வினைவரால் கோல்கோடி யவனிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்

வறியவன் இளமை போல் - வறுமையை உடையவனுடைய இளமை (அவனுக்குப் பயன்படாமை) போல, *வாடிய சினையவாய்* - வாடிய கிளைகளை உடையனவாயும், *சிறியவன் செல்வம் போல்* - அறிவில்லாதவனிடத்தில் உள்ள செல்வம் (எவர்க்கும் பயன்படாமை) போல, *சேர்ந்தார்க்கு நிழல் இன்றி* - (தம்மை வந்து) அடைந்தவர்களுக்கு நிழல் (கொடுத்தல்) இன்றியும், *யார்கண்ணும்* - எவரிடத்திலும், *இகந்து செய்து* - (அறத்தை) மீறிச் செய்து, *இசை கெட்டான்* - புகழ் கெட்டவனுடைய, *இறுதி போல்* - முடிவைப் போல, *வேரொடு மரம் வெம்ப* - வேரோடு மரங்கள் காய்ந்துபோகும்படி, *விரி கதிர்* - விரிந்த கிரணங்களையுடைய சூரியன், *தெறுதலின்* - சுடுதலால், *அலவுற்று குடி கூவ* - வருத்தமுற்றுக் குடிகள் கதறும்படி, *ஆறு இன்றி* - (நல்ல) நெறி இன்றி, *பொருள் வெஃகி* - பொருளை விரும்பி, *கொலை அஞ்சா* - கொலைத்தொழிலுக்கு அஞ்சாத, *வினைவரால்* - (போதனை செய்யும்) அமைச்சரால், *கோல் கோடியவன்* - அரசாட்சி முறை தவறிய மன்னனுடைய, *நிழல் உலகு போல்* - (குடை) நிழற்கீழ் வாழும் குடிகளைப் போல, *உலறிய உயர் மரம் வெஞ்சுரம்* - உலர்ந்த உயர்ந்த மரங்களையுடைய கொடிய காட்டை

'வாடிய சினையவாய் நிழலின்றி வெம்ப விரிகதிர் தெறுதலின் உலறிய உயர்மர வெஞ்சுரம்' எனக் கூட்டுக.

(தாழிசை)

இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின்
உடைபுநெஞ் சுகவாங்கே ஒளியோடற் பாள்மன்னோ
படையமை சேக்கையுள் பாயலின் அறியாய்நீ
புடைபெயர்வா யாயினும் புலம்புகொண் டினைபவள் !

படை அமை - (செம்பஞ்சு, வெண்பஞ்சு முதலியன ஒன்றன்மே லொன்றாக) அடுக்காகப் பொருந்திய, சேக்கையுள் - படுக்கையிலே, பாயலின் - தூக்கத்தில், நீ அறியாய் - நீ அறியாயாய், புடை பெயர்வாயாயினும் - (சிறிது) விலகுவாயாயினும், புலம்பு கொண்டு - தனிமை கொண்டு, இனைபவள் - வருந்துபவள், இடை கொண்டு - (கூடியிருக்கும் காலத்தின்) இடையிலே (பிரிதலை மனத்தே) கொண்டு, பொருள்வயின் - பொருளின்பொருட்டு, நீ இறத்தி என கேட்பின் - நீ கடந்து போவாய் என்று (யான் கூறக்) கேட்பின், நெஞ்சு உடைபு உக - மனம் உடைந்து அழிய, ஒளி ஓடற்பாளோ - ஒளி கெடுவாளோ ! (இறந்தேவிடுவாள்.)

'இனைபவள் ஓடற்பாளோ' எனக் கூட்டுக.

வயின் - ஏழாம் வேற்றுமை உருபு, நான்காம்வேற்றுமைப் பொருளில் வந்தது. (உருபு மயக்கம்.)

அறியாய் - முற்றெச்சம்.

மன் - அசை.

ஓ - ஒழியிசை.

முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ எனக்கேட்பின்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாள்மன்னோ
நனிகொண்ட சாயலாள் நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினும் துறப்பஞ்சிக் கலுழ்பவள் !

நனி கொண்ட சாயலாள் - மிகுதியைக் கொண்ட மென்மையை உடையவள், நீ நயந்து - நீ விரும்பி, நகையாக - விளையாட்டாக, துனி செய்து - (ஒரு) பிரிவைச் செய்து, நீடினும் - (அதிலே சிறிது பொழுது) அதிகப்படினும், துறப்பு அஞ்சி கலுழ்பவள் - பிரிவுக்குப் பயந்து கலங்குபவள், முனிவு இன்றி - (பிரிதலில்) வெறுப்பின்றி, முயல் பொருட்கு-முயன்று தேடும் பொருள் காரணமாக, நீ இறத்தி என கேட்பின் - நீ கடந்து போவாய் என்று (யான் கூறக்) கேட்பா ளாயின், பனிய கண் - நீருள்ளனவாகிய கண்கள், படல் ஒல்லா - உறக்கத்தைப் பொருந்தாவாய், படர் கூர்கிற்பாளோ - (நினைவால் உண்டாகிய) நோய் அதிகரிக்கப்பெறுவாளோ ! (இறந்தேவிடுவாள்.)

மன் - அசை.

ஓ - ஒழியிசை.

பொருள் நோக்கிப் பிரிந்துநீ போகுதி எனக்கேட்பின்
மருள்நோக்கம் மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாள்மன்னோ
இருள்நோக்கம் இடையின்றி ஈரத்தின் இயன்றநின்
அருள்நோக்கம் அழியினும் அவலங்கொண் டழிபவள் !

இருள் நோக்கம் - (மனத்திற்குத்) துன்பத்தைத் தருகின்ற எண்ணம், இடை இன்றி - இடையிலே பொருந்துதல் இன்றி, ஈரத்தின் இயன்ற - அன்பாலாகிய, நின் அருள் நோக்கம் - நினது அருட்பார்வை, அழியினும் - நீங்கினும், அவலம்கொண்டு அழிபவள் - துன்பத்தால் (நெஞ்சு) அழிபவள், பொருள் நோக்கி - பொருளைக் கருதி, நீ பிரிந்து போகுதி - நீ பிரிந்து போவை, என கேட்பின் - என்று (யான் சொல்லக்) கேட்பின், மருள் நோக்கம் மடிந்து - (கண்டார்) மருளும் அழகு கெட்டு, ஆங்கே - அப்பொழுதே, மயல் கூர்கிற்பாளோ - மயக்கம் மிகுவாளோ ! (இறந்தேவிடுவாள்.)

மன் - அசை.

ஓ - ஒழியிசை.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

வினைவெஃகி நீசெலின் விடுமிவள் உயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவேல் நெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனனாற் செறிகநின் வளையே.

புனை இழாய் - அழகு பொருந்தச் செய்யப்பட்ட அணிகளையுடைய பெண்ணே, வினை வெஃகி - (உன்) காரியத்தையே விரும்பி, நீ செலின் - நீ போவையானால், இவள் உயிர் விடும் என - இவள் உயிரை விட்டுவிடுவாள் என்று, நின் நிலை - உனது நிலைமையை, யான் கூற - யான் சொல்ல, நிலவு வேல் நெடுந்தகை - ஒளி பொருந்திய வேலாயுதத்தையுடைய பெருங்குணத்தோன், நீள் இடை செலவு - நீண்ட வழியிடத்துச் செல்லுதலை, பை என ஒழிந்தனன் - மெல்லத் தவிர்ந்தான், நின் வளை செறிக - (ஆகையால்) நின் வளைகள் நின்கையில் பொருந்துவனவாக,

ஆல் - அசை.

இதனால் தோழிக்கு அச்சமும், தலைவனுக்கு இழிவும், தலைவிக்குப் 'புணர்வு' என்னும் உவகையும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக்கலிப்பா.] (9)

கலி. 11

பொருள் தேடச்சென்ற தலைவன் வாராமையின், அவன்மேல் தன் கருத்தைச் செலுத்திய தோழிக்குத் தலைவி, " கனங்குழாய், காட்டில், யானை புறா முதலியவற்றிடத்து நிகழ்வனவாக நம் தலைவர் கூறிய செயல்களும், பல்லிகளின் கூற்றுக்களும், இடக்கண்ணின் துடிப்பும் அவர் நம் புனைநலம் கெடாத வகை வந்தேவிடுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன " எனக் கூறுகின்றாள்.

அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலின் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயின் சென்றநம் காதலர்
வருவர்கொல்? வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி:

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடென்றார்; அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே!

இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடென்றார்; அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தனரே!

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉம் தகையவே காடென்றார்; அக்காட்டுள்
இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே!

எனவாங்கு,

இணைநலம் உடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர் ; மனைவயின்
பல்லியும் பாங்கொத் திசைத்தன ;
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே.

(தரவு)

அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலின் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயின் சென்றநம் காதலர்
வருவர்கொல் ? வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேஎளினி :

அரிது ஆய - (பெறுதற்கு) அருமையதாகிய, *அறன் எய்தி* - தருமம் செய்யும் குணத்தைப் பெற்று, *அருளியோர்க்கு அளித்தலும்* - (தமக்கு) அருள் செய்தோர்க்குக் கொடுத்தலையும், *பெரிது ஆய* - பெரியதாகிய, *பகை வென்று* - பகைமையை வென்று, *பேணாரை தெறுதலும்* - பகைவரை அழித்தலையும், *காதலின்* - (முற்பிறப்பில் இருவருக்கும் உண்டான) காதலினாலே, *புரிவு அமர்* - (இப்பிறப்பில் மனம்) பொருந்துதல் அமர்ந்த, *புணர்ச்சியும்* - சேர்க்கையினையும், *தரும் என* - தரும் என்று (நமக்குக் கூறி), *பிரிவு எண்ணி* - பிரிதலை நினைத்து, *பொருள்வயின்* - பொருளின்பொருட்டு, *சென்ற நம் காதலர்* - போன நம் அன்பர், *வருவர்கொல்* - வருவாரோ? *வயங்கு இழாஅய்* - விளங்குகின்ற அணிகலையுடையவளே, *யான் வலிப்பல்* - யான் (அவர் வரவினைத்) துணிகின்றேன், *இனி கேஎள்* - இப்பொழுது (நீ அதற்குக் காரணம்) கேள் :

‘பொருளானது அளித்தலையும் தெறுதலையும் புணர்ச்சியையும் தரும் எனச் சென்ற நம் காதலர் வருவர்கொல் ?’ எனக் கூட்டுக.

(தாழிசை)

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் ; அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே !

கனம் குழாஅய் - கனமாகிய குழையினை உடையவளே, காடு - காடுகள், அழல் அன்ன வெம்மையால் - நெருப்புப்போன்ற வெப்பத்தினால், அடி தாங்கும் அளவு இன்றி - பாதம் பொறுக்கும் அளவின்றி, கடியவே என்றார் - கடுமையை உடையனவாய் இருக்குமே என்று சொன்னார் ; அக்காட்டுள் - (ஆனால்) அந்தக் காடுகளிலே, துடி அடி - உடுக்கையைப்போன்ற பாதத்தினையுடைய, கயந்தலை - யானைக் கன்றுகள், கலக்கிய சின்னீரை - கலக்கிய சிறிய நீரை, களிறு - ஆண் யானைகள், பிடி ஊட்டி - (முதலில்) பெண்யானைகளை உண்பித்து, பின் உண்ணும் - பின்பு தாம் குடிக்கும், எனவும் உரைத்தனரே - என்றும் சொன்னாரே !

இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடென்றார் ; அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தனரே !

காடு - காடுகள், இலை தீந்த - இலைகள் உலர்ந்த, உலவையால் - கொம்புகளால், இன்பத்தின் இகந்து ஒரீஇ - இன்பத்தை விட்டு நீங்கி, துன்பு உறூஉம் தகையவே - (சென்றாரைத்) துன்புறுத்தும் தகைமையை உடையனவாய் இருக்குமே, என்றார் - என்று சொன்னார் ; அக்காட்டுள் - (ஆனால்) அக்காடுகளிலே, அன்பு கொள் - அன்பு கொண்ட, மடப்பெடை - இளமையையுடைய பெண் புறாக்கள், அசைஇய - (வெம்மையால்) மெலிவுற்ற, வருத்தத்தை - துயரத்தை, புறவு - (ஆண்) புறாக்கள், மென்சிறகரால் - (தம்) மெல்லிய சிறகுகளினாலே, ஆற்றும் - தணிக்கும், எனவும் உரைத்தனரே - என்றும் சொன்னாரே !

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉம் தகையவே காடென்றார் ; அக்காட்டுள்
இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே !

காடு - காடுகள், கல்மிசை - மலைகளின் மேலுள்ள, வேய் வாட - மூங்கில்கள் வாடும்படி, கனை கதிர் - (சூரியனுடைய) நெருங்கிய கிரணங்கள், தெறுதலால் - சுடுதலால், துன்னரூஉம் தகையவே - சேர்தற்கு அரிய தன்மையினை உடையனவாய் இருக்குமே, என்றார் - என்று

கூறினர் ; அக்காட்டுள் - (ஆனல்) அந்தக் காடுகளில், இன் நிழல் இன்மையான்-இனிய நிழல் இல்லாமையால், வருந்திய மடப்பிணைக்கு-வருத்தமுற்ற இளமையையுடைய பெண்மானுக்கு, கலை - ஆண் மானனது, தன் நிழலை கொடுத்து அளிக்கும் - (தான் நின்று) தன் நிழலைக் கொடுத்து (அதன் உயிரை)க் காப்பாற்றும், எனவும் உரைத்தனரே - என்றும் சொன்னரே !

(தனிச்சொல்)

எனவாங்கு,

என, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

இனைநலம் உடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர் ; மனைவயின்
பல்லியும் பாங்கொத் திசைத்தன ;
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே.

இனை - இப்படிப்பட்ட (என் நினைவை அவர்க்கு உண்டாக்கக் கூடிய), நலம் உடைய - நன்மைகளையுடைய, கானம் சென்றோர் - காட்டிற் சென்றவர், புனை நலம் - (எனது) பேரழகை, வாட்டுநர் அல்லர் - கெடுப்பவர் ஆகமாட்டார் ; மனைவயின் - (ஏனென்றால் நம்) வீட்டில், பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன - பல்லிகளும் (தகுந்த) இடத்தே (அவர் வரவிற்குப்) பொருந்திக் கூறின ; நல் எழில் உண் கணும் - நல்ல அழகையுடைய (எனது) மையுண்ட கண்ணும், இடன் ஆடும் - இடப்பக்கம் துடிக்கின்றது.

ஆல், ஏ - அசை.

இனைநலம் - (இனையநலம்) விகாரம்.

புனை நலம் - ஒரு பொருட் பன்மொழி.

பல்லி பாங்கு ஒத்து இசைத்தது பிறிதின்கண் தோற்றிய ஆக்கம் பற்றிய மருட்கை ; கண் இடன் ஆடியது தன்கண் தோன்றிய ஆக்கம்பற்றிய மருட்கை.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (10)

கலி. 12

தலைமகனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி, காட்டின் கடுமையையும், தலைவியின் மென்மையையும், வாழ்நாளது சிறுமையையும், இளமையின் அருமையையும், காமத்தின் மேன்மையையும் அவனுக்கு எடுத்துக் கூறி அவன் போக்கைத் தடுக்கின்றாள்.

இடுமுள் நெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவை ஆராற் றறுசுனை முற்றி
உடங்குநீர் வேட்ட உடம்புயங் கியானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு
வெறிநிரை வேறாகச் சார்ச்சாரல் ஓடி
நெறிமயக் குற்ற நிரம்பாநீ டத்தம்
சிறுநனி நீதுஞ்சி ஏற்பினும் அஞ்சும்
நறுநுதல் நீத்துப் பொருள்வயின் செல்வோய்!
உரனுடை உள்ளத்தை! (செய்பொருள் முற்றிய
வளமையான் ஆகும் பொருளிது என்பாய்!)
இளமையும் காமமும் நின்பாணி நில்லா;
இடைமுலைக் கோதை குழைய முயங்கும்
முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை;
கடைநாள் இதுவென் றறிந்தாரும் இல்லை;
போற்றாய் பெரும! நீ காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள்வயின் போகுவாய்!
கூற்றமும் மூப்பும் மறந்தாரோ டோரா அங்கு
மாற்றுமைக் கொண்ட வழி.

இடு - இடப்பட்ட, முள் நெடு வேலி போல - முள்ளையுடைய நீண்ட வேலியைப் போல, கொலைவர் - கொலைத்தொழிலையுடைய வேடர், கொடுமரம் - வில்லாலே, தேய்த்தார் - கொல்லப்பட்டவருடைய, பதுக்கை நிரைத்த - (உடல்கள் மறையவிட்ட) கற்குவைகள் வரிசையாய்க் கிடக்கின்ற, கடு நவை ஆர் - கொடிய குற்றம் பொருந்திய, ஆறு - வழியில், அறு சுனை - (பெரிதும் நீர்) வற்றிய சுனையை, முற்றி - சூழ்ந்து, உடங்கு நீர் வேட்ட - ஒடுங்கிய நீரை விரும்பிய,

உடம்பு உயங்கு யானை - உடம்பு வருந்துகின்ற யானைகள், கடுந்தாம் பதிபு - கடுமையான தாகத்தால் தாழ்ந்து (கைந்நீட்ட), ஆங்கு கை தெறப்பட்டு - அவ்வொடுங்கிய நீரில் (அவைகளின்) கைகள் (வெம்மை யால்) சுடப்பட்டு, வெறி நிரை வேறாக - அச்சங்கொண்ட அக்கூட்டங் கள் வேறுவேறாக, சார் சாரல் ஓடி - மலைச்சாரல்தோறும் ஓடியதனால், நெறி மயக்கு உற்ற - (பழைய) வழிகள் மயங்குதலை யடைந்த, நிரம்பா - (போகப் போகத்) தொலையாத, நீடு அத்தம் - நீண்ட காட்டிடத்தில், நீ சிறு நனி துஞ்சி - நீ (விழித்துக்கொள்ள வேண்டிய காலத்தைக் கடந்து) சிறிது பொழுது அதிகமாக உறங்கி, ஏற்பினும் - விழித்துக்கொண்டாலும், அஞ்சும் - (இச்செயல் யாதோ ஒரு காரணத்தை உடையது என்று)பயப்படுகின்ற, நறு நுதல் நீத்து-வாசனை பொருந்திய நெற்றியையுடைய மனைவியைக் கைவிட்டு, பொருள்வயின் செல்வோய் - பொருள் தேடும் பொருட்டுச் செல் பவனே! உரன் உடை உள்ளத்தை - (நீ) வலிமையுள்ள உள்ளத்தை உடையவனாயிருக்கின்றாய்! செய் பொருள் முற்றிய - தேடவேண்டிய பொருளைத் தேடி முடித்த, வளமையான் ஆகும் பொருள் - மிகுதி யாலே உண்டாகும் பயனை, இது என்பாய் - இவ்வின்ப வாழ்க்கை என்று சொல்பவனே! இளமையும் காமமும் - இளமையும் காம இன் பமும், நின் பாணி நில்லா - நின் கைக்கு அடங்கி நில்லா; கடை நாள் இது என்று - (அன்றியும்) இறக்கும் நாள் இது என்று, அறிந்தாரும் இல்லை - அறிந்தவர்களும் (இவ்வுலகில்) இல்லை; முலை இடை கோதை குழைய - (ஆதலால் நீ) முலைகளின் இடையில் மலர் மாலை வாடும்படி, முயங்கு முறை நாள் - புணரும் முறைமையினையுடைய நாட்கள், கழி தல் உறாஅமை காண்டை - (இளமைப் பருவத்தே) கழிவடையாமல் இருத்தலைப் பார்த்துக்கொள்; காமம் புகர்பட - காமதர்மம் குற்ற முற, வேற்றுமை கொண்டு - (அதனோடு) பகைகொண்டு, பொருள் வயின் போகுவாய் - பொருளின்பொருட்டுச் செல்கின்றவனே! பெரும - பெரியோனே! நீ கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு - நீ (தமக்கு வரும்) இறப்பையும் கிழத்தன்மையையும் மறந்திருக்கின்ற அறிவில்லாதாருடனே, ஓரா அங்கு மாற்றுமை கொண்ட வழி-ஓரே விதமாய் மாறுபாடு கொண்ட (பெரியோர் நிற்கின்ற) வழியினை, போற் றாய் - கைக்கொள்வாயாக.

சார்ச்சாரல் - (சாரல் சாரல்) மரூஉ.

'தாகம்' என்பது 'தாம்' என நின்றது. வேறாக - 'வேறாகி' என்னும் எச் சத்தின் திரிபு.

பதுக்கை - கற்குவை. புறநானூறு 3-ஆம் பாட்டின் 21-ஆம் வரியின் உரையை நோக்குக.

'காண்' என்னும் முன்னிலை வினை 'காண்டை' எனத் திரிந்து நின்றது.

இதனால் தலைவனுக்கு 'மூப்பு' என்னும் மெய்ப்பாடு தோன்றிப் பின்னர் அசைவு பிறந்தது தோழிக்கு நடுக்கம் பிறந்தது.

[இது கலி வெண்பா.] (11)

கலி. 13

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தலைவி தானும் அவனுடன் செல்ல விரும்பினாள். அதற்கு அவன் காட்டினது கடுமையையும், அவளது மென்மையையும் எடுத்துக் கூறி இணங்கானாயினான். ஆதலின், ஆற்றாளாய தலைவிக்குத் தோழி, "நங்காய, அவர் நம்மொடு நகையாடிச் சொன்னார்; பிரிவாரலலர்" என வற்புறுத்திக் கூறுகின்றாள்.

செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
எரிமேய்ந்த கரிவறல் வாய்புகுவ காணாவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
திரிமருப் பேறொடு தேரறற் கோட
மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க
உரல்போல் அடிய உடம்புயங் கியானை
ஊறுநீர் அடங்கலின் உண்கயம் காணாது
சேறு சுவைத்துத்தம் செல்லுயிர் தாங்கும்
புயல்துளி மாறிய போக்கரு வெஞ்சுரம்

எல்வளை எம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயிதழ் அரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறின் அவ்வடி கறுக்குந அல்லவோ?

நலம்பெறு சுடர்நுதால் எம்மொடு நீவரின்
இலங்குமான் அவிர்தூவி அன்னமென் சேக்கையுள்

துலங்குமான் மேலூர்தித் துயிலேற்பாய் மற்றுண்டை
விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை அல்லையோ?

கிளிபுரை கிளவியாய் எம்மொடு நீவரின்
தளிபொழி தளிரன்ன எழில்மேனி கவின்வாட
முளியரில் பொத்திய முழங்கழல் இடைபோழ்ந்த
வளியுறின் அவ்வெழில் வாடுவை அல்லையோ?

எனவாங்கு,

அனையவை காதலர் கூறலின் வினைவயின்
பிரிகுவர் எனப்பெரி தழியாதி திரிபுநீ இக்
கடுங்குரை அருமைய காடெனின் அல்லது
கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே.

(தரவு)

செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
எரிமேய்ந்த கரிவறல் வாய்புகுவ காணுவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
திரிமருப் பேற்றொடு தேரறற் கோட
மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க
உரல்போல் அடிய உடம்புயங் கியானை
ஊறுநீர் அடங்கலின் உண்கயம் காணாது
சேறு சுவைத்துத்தம் செல்லுயிர் தாங்கும்
புயல்துளி மாறிய போக்கரு வெஞ்சுரம்

செரு - போரில், மிகு சின வேந்தன் - மிகுகின்ற கோபத்தை யுடைய அரசன், சிவந்து இறுத்த - கோபித்து (வந்து) தங்கிய, புலம் போல - (பகைவர்) நிலத்தை (நெருப்புத் தின்றாற்) போல, எரி மேய்ந்த - நெருப்பானது தின்ற, கரி வறல் - கரியினையுடைய பாலை நிலத்திலுள்ள, பொரி மலர்ந்த அன்ன - பொரி மலர்ந்தாற் போன்ற, பொறிய மடமான் - புள்ளிகளையுடைய இளமையையுடைய மான்கள், வாய் புகுவ காணுவாய் - வாயில் புகுதற்குரிய உணவுகளைக் காணு வாய், திரி மருப்பு ஏற்றொடு - திரிந்த கொம்புகளையுடைய ஆண் மான்க ளோடு, தேர் அறற்கு ஓட - (பேய்த்)தேராகிய (கானல்) நீர்க்கு ஓட,

மரல் சாய - 'மருள்' என்னும் கற்றாழை வாடும்படி, மலை வெம்ப - மலைகள் கொதிக்க, மந்தி உயங்க - பெண்குரங்குகள் வருந்த, உரல் போல் அடிய - உரல் போன்ற அடிகளை உடையனவாகிய, உடம்பு உயங்கு யானை - உடம்பு வருந்திய யானைகள், ஊறு நீர் அடங்கலின் - ஊறும் நீர் (ஊறாமல்) அடங்குதலினால், உண் கயம் காணாது - (நீர்) உண்டற்கு (வேறு) நீர்நிலை காணாமல், சேறு சுவைத்து - சேற்றைச் சுவைத்து, தம் செல் உயிர் தாங்கும் - தமது போகின்ற உயிரைக் காக்கும், புயல் துளி மாறிய - மேகத்தின் துளி (இன்மையால்) மாறிய, போக்கு அருவெஞ்சுரம் - போதற்கரிய கொடிய காட்டில்

'ஓட', 'வெம்ப', 'உயங்க' என்னும் வினையெச்சங்கள் 'மாறிய' என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிகின்றன.

ஏறாடு - (ஏற்றாடு) விகாரம்.

தேர் - (பேய்த்தேர்) முன் மொழி கெட்டுப் பின் மொழி நிலையல்.

(தாழிசை)

எல்வளை எம்மோடு நீவரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயிதழ் அரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறின் அவ்வடி கறுக்குந அல்லவோ ?

எல் வளை - ஒளியினையுடைய வளைகளை உடையவளே, எம்மொடு நீ வரின் - எம்மோடு நீ வருவாயானால், நின் - உனது, மெல்லியல் - மெல்லிய தன்மை, மேவந்த - பொருந்திய, சீறடி தாமரை - சிறிய அடிகளாகிய தாமரை மலர்கள், கல் உறின் - கற்களைத் தீண்டுமானால், அ அடி - அவ்வடிகள், அல்லி சேர் - அக இதழ்கள் பொருந்திய, ஆய் இதழ் - அழகிய இதழ்கள், அரக்கு தோய்ந்தவை போல - சாதிலிங்கக் குழம்பிலே தோய்ந்தபோது தோன்றுவனபோல, கறுக்குந அல்லவோ - கறுப்பன அல்லவோ ?

யாழ - அசை.

நலம்பெறு சுடர்நுதால் எம்மோடு நீவரின்
இலங்குமான் அவிர்தூவி அன்னமேன் சேக்கையுள்
துலங்குமான் மேலூர்தித் துயிலேற்பாய் மற்றண்டை
விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை அல்லையோ ?

நலம் பெறு - அழகு பெற்ற, சுடர் நுதால் - ஒளியினையுடைய நெற்றியை உடையவளே, எம்மொடு நீ வரின்-எம்மோடு நீ வருவாயா னால், துலங்கு - விளங்குகின்ற, மான்மேல்-(மரத்தாற் செய்த) சிங்கத் தின்மேல் (ஏற்றிய), ஊர்தி - கட்டிலில், இலங்கு மாண் அவிர் - ஒளி விடும் மாட்சிமை விளங்கும், அன்ன தூவி மென்சேக்கையுள் - அன் னத் தூவியாற் செய்த மெல்லிய படுக்கையில், துயில் ஏற்பாய் - உறக்கத்தைக் கொள்ளுகின்ற நீ, ஆண்டை - அக்காட்டில், விலங்கு மான் குரல் கேட்பின் - மிருகமாகிய (உண்மைச்) சிங்கத்தின் குரலைக் கேட்டால், வெருவுவை அல்லையோ - அஞ்சுவை அல்லையோ ?

'மான்' ஈண்டுச் சிங்கத்தை உணர்த்திற்று.

தூவி - புணர்ச்சிக் காலத்தில், அன்னத்தின் அடிவயிற்றிலிருந்து உதி ரும் இறகு.

மரச்சிங்கங்கள் கீழமையப் பெற்றமையால் கட்டிலும் 'ஊர்தி' எனப் பெற்றது.

மற்று - அசை.

கிளிபுரை கிளவியாய் எம்மோடு நீவரின்
தளிபொழி தளிரன்ன எழில்மேனி கவின்வாட
முளியரில் பொத்திய முழங்கழ லிடைபோழ்ந்த
வளியுறின் அவ்வெழில் வாடுவை அல்லையோ ?

கிளி புரை கிளவியாய் - கிளி மொழியையொக்கும் மொழியினை யுடையவளே, எம்மொடு நீ வரின் - எம்மோடு நீ வருவாயானால், தளி பொழி - மழைத்துளி விழுந்த, தளிர் அன்ன - (மாந்)தளிரைப் போன்ற, எழில் மேனி - அழகிய (உனது) நிறம், கவின் வாட - அழகு கெடும்படி, முளி அரில் - உலர்ந்த சிறு செடிகளை, பொத்திய முழங்கு அழலிடை - கவிந்துகொண்ட ஒலிக்கின்ற நெருப்பினூடே, போழ்ந்த - புகுந்து வந்த, வளி உறின் - (வெப்பமான) காற்றுனது படுமானால், அ எழில் - அவ்வழகு, வாடுவை அல்லையோ - கெடு வாய் அல்லையோ ?

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

அனையவை காதலர் கூறலின் வினைவயின்
பிரிகுவர் எனப்பெரி தழியாதி ; திரிபுறீஇக்
கடுங்குரை அருமைய காடெனின் அல்லது
கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே.

அனையவை - அத்தன்மையவற்றை, காதலர் கூறலின் - காதலர் கூறுவதால், வினைவயின் பிரிகுவர் என - போரின்பொருட்டுப் பிரிவர் என்று, திரிபு உறீஇ - (மனம்) திரிந்து, பெரிது அழியாதி - அதிகம் வருந்தாதே ; கொடுங்குழாய் - வளைந்த (மகரக்) குழையை உடையவளே, காடு கடுமை அருமைய எனின் - காடுகள் (செல்லுதற்குக்) கடுமையும் துன்பமும் உடையவை என்று சொல்லுவாராயின், நடுங்குதல் காண்மார் - (நினது மெய்ந்) நடுக்கத்தைக் காண்டற்கு, நகை குறித்தனரே அல்லது - (ஒரு) விளையாட்டைக் குறித்துக் கூறினரே அல்லாமல், துறக்குநர் அல்லர் - (அவர் நம்மை விட்டு) நீங்குபவர் அல்லர்.

குரை - அசை.

இதனால் தலைவனுக்கு இளமை பொருளாக நகையும், தலைவிக்கு அசைவும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக்கலிப்பா.] (12)

கலி. 14

தலைமகனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நோக்கி, " நீர் முன்னாள் தலைவியைப் பாராட்டிய எல்லாம் பொய் என்பதை இப்பொழுதுதான் யான் உணர்ந்தேன். இவ்வகைப்பட்ட போக்கு உமக்கு எவ்வாறு உண்டாயிற்று ?" என்று இடித்துரைத்து, அவன் செலவு நீங்கக் கூறுகின்றாள்.

அணைமருள் இன்துயில் அம்பணைத் தடமென்தோள்
துணைமலர் எழில்நீலத் தேந்தெழில் மலருண்கண்
மணமௌவல் முகையன்ன மாவீழ்வான் நிரைவெண்பல்
மணநாறும் நறுநுதல் மாரிவீழ் இருங்கூந்தல்

அலர்முலை ஆகத் தகன்ற அல்குல்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையில் பாராட்டி
இனிய சொல்லி இன்னாங்குப் பெயர்ப்ப
தினியறிந் தேனது துனியா குதலே;

பொருளல்லால் பொருளுமுண் டோவென யாழநின்
மருளிகொள் மடநோக்கம் மயக்கப்பட் டயர்த்தாயோ?

காதலார் எவன்செய்ப பொருளில்லா தார்க்கென
ஏதிலார் கூறுஞ்சொல் பொருளாக மதித்தாயோ?

செம்மையின் இகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவ தறியாயோ?

அதனால்,

எம்மையும் பொருளாக மதித்தீத்தை; நம்முள்நாம்
கவவுக்கை விடப்பெறும் பொருள்திறத்
தவவுக்கை விடுதல்; அதுமனும் பொருளே.

(தரவு)

அணைமருள் இன்துயில் அம்பணைத் தடமென்தோள்
துணைமலர் எழில்நீலத் தேந்தெழில் மலருண்கண்
மணமௌவல் முகையன்ன மாவீழ்வான் நிரைவெண்பல்
மணநாறும் நறுநுதல் மாரிவீழ் இருங்கூந்தல்
அலர்முலை ஆகத் தகன்ற அல்குல்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையில் பாராட்டி
இனிய சொல்லி இன்னாங்குப் பெயர்ப்ப
தினியறிந் தேனது துனியா குதலே;

இன் துயில் - இனிய தூக்கத்தை(க் கொள்ளுதற்குத் தகுதியான), அணை மருள் - பஞ்சணையைப் போன்ற, அம் பணை தட மென் தோள் - அழகிய பருத்த அகன்ற மென்மையான தோள்களையும், ஏந்து எழில் - மிகுந்த அழகினையுடைய, எழில் நீலத்து - அழகிய நீலோற்பலத்தினது, துணை மலர் - இரண்டாகிய மலர் போலும்,

மலர் உண் கண் - அகன்ற மையுண்ட கண்களையும், மணம் மௌவல் - வாசனையுடைய முல்லையினுடைய, முகை அன்ன - அரும்புகளைப் போன்ற, மா வீழ் - வண்டுகள் விரும்புகின்ற, வான் நிரை வெண் பல் - பெரிதும் ஒழுங்கான வெண்பற்களையும், மணம் நாறும்-வாசனை வீசுகின்ற, நறு நுதல் - நல்ல நெற்றியினையும், மாரி வீழ் இருங்கூந்தல் - மேகம் போன்ற கரிய கூந்தலினையும், அலர் முலை ஆகத்து - (அடி) அகன்ற முலைகளையுடைய மார்பினையும், அகன்ற அல்குல்-பரந்த அல்குலினையும், சில நிரை வால் வளை - சில வரிசையான வெள்ளிய வளைகளையும் உடைய, செய்யாயோ என - இலக்குமி தேவியே என்று, பல பல கட்டுரை - பலப்பலவாகிய பொருள் பொதிந்த உரைகளால், பண்டையில் பாராட்டி - முன்னே (தலைவியைக்) கொண்டாடி, இனிய சொல்லி - இனிமையான வார்த்தைகளைக் கூறி, இன்னுங்கு பெயர்ப்பது அது - (எங்களைத்) துன்பத்திலே செலுத்துவதாகிய அப்பாராட்டு, துனி ஆகுதல் - வெறுப்பாகுதலை, இனி அறிந்தேன் - இப்பொழுதுதான் உணர்ந்தேன்;

(தாழிசை)

பொருளல்லால் பொருளுமுண் டோவென யாழநின்
மருளிகோள் மடநோக்கம் மயக்கப்பட் டயர்த்தாயோ ?

பொருள் அல்லால் பொருளும் உண்டோ என - (செல்வப்) பொருளே அல்லாமல் (நன்கு மதிக்கும்) பொருளும் வேறு உண்டோ என்று, நின் மருளி கொள் மட நோக்கம் - நினது மயக்கங்கொண்ட அறியாமையையுடைய எண்ணத்தினால், மயக்கப்பட்டு அயர்த்தாயோ- (நீ) மயக்கப்பட்டு (எம்மீதுள்ள அன்பை) மறந்தாயோ ?

யாழ - அசை.

மருளி - இ பகுதிப்பொருள் விகுதி.

காதலார் எவன்செய்ப பொருளில்லா தார்க்கென
ஏதிலார் கூறுஞ்சொல் பொருளாக மதித்தாயோ ?

பொருள் இல்லாதார்க்கு - (கையில்) செல்வம் இல்லாதவர்க்கு, காதலார் எவன் செய்ப - (அவரால்) காதலிக்கப்பட்டார் என்ன உதவியைச் செய்வர், என - என்று, ஏதிலார் கூறும் சொல் - அயலார் கூறும் சொற்களை, பொருளாக மதித்தாயோ - பொருளுடையனவாக (நீ) மதித்தாயோ ?

செம்மையின் இகந்தோரீஇப் பொருள்செய்வார்க் கப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவ தறியாயோ ?

செம்மையின் இகந்து ஓரீஇ - நன்னெறியினை விட்டு நீங்கி, பொருள் செய்வார்க்கு - பொருள் தேடுவார்க்கு, அ பொருள்-அந்தப் பொருளானது, இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ - இப்பிறப்பிலும் இனி வரும் பிறப்பிலும் பகையாய் முடிதலை (நீ) அறியாயோ ?

(தனிச்சொல்)

அதனால்,

அதனால் - ஆகையால்,

(சுரிதகம்)

எம்மையும் பொருளாக மதித்தீத்தை ; நம்முள்நாம்
கவவுக்கை விடப்பெறும் பொருள்திறத்
தவவுக்கை விடுதல் ; அதுமனும் பொருளே.

எம்மையும் பொருளாக மதித்தீத்தை - எம்மையும் பொருளாக மதிப்பாயாக ; நம்முள் நாம் - நமக்குள்ளே நாம், கவவு கைவிட - (முயங்கின) முயக்கத்தைக் கைவிடுவதால், பெறும் பொருள் திறத்து - அடையப்பெறும் பொருளினிடத்து, அவவு கைவிடுதல் - அவாவை விட்டுவிடுவாயாக ; அதுவே மனும் பொருள் - அதுவே நிலைபெறும் பொருளாம்.

'மதி' என்னும் முன்னிலை ஏவல் 'மதித்தீத்தை' எனத் திரிசொல் ஆயிற்று.

இதனால் தலைவனுக்கு இழிவும், தோழிக்குச் சூழ்ச்சியும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (13)

கலி. 15

பிரிவு உணர்த்திய தலைமகனுக்குத் தோழி அவன் பிரிவால் தலைவி இழப்பன இவை என்பதையும், அவை அவன் பிரிந்துபோய்ப் பெறுவனவற்றால் திரும்பப் பெறக்கூடுவன அல்ல என்பதையும்,

அவன் அடைய விரும்புவன மனைவியோடிருந்தே நாளும் பெறக் கூடுவன என்பதையும் எடுத்துக் கூறுகின்றாள்.

அரிமான் இடித்தன்ன அஞ்சிலை வல்வில்
புரிநாண் புடையின் புறங்காண்டல் அல்லால்
இணைப்படைத் தானை அரசோ டுறினும்
கணைத்தொடை நாணும் கடுந்துடி ஆர்ப்பின்
எருத்து வலிய எறுழ்நோக் கிரலை
மருப்பின் திரிந்து மறிந்துவீழ் தாடி
உருத்த கடுஞ்சினத் தோடா மறவர்
பொருள்கொண்டு புண்செயின் அல்லதை அன்போ
டருள்புறம் மாறிய ஆரிடை அத்தம்

புரிபுநீ புறம்மாறிப் போக்கெண்ணிப் புதிதீண்டிப்
பெருகிய செல்வத்தால் பெயர்த்தரல் ஒல்வதோ
செயலையம் தளிரேய்க்கும் எழில்நலம் அந்நலம்
பசலையால் உணப்பட்டுப் பண்டைநீர் ஒழிந்தக்கால்?

பொய்யற்ற கேள்வியால் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தால் மறுத்தரல் ஒல்வதோ
தீங்கதிர் மதியேய்க்கும் திருமுகம் அம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்?

பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்துநீ
மன்னிய புணர்ச்சியால் மறுத்தரல் ஒல்வதோ
புரியவிழ் நறுநீலம் புரையுண்கண் கலுழ்பானத்
திரியுமிழ் நெய்யேபோல் தெண்பனி உறைக்குங்கால்?

எனவாங்கு,

அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்;
வளமையோ வைகலும் செயலாகும்; மற்றிவள்
முளைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ இறந்த பின்னே?

(தரவு)

அரிமான் இடித்தன்ன அஞ்சிலை வல்வில்
புரிநாண் புடையின் புறங்காண்டல் அல்லால்
இணைப்படைத் தானை அரசோ டுறினும்
கணைத்தொடை நாணும் கடுந்துடி ஆர்ப்பின்
எருத்து வலிய எறுழ்நோக் கிரலை
மருப்பின் திரிந்து மறிந்துவீழ் தாடி
உருத்த கடுஞ்சினத் தோடா மறவர்
பொருள்கொண்டு புண்செயின் அல்லதை அன்போ
டருள்புறம் மாறிய ஆரிடை அத்தம்

இணை படை தானையோடு - (வந்து) கூடுதலையுடைய ஆயுதங்களையுடைய சேனையோடு, அரசு உறினும் - அரசர்கள் (போர் செய்ய வந்து) சேர்ந்தாலும், அம் சிலை வல்வில்-அழகிய சிலைமரத்தால் செய்யப்பட்ட வலிய வில்லினது, புரி நாண் - முறுக்குதலையுடைய கயிற்றிலிருந்து (எழுந்த), அரிமான் இடித்த அன்ன - சிங்கம் கர்ஜித்தாற் போன்ற, புடையின் - ஒலியாலே, புறங்காண்டல் அல்லால் - (அவ்வரசர்களை) முதுகு காண்டலன்றி, கணை தொடை நாணும் - அம்பை (வில்லிலே) தொடுத்தலை நாணும், கடுந்துடி ஆர்ப்பின் - கடிய துடியினது ஆரவாரத்தினையும், எருத்து வலிய - கழுத்து வலிய, எறுழ் நோக்கு இரலை - வலிமையான பார்வையினையுடைய கலைமானினது, மருப்பின் திரிந்து - கொம்புபோலத் திரிந்து, மறிந்து வீழ் தாடி - முறுக்குண்டு தாழ்கின்ற தாடியினையும், உருத்த கடுஞ்சினம் - மிக்க கடிய சினத்தினையுமுடைய, ஓடா மறவர் - (வலி) கெடாத மறவர், பொருள் கொண்டு - (வழிப் போவாருடைய) பொருளைப் பறித்துக்கொண்டு, புண் செயின் அல்லதை - (அவர்க்குக்) காயத்தை உண்டாக்குதல் அன்றி, அன்போடு அருள் புறம் மாறிய - அன்போடு அருளும் அவ்விடத்தை விட்டு நீங்கிய, ஆர் இடை அத்தம் - (கடத்தற்கு) அரிய இடத்தையுடைய காட்டிலே

'நாணும் மறவர்' எனக் கூட்டுக.

'அரசோடு' என்பதிலுள்ள 'ஒடு' உருபு 'சேனையோடு' எனப் பிரித்துக் கூட்டப்பட்டது. அல்லதை - வினைத்திரிசொல்.

(தாழிசை)

புரிபுநீ புறம்மாறிப் போக்கெண்ணிப் புதிதீண்டிப்
பெருகிய செல்வத்தால் பெயர்த்தரல் ஒல்வதோ

செயலையம் தளிரேய்க்கும் எழில்நலம் அந்நலம்
பசலையால் உணப்பட்டுப் பண்டைநீர் ஒழிந்தக்கால்?

எழில் நலம் - (தலைவியின்) அழகுடைய நிறம், *செயலை அம் தளிர் ஏய்க்கும்* - அசோக மரத்தின் அழகிய தளிரின் நிறத்தை ஒக்கும்; *அ நலம்* - அந்நிறம், *பசலையால் உணப்பட்டு* - பசலையால் உண்ணப் பட்டு, *பண்டை நீர் ஒழிந்தக்கால்* - (தன்) பழைய இயல்பை விட்டால், *நீ புறம் புரிபு* - நீ புறப்பொருளை விரும்பி, *மாறி* - (அகப்பொருளைக்) கைவிட்டு, *போக்கு எண்ணி* - போதலைக் கருதியதால், *புதிது ஈண்டி பெருகிய* - புதிதாகத் திரண்டு பெருகிய, *செல்வத்தால்* - செல்வத்தி னாலே, *பெயர்த்தரல் ஒல்வதோ* - (அப்பழைய இயல்பு) மீட்டல் கூடுவதோ? (அன்றே)

தளிர் - ஆகுபெயர்.

பொய்யற்ற கேள்வியால் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தால் மறுத்தரல் ஒல்வதோ
தீங்கதிர் மதியேய்க்கும் திருமுகம் அம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்?

திரு முகம் - (தலைவியின்) அழகிய முகம், *தீய் கதிர் மதி ஏய்க்கும்* - இனிய கிரணங்களையுடைய சந்திரனையொக்கும்; *அ முகம்* - அம்முகமானது, *பாம்பு சேர் மதி போல* - பாம்பால் விழுங்கப்பட்ட சந்திரனைப் போல, *பசப்பு ஊர்ந்து தொலைந்தக்கால்* - பசப்புப் பரந்து கெட்டால், *புரையோரை படர்ந்து நீ* - பெரியோரை அடைந்து நீ (கற்ற), *பொய் அற்ற கேள்வியால்* - பொய்யற்ற (நூற்)கேள்வியா லும், *மை அற்ற படிவத்தால்* - குற்றமற்ற விரதத்தாலும், *மறுத் தரல் ஒல்வதோ* - (அம்முகத்தின் முன்னைய பொலிவு) மீட்டல் கூடுவதோ? (அன்றே)

பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்துநீ
மன்னிய புணர்ச்சியால் மறுத்தரல் ஒல்வதோ
புரியவிழ் நறுநீலம் புரையுண்கண் கலுழ்பாறத்
திரியுமிழ் நெய்யேபோல் தெண்பனி உறைக்குங்கால்?

புரி அவிழ் - முறுக்கு அவிழ்ந்த, *நறு நீலம் புரை உண் கண்* - வாசனையுள்ள நீலோற்பலத்தையொக்கும் மையுண்ட கண்கள், *கலுழ்பு ஆற* - அழுது இடைவிடாமல், *திரி உமிழ் நெய்யே போல்* - (எரி

கின்ற) திரி கக்கிய நெய்யைப் போல, தெண் பனி உறைக்குங்கால் - தெளிவான நீரைத் துளிக்குங்கால் (நீங்கும் கண் பொலிவு), பின்னிய தொடர் நீவி - (உன்னைப்) பிணித்த (ஆசையாகிய) சங்கிலியினின்றும் விலகி, பிறர் நாட்டு படர்ந்து - பிறர் நாட்டிடத்தே சென்று, நீ மன்னிய புணர்ச்சியால் - நீ (கூடிய) நிலைபெற்ற (தத்துவ ஞானத்தின்) சேர்க்கையாலே, மறுத்தரல் ஒல்வதோ - மீட்டல் கூடுவதோ? (அன்றே)

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்;
வளமையோ வைகலும் செயலாகும்; மற்றிவள்
முளைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ இறந்த பின்னே?

அனையவை-(யான் சொன்ன) அக்கருத்துக்களை, போற்றி - பாதுகாத்து, நினைஇயன - (நீ) நினைந்து தேடுகின்றவற்றை, நாடி காண் - ஆராய்ந்து பார்; வளமையோ - (அக்கல்வியால் உண்டாகும்) வளப்பமோ, வைகலும் செயலாகும் - (இவ்விடத்திலிருந்தே) நாடோறும் செய்துகொள்ளுதல் கூடும்; மற்று - ஆனால், முளை நிரை முறுவலார் ஆயத்துள் - (நாணல்) முளையையொத்த வரிசையான பற்களையுடைய பெண்கள் கூட்டத்துள்ளே, எடுத்து ஆய்ந்த இவள் இளமையும் - உயர்வாக எடுத்து ஆராய்ந்த இவளது இளமைப் பருவமும், இறந்த பின் - கெட்ட பின்பு, தருவதோ - தருவதொன்றோ? (அன்றே)

வளமையோ - ஓ இழிவு சிறப்பு.

இளமையும் - உம் உயர்வு சிறப்பு.

மற்று - வினைமாற்று.

இதனால் தலைவனுக்கு அசைவும், தோழிக்கு இழிவும் தோன்றின.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (14)

கலி. 16

தலைவன் பொருள்தேடும்பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிந்தான். அவன் பிரிவிற்கு வருந்திய தலைவியைத் தோழி நோக்கி, "நங்காய், 'நம் தலைவர்க்குக் காட்டிடத்தே கருணை செய்யும்படி மேகம், சூரியன், வாயுதேவன் என்னும் தெய்வங்களை வணங்கலாமென்றால், அங்ஙனம் செய்தல் நம் கற்பிற்குத் தகுதியன்று ; என் செய்வது ?' என்று ஏங்கிக் கூறிக்கூறி நீ கவலை கொள்ளாதே ; நம் தலைவர் மீண்டனர் !" எனக் கூறுகின்றாள்.

பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
ஆடெழில் அழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கால் நினைப்பதொன் றுடையேன்;மன் அதுவுந்தான்!

தொன்னலம் தொலைபீங்கியாம் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநம் காதலர் துறந்தேகும் ஆரிடைக்
கன்மிசை உருப்பறக் கனைதுளி சிதறென
இன்னிசை எழிலியை இரப்பவும் இயைவதோ ?

புனையிழாய் ஈங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய ஆரிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ ?

ஒளியிழாய் ஈங்குநாம் துயர்கூரப் பொருள்வயின்
அளியொரீஇக் காதலர் அகன்றேகும் ஆரிடை
முளிமுதல் மூழ்கிய வெம்மைதீர்ந் துறுகென
வளிதரும் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ ?

எனவாங்கு,

செய்பொருள் சிறப்பெண்ணிச் செல்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறனோக்கித் தெருமரல் தேமொழி ;
வறனோடின் வையகத்து வான்தரும் கற்பினாள்
நிறனோடிப் பசப்பூர்தல் உண்டென
அறனோடி விலங்கின்றவர் ஆள்வினைத் திறத்தே !

(தரவு)

பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
ஆடெழில் அழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கால் நினைப்பதோன் றுடையேன்;மன் அதுவுந்தான் !

பாடு இன்றி - மூடுதல் இன்றி, பசந்த கண் - பொலிவு இழந்த கண்கள், பைதல பனி மல்க - துன்பம் உடையனவாய் நீர் பெருக, வனப்பு ஓடி - நிறம் கெட்டு, வாடுபு - வாடி, வணங்கு இறை வளை ஊர - வளைந்த முன்கையினின்று வளைகள் கழல, ஆடு எழில் அழிவு-வெற்றியையுடைய அழகின் அழிவுக்கு, அஞ்சாது அகன்றவர் திறத்து - அஞ்சாமல் பிரிந்தவரிடத்தில், இனி நாடுங்கால் - இப்பொழுது ஆராயுங்கால், நினைப்பது ஒன்று உடையேன் - (யான் செய்ய) நினைப்பதொரு செயல் உடையேன்; அதுவும் மன் - (ஆனால்) அச்செயலும் நம் கற்பிற்குப் பொருந்துவதன்றாய் இருக்கின்றதே !

மன் - கழிவு.

தான் - அசை.

(தாழிசை)

தொன்னலம் தொலைபீங்கியாம் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநம் காதலர் துறந்தேகும் ஆரிடைக்
கன்மிசை உருப்பறக் கனைதுளி சிதறென
இன்னிசை எழிலியை இரப்பவும் இயைவதோ ?

தொல் நலம் தொலைபு - முன்னைய அழகு கெட்டு, ஈங்கு யாம் துயர் உழப்ப - இவ்விடத்தில் நாம் (பிரிவுத்) துன்பத்தால் வருந்த, நம் காதலர் துறந்து - நமது அன்பர் (நம்மைக்) கைவிட்டு, உள்ளார் - நினையாராய், துன்னி - (பொருள்மேல் அன்பு) பொருந்தி, துறந்து - (நம்மைவிட்டு) நீங்கி, ஆர் இடை-(போகும்) அரிய வழியிலுள்ள, கல் மிசை உருப்பு அற - கற்களின்மீது (உண்டான) வெப்பம் நீங்கும்படி, கனை துளி சிதற என - நெருங்கிய துளிகளைச் சிதறுவாயாக என்று, இன் இசை எழிலியை - இனிய ஓசையையுடைய மேகத்தை, இரப்பவும் - வேண்டலும், இயைவதோ - (நம் கற்பிற்குப்) பொருந்துவதொரு செயலோ ? (அன்றே)

'சிதற என'—அகரம் தொக்குப் புணர்ந்தது.

'இரப்ப' என்னும் வினையெச்சம் தொழிற்பெயர்ப் பொருட்டாய் நின்றது.

புனையிழாய் ஈங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய ஆரிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ?

புனை இழாய் - அலங்கரிக்கப்பட்ட அணி உடையவளே, காதலர்- அன்பர்,ஈங்கு நாம்-இவ்விடத்தில் நாம்,புலம்பு உற-தனிமையுற்றிருக்க, பொருள் வெஃகி - பொருளை விரும்பி, முனை என்னார் - பகைவரது நிலம் என்று நினையாராய், முன்னிய - (போதற்கு) நினைத்த, ஆர் இடை - அரிய வழியிலே உள்ள, சினை வாட - மரக்கிளைகள் வாடும்படி, சிறக்கும் நின் சினம் - அதிகப்படுகின்ற நினது கோபம், தணிந்தீக - தணிக, என - என்று, கனை கதிர் கனலியை - நெருங்கிய கிரணங்களை உடைய சூரியனை, காமுறல்-நாம் வேண்டிக்கொள்ளுதல், இயைவதோ- (நம் கற்பிற்குப்) பொருந்துவதொரு செயலோ? (அன்றே)

'தணிக' என்னும் வியங்கோள் 'தணிந்தீக' என வினைத் திரிசொல் ஆயிற்று.

ஒளியிழாய் ஈங்குநாம் துயர்கூரப் பொருள்வயின்
அளியொரீஇக் காதலர் அகன்றேகும் ஆரிடை
முளிமுதல் மூழ்கிய வெம்மைதீர்ந் துறுகென
வளிதரும் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ?

ஒளி இழாய் - ஒளியினையுடைய அணிகளை உடையவளே, காதலர் - அன்பர், ஈங்கு நாம் துயர் கூர - இவ்விடத்தில் நாம் துன்பம் மிக, அளி ஒரீஇ - அன்பு நீங்கி, பொருள்வயின் - பொருளின் பொருட்டு, அகன்று ஏகும் ஆர் இடை - நீங்கிப் போகும் அரிய வழியிலே, முளி முதல் மூழ்கிய - காய்ந்த சிறு தூறுகளில் படிந்து வந்த, வெம்மை தீர்ந்து - வெப்பம் மாறி, உறுக என - (அவர்மேல்) வீசுவாயாக என்று, வளி தரு செல்வனை - காற்றினைக் கொடுக்கும் (வாயு) தேவனை, வாழ்த்தவும் இயைவதோ - துதித்தலும் (நம் கற்பிற்குப்) பொருந்துவதொரு செயலோ? (அன்றே)

பிறப்புவகையாற் சிறந்த தேவரோடு மேகமும் சிறப்புவகையால் வைத்து எண்ணப்படுதல் வழக்கு ஆகலின், அது தெய்வம் ஆயிற்று. (தொல் - பொருள் - 81.)

கற்புடைய மங்கை தன் கணவனையன்றி ஏனைய கடவுளர்களைத் தொழுதல் முறைமையன்றாகலான், இங்ஙனம் தலைவி கூறலாயினள்.

'வாழ்த்த' என்னும் வினையெச்சம் தொழிற்பெயர்ப் பொருட்டாய்நின்றது.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று சொல்லி,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

செய்பொருள் சிறப்பெண்ணிச் செல்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறனோக்கித் தெருமரல் தேமொழி ;
வறனோடின் வையகத்து வான்தரும் கற்பினாள்
நிறனோடிப் பசப்பூர்தல் உண்டெனா
அறனோடி விலங்கின்றவர் ஆள்வினைத் திறத்தே !

தே மொழி - இனிய மொழியை உடையவளே, செய் பொருள் சிறப்பு எண்ணி - (தாம்) தேடும் பொருளால் உண்டாகும் சிறப்புக் களை நினைத்து, செல்வார் மாட்டு - போகின்ற தலைவரிடத்தில், இனை யன - இத்தன்மையனவாகிய, தெய்வத்து திறன் நோக்கி - தெய்வங் களின் (நீ வணங்கலாகா) இயல்பினைக் கருதி, தெருமரல் - கலங்காதே; வையகத்து - இவ்வுலகத்தில், வறன் ஓடின் - வறப்புக்காலம் பரவு மாயின், வான் தரும் கற்பினாள் - (அப்பொழுது) மழையைப் பெய் விக்கும் கற்பினையுடையாளுடைய, நிறன் ஓடி - நிறம் கெட்டு, பசப்பு ஊர்தல் உண்டு என - பசப்பு நிறம் பரவுதல் உண்டாகுமே என்று (அஞ்சி), அவர் ஆள்வினைத்திறத்தே - அவர் கொண்ட முயற்சியி னிடையே, அறன் ஓடி விலங்கின்று - அறக்கடவுள் ஓடி விலக்கிற்று !

கற்புடைய மகளிர்க்குக் கடவுளரும் குற்றேவல் செய்வர் ஆதலின், 'அறன் ஓடி விலங்கின்று' என்றாள்.

"தேமொழி, நீ, ' இயைவதோ, இயைவதோ, இயைவதோ ' என்று சொல் லித் தெருமரல், அறன ஓடி விலங்கின்று" என்று முடித்துக்கொள்க.

இதனால் தலைவிக்குப் ' புணர்வு ' என்னும் உவகையும், தலைவனுக்கு அசை வும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக்கலிப்பா.] (15)

கலி. 17

திறை தந்த பகைவர் நாட்டைக் காக்கும்பொருட்டுத் தலைவன் பிரியப்போவதைத் தலைவி உணர்ந்து நடுங்கினாள். அதனைக் கண்ட

தோழி, தலைவனையடைந்து தலைவியினது ஆற்றாமையையும், அவன் பிரியின் அவள் இழப்பனவற்றையும் எடுத்துக் கூறி அவன் செலவை விலக்கினாள். பின்னர் அவள் அச்செய்தியைத் தலைவிக்குக் கூறுகின்றாள்.

படைபண்ணிப் புனையவும் பாமாண்ட பலவணைப்
புடைபெயர்ந் தொடுங்கவும் புறஞ்சேர உயிர்ப்பவும்
உடையதை எவன்கொலென் றாறளந் தவர்வயின்
நடைசெல்லாய் நனியேங்கி நடுங்கற்காண் நறுநுதால்!

தொல்லெழில் தொலைபிவள் துயருழப்பத் துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன்! வலிப்பளவை
நீள்கதிர் அவிர்மதி நிறைவுபோல் நிலையாது
நாளினும் நெகிழ்போடும் நலனுடன் நிலையுமோ?

ஆற்றல்நோய் அடவிவள் அணிவாட அகன்றுநீ
தோற்றஞ்சால் தொகுபொருள் முயறிமன்! முயல்வளவை
நாற்றஞ்சால் நனிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்
கூற்றாழ்போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ?

வகையெழில் வனப்பெஞ்ச வரைபோக வலித்துநீ
பகையறு பயவினை முயறிமன்! முயல்வளவைத்
தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ?

எனவாங்கு,

பொருந்தியான் தான்வேட்ட பொருள்வயின் நினைந்தசொல்
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்தாகி மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே!

(தரவு)

படைபண்ணிப் புனையவும் பாமாண்ட பலவணைப்
புடைபெயர்ந் தொடுங்கவும் புறஞ்சேர உயிர்ப்பவும்

உடையதை எவன்கொலென் றூறளந் தவர்வயின்
நடைசெல்லாய் நனியேங்கி நடுங்கற்காண் நறுநுதால்!

படை பண்ணி - (தலைவர் தம்) ஆயுதங்களைத் துடைத்து, புனையவும் - (அவற்றை) அலங்கரிக்கவும், பா மாண்ட - அகலம் மிகுந்த, பல அணை - பலவாகிய (ஐந்து) அணைகளைக் கொண்ட படுக்கையிலே, புடை பெயர்ந்து - (அவர்) ஒரு பக்கமாக ஒதுங்கி, ஒடுங்கவும் - ஒடுங்கிக் கிடக்கவும், புறம் சேர - (நீ அவர்) முதுகைச் சேர்ந்து படுக்க, உயிர்ப்பவும் - (அவர் அது கண்டு, 'ஒரே படுக்கையிலும் பிரிந்து கிடக்கப் பொறாது இங்ஙனம் அணைந்து கிடக்கின்ற இவள் நாம் காடு இடையிட்டுப் பிரிந்தால் எங்ஙனம் ஆற்றியிருப்பாள்!' என்று நினைத்துப்) பெருமூச்சு விடவும், உடையதை எவன் என்று - (நீ அது கண்டு ' இவர் தம் மனத்திற்) கொண்ட காரியம் யாதோ ' என்று (எண்ணி), ஊறு அளந்து - (உம் கூட்டத்திற்கு) இடையூறு (வருமென்று) கருதி, அவர்வயின் - அத்தலைவரிடம், நடை செல்லாய் - (அன்பு கொண்டு செய்யும்) செயல்களைச் செய்யாதவளாய், நறுநுதால்- நல்ல நெற்றியையுடையவளே! நனி ஏங்கி நடுங்கல் - (நீ) மிகவும் ஏங்கி நடுங்காதே.

உடையதை - திரிசொல்.

கொல், காண் - அசைகள்.

படை பண்ணிப் புனைதலை,

" வேலும் இலங்கிலை துடைப்ப பலகையும்
பீலி சூட்டி மணியணி பவ்வே " —(நற்றிணை, 177.)

என்பதனால் அறிக.

ஐந்து அணைகள் - மயிர்ச்சேணம், செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத் தூவி, சிறுபூளை என்ற ஐந்தினால் தனித்தனி அமைக்கப்பெற்ற அணைகள்.

(தாழிசை)

தொல்லெழில் தொலைபிவள் துயருழப்பத் துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன்! வலிப்பளவை
நீள்கதிர் அவிர்மதி நிறைவுபோல் நிலையாது
நாளினும் நெகிழ்போடும் நலனுடன் நிலையுமோ?

தொல் எழில் தொலைபு - முன்னைய அழகு கெட்டு, இவள் துயர் உழப்ப - இவள் துன்பத்தால் வருந்தும்படி, துறந்து நீ - (இவளை) நீங்கி நீ, வல்வினை - வலிதாகிய காவலினால், வயக்குதல் -

(திறை தந்த பகைவர் நாட்டை) விளங்கச் செய்தற்கு, வலித்தி மன் - துணிகின்றாய் பெரிதும்! வலிப்பு அளவை-(அங்ஙனம் நீ) துணிதலைச் செய்யும் காலத்தில், நீள் கதிர் அவிர் மதி நிறைவு போல் - நீண்ட கதிர்கள் விளங்குகின்ற சந்திரனது நிறைவு (நாளடைவிற் குறைவது) போல, நிலையாது - நிலை நில்லாமல், நாளினும் நெகிழ்பு ஓடும் நலன் - நாள்தோறும் (தன் நிலை) குலைந்து கெடும் அழகு, உடன் நிலையுமோ - இவளுடன் நிலைபெறுமோ ?

ஆற்றல்நோய் அடவிவள் அணிவாட அகன்றுநீ
தோற்றஞ்சால் தொகுபொருள் முயறிமன் ! முயல்வளவை
நாற்றஞ்சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்
கூற்றூழ்போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ ?

ஆற்றல் நோய் - வலிமையை உடைய (காம) நோய், அட - வருத் தலாலே, இவள் அணி வாட அகன்று நீ - இவள் அழகு கெடும்படி நீங்கி நீ, தோற்றம் சால் - புகழ் மிக்க, தொகுபொருள் - திரளும் பொருளை(த் தேடுதற்கு), முயறி மன் - முயல்கின்றாய் பெரிதும் ! முயல்வு அளவை - (அங்ஙனம் நீ) முயற்சிசெய்யுங்காலத்தில், நாற்றம் சால் - மணம் மிக்க, நளி பொய்கை அடை - பெருமையை உடைய பொய்கையை அடைந்துள்ள, முதிர் முகையிற்கு - முதிர்ந்த (தாமரை) முகைக்கு, கூறு ஊழ் போல் - (அதன்) கூறுகளாகிய (இதழ்களின்) உதிர்வைப் போல, குறைபடூஉம் வாழ்நாளும் - குறைந்துகொண்டே வரும் வாழ்நாளும், நிலையுமோ - (இவளுடன்) நிலைபெறுமோ ?

வகையெழில் வனப்பெஞ்ச வரைபோக வலித்துநீ
பகையறு பயவினை முயறிமன் ! முயல்வளவைத்
தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ ?

வகை எழில் - (இவளது) உறுப்புக்களின் எழிலும், வனப்பு - கட்டழகும், எஞ்ச - குறையும்படி, வரை போக - மலையிடத்துப் போக, வலித்து நீ - துணிந்து நீ, பகை அறு பயம் வினை - பகை அறுதலைப் பயனாக உடைய தொழிலில், முயறி மன் - முயல்கின்றாய் பெரிதும்! முயல்வு அளவை - (அங்ஙனம் நீ) முயலுங்காலத்தில், தகை வண்டு - அழகை உடைய வண்டுகள், புதிது உண்ண - விருந்து உண்ணும்படி, தாது அவிழ் - தேன் (தோன்ற) அலர்கின்ற, தண்

போதின் முகை - குளிர்ந்த போதுகளின் அரும்புகள், வாய்த்த - பொருந்திய, தடம் போலும் - தடாகம் (நாள்தோறும் நீர் குறைவது) போலும், இளமையும் - (நாள்தோறும் குறைந்துகொண்டே வருகின்ற) இளமையும், நிலையுமோ - (இவளுடன்) நிலைபெறுமோ?

எழிலாவது - 'இது வளர்ந்து தீர்ந்ததன்று; இன்னும் வளரும்' என்பது போன்று காட்டும் பொலிவு.

போது - பேரரும்பு.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

பொருந்தியான் தான்வேட்ட பொருள்வயின் நினைந்தசொல்
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்தாகி மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே!

பொருந்தி யான் - (தலைவனை) அடைந்து யான், தான் வேட்ட பொருள்வயின் - அவன் விரும்பிய பொருள்பற்றி, நினைந்த சொல் - நினைத்துச் சொன்ன சொற்கள், திருந்திய யாக்கையுள் - (நல்வினையால்) திருந்திய உடம்பிலே, மருத்துவன் ஊட்டிய மருந்து போல் - மருத்துவன் செலுத்திய மருந்து (பயன் தருமாறு) போல, மருந்து ஆகி - (நல்ல) மருந்தாகி, மனன் உவப்ப - (நம்) மனம் மகிழும் படி, பெரும்பெயர் மீளி - பெரும்புகழையுடைய தலைவன், பெயர்ந்தனன் செலவே - தவிர்ந்தனன் போக்கை!

பழவினையால் வரும் பிணிகள் மருத்துவன் ஊட்டும் மருந்தால் தீரா என்பவாதலின், 'திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்துபோல்' என்றான்.

இது பாலைத்திணையாகலின், தலைவன் 'மீளி' எனப்பட்டான்.

இதனால் தலைவிக்குப் 'புணர்வு' என்னும் உவகையும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (16)

கலி. 18

'பொருள்தேடப் போகின்றேன்' என்று தலைவன் கூறக் கேட்ட தோழி, அவனுக்கும் தலைவிக்கும் முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறியும், இல்வாழ்க்கையின் இலக்கணத்தை உணர்த்தியும் அவன் செலவை நீக்கினள்.

அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்பப்
பிரிந்துறை சூழாதி ஐய! விரும்பிநீ
என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பின் சுணங்கும் நினைத்துக்காண்!
சென்றோர் முகப்பப் பொருளும் கிடவா
தொழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்;
இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ? உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ றாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை; அரிதரோ
சென்ற இளமை தரற்கு.

அரும்பொருள் வேட்கையின் - அரிய பொருளிடத்துள்ள (உனது) ஆசையால், உள்ளம் துரப்ப - (உனது) ஊக்கம் செலுத்த, பிரிந்து உறை சூழாதி - (நீ தலைவியைப்) பிரிந்து போய் (வேறு நாட்டில்) தங்குதலை நினையாதே, ஐய - ஐயனே! விரும்பி நீ என் தோள் எழுதிய - விரும்பி நீ தலைவியின் தோள்களின்மேல் எழுதிய, தொய்யிலும் - கோலத்தையும், நின் மைந்து உடை மார்பின் - உனது வலிமையுள்ள மார்பினை (நினைப்பதால் அவளுக்கு உண்டாகும்), சுணங்கும் - சுணங்கையும், நினைத்துக்காண் - நினைத்துப்பார்! சென்றோர் முகப்ப - (பொருளின்பொருட்டுப்) போனவர் முகந்துகொண்டு வர, பொருளும் கிடவாது - செல்வமும் (ஓரிடத்தே குவிந்து) கிடவாது; ஒழிந்தவர் எல்லாரும் - (பொருள் தேடப் போகாதவராகிய) பிறர் எல்லாரும், உண்ணாதும் செல்லார் - உண்ணாமலும்போகார்; இளமையும் காமமும் - இளமையையும் காதலையும், ஓராங்கு பெற்றார் - (தம்முள்) ஒரே விதமாகப் பெற்ற தலைவன்தலைவியர், வளமை விழை தக்கது உண்டோ - செல்வத்தை விரும்பத்தக்கதொரு பொருளாகக்

கொள்ளுதல் உண்டோ? உள நாள் - (தமக்கு வாழ்நாளாக) உள்ள காலம் (எல்லாம்), ஒரோஒ கை-(தம்) ஒரு கையாலே, தம்முள் தழீஇ - (ஒருவர் ஒருவரைத்) தமக்குள்ளே தழுவிக்கொண்டு, ஒரோஒ கை - (தம்) மற்றொரு கையை, ஒன்றன் கூறு ஆடை - (தம்) ஒரு பக்கத்து ஆடையாக, உடுப்பவரே ஆயினும் - உடுக்கும் வறியரேயானாலும், ஒன்றினர் வாழ்க்கையே - (பிரியாது எந்நாளும்) கூடி இருக்கும் தலைவன் தலைவியரது வாழ்க்கைதான், வாழ்க்கை - வாழ்க்கை என்று சொல்லப்படும்; சென்ற இளமை தரற்கு அரிது - (பிரிவினால்) கழிந்த இளமை (மீண்டும்) கொடுத்தற்கு இயலாது.

தனக்கும் தலைவிக்கும் மனத்தால் வேற்றுமை இன்மையால், தலைவியின் தோளைத் தோழி தன் தோளாகக் கூறினள். இஃது அகப்பொருள் பற்றி வரும் வழுவமைதியின் ஒன்று. இனி இங்ஙனம் வருவனவற்றிற்கும் இக் குறிப்பே கொள்க.

சந்தனம், குங்குமம், கற்பூரம் முதலியவற்றைக் குழைத்து மகளிர் தோள்களிற் கரும்பு போலவும், மார்பிற் காமவல்லி போலவும், எழுதுகோலால் தலைவர் எழுதும் கோலம் தொய்யிலாகும்.

'சுணங்கு' என்பது இளமகளிர்க்குக் காமத்தால் உடம்பின் சிற்சில இடங்களில் தோன்றும் நிற வேறுபாடு; அது மாந்தளிர் போன்ற அவர் மேனியில் அரத்தால் அராவிய பொன்னின் பொடி தூவியது போலக் கிடக்கும்.

ஒரோஒ கை ஒன்றன் கூறு ஆடை உடுத்தலாவது: தாம் உடுத்த ஆடையின் துண்டு தம் அரையை முற்றும் மூடாமையின், மூடாத இடத்தைத் தம் கை ஒன்றாற் பொத்துதல். 'நண்ணுச் சிறுகூறை பாகம் ஓர்கை பாகம் உடுத்து' என்றார் சிந்தாமணியிலும் (2625).

'பொருளும்' என்ற இடத்து எதிரது தழீஇய எச்ச உம்மையும், 'உண்ணும்' என்ற இடத்து இறந்தது தழீஇய எச்ச உம்மையும் வந்தன.

உண்டோ - ஓ எதிர்மறை.

யாழ, அரோ - அசை.

இதனால் தோழிக்கு நலிதலும், தலைவனுக்குக் கருதலும் பிறந்தன.

[இது கட்டளைக் கலிவெண்பா.] (17)

கலி. 19

தலைவன் போரின்பொருட்டுப் பிரியப்போவதாகத் தோழியிடத்துக் கூறினன். அதற்கவள் அச்செயல் தகுதி உடையதன்று என மறுத்தாள். எனினும், அவன் பிரிவிலேயே உள்ளமுடையவனாய்

இருந்தான். ஆதலின், தோழி மனம் வருந்தி, "நீர் முன்னாள் தலைவியைப் பாராட்டியவெல்லாம் பொய்யாய் இருத்தலை அப்பொழுது அறிந்திலேன். தலைவிக்குப் பெரும்பழியை உண்டாக்கிப் பிரிய நினைக்கும் நீரும் மகனோ? நீர் பிரியின் தலைவி உயிருடன் இராள்" எனக் கூறி அவன் போக்கை நீக்குகின்றாள்.

செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய?
அகன்நகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்!
மகனல்லை மன்ற இனி!

செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல்; வினவின்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டோர்
அவலம் படுதலும் உண்டு.

செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய?
அகன்நகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்!
மகனல்லை மன்ற இனி!

ஐய - தலைவனே! செவ்விய தீவிய சொல்லி - செம்மையான சொற்களையும் இனிமையான சொற்களையும் சொல்லி, அவற்றொடு - அச்சொற்களோடு கூட, பைய முயங்கிய - (தலைவியை) மெல்லத் தழுவிய, அ ஞான்று - அந்த நாட்களில், அவை எல்லாம் - (கூறிய) அம்மொழிகளெல்லாம், பொய்யாதல் யான் யாங்கு அறிகோ - பொய்யாய் இருத்தலை யான் எங்ஙனம் அறிவேனோ? அகன் நகர் - அகன்ற வீட்டில் உள்ளாரால், கொள்ளா அலர் - பொறுக்க முடியாத அலரை,

தலைத்தந்து - (எமக்குக்) கொடுத்து, பகல் முனி வெஞ்சுரம் - சூரியன் காய்கின்ற கொடிய காட்டிற்கு, உள்ளல் இனி அறிந்தேன் - (நீ போக) நினைத்தலை இப்பொழுது அறிந்தேன்! மன்ற மகன் அல்லை - நிச்சயமாக (நீ) சிறந்த ஆண்மகன் அல்லை!

அலர் - பலர் அறிந்து தூற்றும் பழிச்சொல்.

'மகன்என்ப சிறந்தோன்' என்பது நிகண்டு.

தலைத்தந்து - ஒருசொல் நீர்மைத்து.

நகர் - வீடு ; இது ஆகுபெயராய் வீட்டிலுள்ளாரை உணர்த்திற்று.

மற்று, ஓ - அசை.

சேல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல் ; வினவின்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றமல் ஆண்டோர்
அவலம் படுதலும் உண்டு.

இனி செல் - இப்போது (நீ) போ, சென்று நீ செய்யும் வினை முற்றி - போய் நீ செய்ய விரும்புவதாகிய காரியத்தில் (ஊக்கம்) மிகுந்து (நின்று), அன்பு அற யாம் மாறி - அன்பு நீங்கும்படி யாம் (மனம்) வேறுபட்டு, உள்ள - (எம்மை) நினைக்கும்படி, துறந்த வள் - (எம்மாற்) பிரியப்பட்டவளுடைய, பண்பும் அறிதிரோ என்று - செய்தியும் அறிவீரோ என்று, வருவாரை என் திறம் யாதும் வின வல் - (இங்கிருந்து அங்கு) வருபவரைத் தலைவியின் வரலாறு எதையும் கேளாதே ; வினவின் - கேட்பாயானால் (அவள் இறந்துபோனாள் என்று அவர் உனக்குச் சொல்லலாம் ஆகலின்), பகலின் விளங்கு நின் செம் மல் - சூரியனைப் போல விளங்குகின்ற நினது தலைமையான ஆண்மை, சிதைய - கெடும்படி, தவல் அருஞ்செய்வினை - கெடுதற்கு அரிய (நீ) செய்யத் தொடங்கிய காரியம், முற்றமல் - முடியாமல், ஆண்டு ஓர் அவலம் படுதலும் உண்டு - அவ்விடத்தில் (உனக்கு) ஒரு வருத்தம் உண்டாதலும் உண்டாகலாம்.

'பண்பும்' என்பதிலுள்ள உம்மை எச்சவும்மை.

அவலம் - இழிவு பற்றியது.

' அவலம் படுதலும் உண்டு ' என்ற இடத்து ஐயவும்மை வந்தது. இதனால் தோழிக்கு அச்சமும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இது தாழிணைக்கொச்சகம்.] (18)

கலி. 20

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தலைவி, தானும் அவனுடன் செல்ல விரும்பினாள். அதற்கவன் காட்டினது கடுமையையும் அவளது மென்மையையும் எடுத்துக்கூறி இணங்கானாயினான். அதற்கவள் ஆயுளின் சிறுமையையும் இளமையின் அருமையையும் எடுத்துக் கூறித் தன்னை உடன்கொண்டு போகும்படி அவனை வற்புறுத்துகின்றாள்.

பல்வளம் பகர்பூட்டும் பயன்நிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினம் சொரிதலின்
தணிவில்வெம் கோடைக்குத் தண்நயந் தணிகொள்ளும்
பிணிதெறல் உயக்கத்த பெருங்களிற் றினந்தாங்கு
மணிதிகழ் விறல்மலை வெம்ப மண்பகத்
துணிகயம் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்

கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ ?
தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர் !
வளியினும் வரைநில்லா வாழுநாள் நும்மாகத்
தளியென உடையேன்யான் அவலங்கொண் டழிவலோ!

ஊறுநீர் அமிழ்தேய்க்கும் எயிற்றாய்நீ உணல்வேட்பின்
ஆறுநீர் இலவென அறனேக்கிக் கூறுவீர் !
யாறுநீர் கழிந்தன்ன இளமைநும் நெஞ்சென்னும்
தேறுநீர் உடையேன்யான் தெருமந்தீங் கொழிவலோ !

மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரின்தாங்கும்
மாணிழல் இலவாண்டை மரமெனக் கூறுவீர் !

நீணிழல் தளிர்போல நிறனூழ்த்தல் அறிவேன்நும்
தாணிழல் கைவிட்டியான் தவிர்தலைச் சூழ்வலோ !

எனவாங்கு,

அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர் !
கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ ? பிரியுமோ அவையே ?

(தரவு)

பல்வளம் பகர்பூட்டும் பயன்நிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினம் சோரிதலின்
தணிவில்வெங் கோடைக்குத் தண்நயந் தணிகொள்ளும்
பிணிதெறல் உயக்கத்த பெருங்களிற் றினந்தாங்கு
மணிதிகழ் விறல்மலை வெம்ப மண்பகத்
துணிகயம் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்

பல் வளம் - பல உணவுகளையும், பகர்பு ஊட்டும் - கொடுத்து (உயிர்களை) உண்பிக்கும், பயன் நிலம் பைது அற - விளைவினைத் தரும் நிலம் ஈரம் அறும்படி, செல் கதிர் ஞாயிறு - (ஆகாய வீதியிற்) செல்கின்ற கதிர்களையுடைய சூரியன், செயிர் சினம் - (தனது) மிகுந்த கோபமாகிய அனலை, சொரிதலின் - வீசுதலால், தணிவு இல் வெங்கோடைக்கு - தணிவில்லாத வெய்ய கோடை காலத்திற்கு(ப் பயந்து), தண் நயந்து அணி கொள்ளும் - குளிர்ச்சியை விரும்பி வரிசையாகச் சேர்கின்ற, பிணி தெறல் உயக்கத்த - (பசி) நோய் சுடுதலையுடைய வருத்தத்தையுடையனவாகிய, பெருங்களிற்று இனம் தாங்கு - பெரிய யானைகளின் கூட்டத்தைத் தாங்குகின்ற, மணி திகழ் விறல் மலை - மணிகள் விளங்குகின்ற பெருமை பொருந்திய மலையானது, வெம்ப - கொதிக்கவும், மண் பக - தரை வெடிக்கவும், துணி கயம் - தெளிந்த (நீருள்ள) குளங்கள், துகள் பட்ட - பொடிபட்ட, தூங்கு அழல் - (நாற்றிசையும்) பரவும் அழலையுடைய, வெஞ்சுரம் - வெய்ய காடுகள்

'வெம்ப, பக, தூங்கு அழல் வெஞ்சுரம்' என்றும், 'துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்' என்றும் கூட்டுக.

(தாழிசை)

கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ ?
தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர் !
வளியினும் வரைநில்லா வாழுநாள் நும்மாகத்
தளியென உடையேன்யான் அவலங்கொண் டழிவலோ !

கிளி புரை கிளவியாய் - கிளியினது மொழியைப் போன்ற மொழியினை உடையாய், நின் அடிக்கு எளியவோ - நின் அடிக்கு எளியவாகுமோ ? காடு - (அந்தக்) காடுகள், தளி உறுபு அறியாவே - மழைத்துளிகள் விழுதலை அறியாவே, என கூறுவீர் - என்று கூறுகின்றவரே ! வளியினும் - காற்றைக்காட்டிலும், வரை நில்லா - (ஒரு) நிலையில் நில்லாத, வாழுநாள் - (என்) வாழ்நாள், நும் ஆகத்து அளி என - உமது மார்பினுடைய அன்பு என, உடையேன் யான்-கொண்டவளாய நான், ஓ அவலம் கொண்டு அழிவல் - ஐயோ (நீர் பிரியின்) துன்பத்தால் அழிவேன் !

தலைவன் மார்பு செய்யும் அன்பையே தலைவி தனது வாழ்நாளாகக் கூறுகின்றாள்.

கிளி - ஆகுபெயர்.

ஓ - இரக்கப்பொருளது ; பிரித்துக் கூட்டப்பெற்றது.

ஊறுநீர் அமிழ்தேய்க்கும் எயிற்றாய்நீ உணல்வேட்பின்
ஆறுநீர் இலவென அறனோக்கிக் கூறுவீர் !
யாறுநீர் கழிந்தன்ன இளமைநும் நெஞ்சென்னும்
தேறுநீர் உடையேன்யான் தெருமந்தீங் கோழிவலோ !

ஊறு நீர் - (தன்னிடத்து) ஊறுகின்ற நீர், அமிழ்து ஏய்க்கும் - அமிர்தத்தை ஒக்கும், எயிற்றாய் - பற்களையுடையவளே, நீ உணல் வேட்பின் - நீ (காட்டிலே நீர்) உண்டலை விரும்பினால், ஆறு நீர் இல என - (அங்குள்ள) ஆறுகள் நீர் இல்லாதவை என்று, அறன் நோக்கி கூறுவீர் - அன்பினால் கூறுகின்றவரே ! யாறு நீர் கழிந்த அன்ன இளமை - ஆற்று நீர் (விரைவிற்) கழிந்தாற் போன்ற (எனது) இளமையை, நும் நெஞ்சு என்னும்-உமது நெஞ்சு என்று சொல்லப்படும், தேறு நீர் உடையேன் யான்-நம்பத்தகுந்த தன்மை எனக் கொண்டவளாய நான், தெருமந்து - (மனம்) கலங்கி, ஈங்கு - இவ்விடத்தில், ஓ ஒழிவல் - ஐயோ (நீர் பிரியின்) அழிவேன் !

கழிந்த ஆற்று நீர் போலக் கழிந்த இளமையும் மீண்டும் பெற முடியாதாக லின், 'யாறு நீர் கழிந்தன்ன இளமை' என்றாள்.

மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரின்தாங்கும்
மாணிழல் இலவாண்டை மரமெனக் கூறுவீர் !
நீணிழல் தளிர்போல நிறனூழ்த்தல் அறிவேன்நும்
தாணிழல் கைவிட்டியான் தவிர்தலைச் சூழ்வலோ !

மாண் எழில் - மாட்சிமைப்பட்ட அழகினையுடைய, வேய் வென்ற தோளாய் - மூங்கிலைப் போன்ற தோள்களை உடையவளே, நீ வரின் - நீ (காட்டிடத்தே) வருவாயானால், ஆண்டை மரம் - அவ் விடத்தில் உள்ள மரங்களில், தாங்கும் - (நின் இளைப்பை) ஆற்று தற்கு உரிய, மாண் நிழல் இல - மாட்சிமைப்பட்ட நிழலையுடைய மரங்கள் இல்லை, என கூறுவீர் - என்று சொல்லுகின்றவரே! நீள் நிழல் - மிகுந்த நிழலிலுள்ள, தளிர் போல - தளிர் (வெளுத்தலைப்) போல, நிறன் ஊழ்த்தல் - (நீர் பிரிந்தால் எனது) நிறம் அழிதலை, அறிவேன் யான் - அறிபவளாய நான், நும் தாள் நிழல் கைவிட்டு - உம்முடைய திருவடி நிழலை நீங்கி, தவிர்தலை சூழ்வலோ - (இங்கே) இருத்தலை (என் மனத்தாலும்) நினைப்பேனோ !

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று (யான்) கூறவும்,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர் !
கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ ? பிரியுமோ அவையே ?

காடு - அக்காடுகள், அணை அரும் வெம்மைய - (நீ) அணைதற்கரிய வெம்மையையுடையன, என கூறுவீர் - என்று கூறுகின்றவரே! கணை கழிகல்லாத - (எய்த) அம்புகள் செல்ல முடியாத, கல் பிறங்கு ஆர் இடை - கற்கள் மிகுந்துள்ள (கடத்தற்கு) அரிய வழியிலே, பணை

***ஏருத்து எழில் ஏற்றின் பின்னர்* - பருத்த கழுத்தினையுடைய அழகிய ஆண் புலியின் பின், *பிணையும் காணிரோ* - (நீங்காமல் திரிகின்ற) பெண் புலியையும் காணாதிருக்கின்றீரோ? *அவை பிரியுமோ* - அவை (ஒன்றையொன்று) பிரிதலுண்டோ ?**

ஏ - அசை.

'எங்ஙனம் ஆண் புலி பெண் புலியைப் பிரியாதோ, அங்ஙனமே நீர் என்னையும் பிரியாமல் உடன்கொண்டு செல்லுதல் வேண்டும்' என்பது கருத்து.

இதனால் தலைவிக்கு இழிவும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (19)

கலி. 21

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கி, களவுக் காலத்தில் அவன் கூறியவைகளை எடுத்துக்கூறியும், பொருளினது நிலையாமையை விளக்கியும், தலைவியினது ஆற்றாமையை அறிவித்தும் அவன் போக்கை நீக்குகின்றாள்.

பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி
ஈர்நறுங் கமழ்கடாஅத் தினம்பிரி ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயின் பிரிதல் வேண்டும் என்னும்
அருளில் சொல்லும் நீசொல் லினையே!
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி
நின்னின் பிரியலென் அஞ்சலோம் பென்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே!
அவற்றுள் யாவோ ஆயின மாஅல் மகனே!
கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்புபெயர் புறையும்;
அன்ன பொருள்வயின் பிரிவோய்! நின்னின்
றிமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே.

பால் மருள் மருப்பின் - பால்போன்ற தந்தத்தினையும், உரல் புரை பா அடி - உரல் போன்ற பரந்த அடியினையும், ஈர் நறுங்கமழ் கடாஅத்து - ஈரம் பொருந்திய வாசனை வீசுகின்ற மதத்தினையும் உடைய, இனம் பிரி ஒருத்தல் - இனத்தினின்றும் பிரிந்த ஆண் யானை, ஆறு கடி கொள்ளும் - வழியைக் காவல்கொண்டு நிற்கும், வேறு புலம் படர்ந்து - (பகைவரது) அயல் நிலத்தைச் சேர்ந்து, பொருள்வயின் - பொருளின்பொருட்டு, பிரிதல் வேண்டும் - (இவளைப்) பிரிதல்வேண்டும், என்னும் அருள் இல் சொல்லும் - என்னும் அன்பு இல்லாத சொல்லும், நீ சொல்லினையே - (இப் பொழுது) நீ சொன்னாயே ! நன்னர் நறு நுதல் நயந்தனை நீவி-நன்மை யுடைய வாசனை பொருந்திய நெற்றியை விரும்பித் தடவி, நின்னின் பிரியலென் - நின்னிடத்தினின்றும் பிரியேன், அஞ்சல் ஓம்பு - (ஆதலின்) அஞ்சுதலைத் தவிர்வாய், என்னும் நன்னர் மொழியும் நீ மொழிந்தனையே - என்னும் நல்ல மொழிகளையும் (முன்னாள்) நீ சொன்னாயே ! அவற்றுள் - மேற்குறிப்பிட்ட மொழிகளுள், மாஅல் மகனே - மயக்கத்தினையுடைய மகனே, யாவோ ஆயின - எவையோ (உண்மை) ஆனவை! பொருள்தான் - (நீ தேடுகின்ற) பொருள்தான், கிழவர் இன்னோர் என்னாது-(தனக்கு) உரியவர் இவர் என்று கருதாமல், பழவினை மருங்கின் - (அவரவரிடத்து நின்ற) பழைய (தீ) வினையாலே, பெயர்பு பெயர்பு - நீங்கி நீங்கி, உறையும் - (பிறரிடத்திலுள்ள நல்வினையாலே அவரிடம் சென்று சென்று) தங்கும்; அன்ன பொருள்வயின் - அப்படிப்பட்ட பொருளின்பொருட்டு, அமை கவின் கொண்ட தோளிணை மறந்து - மூங்கிலின் அழகைக் கொண்ட இருதோள்களை மறந்து, பிரிவோய் - பிரிந்துபோக நினைப்பவனே! மடவோள் - மெல்லிய தன்மை யுடையவளாகிய தலைவி, நின் இன்று - உன்னை இன்றி, இமைப்பு வரை - கண்ணிமைப் பொழுதும், வாழாள் - (உயிர்) வாழமாட்டாள்.

'நயந்தனை' என்பது முற்றெச்சம்.

மறந்தே - ஏ அசை.

இன்று - (இன்றி) எச்சத் திரிபு.

தன் இனத்தை விட்டுப் பிரிந்த மதங்கொண்ட யானை அவ்வழியே வருவாரைத் தாக்கக்கருதிக் காத்திருத்தல் ஆறு கடிகொள்ளுதலாகக் கூறப் பெற்றது.

இதனால் தோழிக்கு அச்சமும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இது கொச்சகம்.] (20)

கலி. 22

தலைமகனாற் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நோக்கி, களவுக்காலத்தே வேட்கை பிறக்கின்ற பருவத்தளாயிருந்த தலைவியின் நிரம்பா உறுப்புக்களை அவன் விரும்பிப் பாராட்டியதை எடுத்துக் கூறி, வேட்கை பிறந்த பருவத்தில் அவளது நிரம்பிய உறுப்புக்களை விரும்பிப் பாராட்டி உடன் உறையாமல் பிரிந்துபோதலைக் குறிப்பால் மறுத்துக் கூறுகின்றாள்.

உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை; அஃதின்றும்
புதுவ தன்றே! புலனுடை மாந்திர்!
தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடை யார்மொழிக்கண் தாவார்தாம் தந்நலம்;
தாதுதேர் பறவையின் அருந்திறல் கொடுக்குங்கால்
ஏதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை?

நறுமுல்லை நேர்முகை ஒப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னாய்; மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட் டினையோ ஐய!

நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
ஐவகை பாராட்டி னாய்; மற்றெம் கூந்தல்
செய்வினை பாராட் டினையோ ஐய!

குளனணி தாமரைப் பாசரும் பேய்க்கும்
இளமுலை பாராட்டி னாய்; மற்றெம் மார்பின்
தளர்முலை பாராட் டினையோ ஐய!

எனவாங்கு,

அடர்பொன் அவிரேய்க்கும் அவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகும் நும்மையாம் எங்கண்
படர்கூற நின்றதும் உண்டோ தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை.

(தாவு)

உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை ; அஃதின்றும்
புதுவ தன்றே ! புலனுடை மாந்திர் !
தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடை யார்மொழிக்கண் தாவார்தாம் தந்நலம் ;
தாதுதேர் பறவையின் அருந்திறல் கொடுக்குங்கால்
ஏதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை ?

புலன் உடை மாந்திர் - அறிவுடைய பெரியீர் ! உண் கடன் - (தாம்) உண்ணும் (பொருட்டு வாங்கும்) கடனை, வழி மொழிந்து - தாழ்வு சொல்லி, இரக்கும் கால் - இரந்து கேட்கும் காலத்து, முகனும் - (அவ்வாறு கடன் கேட்பார்) முகமும், தாம் கொண்டது - (அங்ஙனம்) தாம் வாங்கின கடனை, கொடுக்கும் கால்-(மீண்டும்) கொடுக்கும் காலத்து, முகனும் - (அவர்) முகமும், வேறு ஆகுதல் - வேறுபடுவது, பண்டும் இ உலகத்து இயற்கை - முன்பும் இவ்வுலகத்துள்ளார் இயல்பு ; அஃது இன்றும் புதுவது அன்றே-அஃது இந்நாளும் புதியதொன்று அன்றே ! தாய் - சித்திரம் எழுதுகின்றவள், உயிர் பெய்த-உயிரைப் புகுத்தி (எழுதிய), பாவை போல - (படத்திலுள்ள) உருவம் (தான் அழியுமளவும் தன்னை எழுதியவளது கருத்திற்கு இயைந்த குறிப்பினைப் பெற்றிருப்பது) போல, நலன் உடையார் - நற்குணம் உடையவர், தம் மொழிக்கண் நலம் தாவார்-(தாம் அழியுமளவும்) தம் மொழியிடத்து உண்மை தவறார்; தாது தேர் பறவையின் - தேனைத் தேடி உண்ணும் வண்டு (அதனை உண்ட பிறகு அப்பூவினைக் கருதாது விட்டகல்வது) போல, அருந்து - (தலைவியினை) நுகர்ந்து, இறல் கொடுக்கும் கால் - (பின்னர் அவளைக் கருதாமல் விட்டகன்று அவளுக்கு) அழிவை (நீ) கொடுக்கும் இக்காலத்து, நின் பொருள் வேட்கை - உனது பொருளாசையைப்பற்றி, ஏதிலார் கூறுவது எவன் - (உன்னோடு) யாதொரு தொடர்பும் இல்லாதவர் கூறுவது யாதுளது ?

தாம், ஒ - அசை.

‘ ஆர்ந்து ’ என்பது ‘ அருந்து ’ என விகாரப்பட்டது.

வெறுப்பினால் தோழி தன்னை 'ஏதிலார்' எனப் பிறர் போலக் கூறினான். மாந்திர் - விளி.

"பசியுடையார் அஃதில்லாரிடத்துச் சென்று தாழ்வு சொல்லி இரந்து நின்று உணவுக் கடன் பெற்றுத் தம் பசி தீர்வதுபோல, முன்னர் வேட்கையுடைய நீ வேட்கை பிறக்கின்ற பருவத்தளாய தலைவியிடத்து வந்து தாழ்வு சொல்லி இரந்து நின்று அவளது நலத்தினை நுகர்ந்து உனது வேட்கை தீர்ந்தனையே! அப்பசி தீர்த்தார் பின்னர்ப் பசியுற்றவிடத்து, 'முன்னர் எம்மாற் பசி தீர்ந்தவராய இவர் இன்று எமது பசியைப் போக்காமற்போகார்' என்று துணிந்து, அவரிடம் சென்று இரந்தவழி அவர் சிறிதும் இரங்காததுபோல, உன் வேட்கை தணித்தவள் பின்னர் வேட்கை பிறந்த பருவத்தளாயவிடத்து, 'முன்னர் என்னால் வேட்கை தணிந்தவராய இவர் இன்று எனது வேட்கையைத் தணியாமற்போகார்' என்று துணிந்து, உன்னிடம் வந்து இரந்தவழி நீ சிறிதும் இரங்கலையே!" என்பதும், "வல்லவளாய ஓர் ஓவியப் பெண் எழுதிய படத்திலுள்ள பாவை தன்னைத் தந்தவளிடத்துத் தான் பெற்ற குறிப்பினைத் தான் அழியுமளவும் காட்டத் தவறாதது போல, நல்லோர் தாம் முன்னர்க் கூறிய மொழியினைத் தாம் அழியுமளவும் காக்கத் தவறாரே! நீயோ, 'நான் உன்னை விட்டுப் பிரியேன்' என்று அந்நாள் இவட்குக் கூறிய மொழி தவறுகின்றனையே!" என்பதும் தோழியின் கருத்து.

தாய் உயிர் பெய்த பாவையின் தன்மையை 'வடுப்பிளவு அனைய கண்ணாள் வல்லவன் எழுதப்பட்ட படத்திடைப் பாவைபோன்று ஓர் நோக்கினளாகி நிற்ப'—'எழுதப்பட்ட துகிலிகைப் பாவை ஒத்தார்' என்னும் சிந்தாமணி அடிகளாலும் (1573, 2542) அறிக.

(தாழிசை)

நறுமுல்லை நேர்முகை ஒப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னாய் ;மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட் டினையோ ஐய!

ஐய - தலைவனே! நறு முல்லை - மணமுள்ள முல்லையினது, நேர் முகை ஒப்ப நிரைத்த - (தம்மில்) ஒத்த அரும்புகளைப் போல வரிசையமைந்த, செறி முறை - (எமது பற்களின்) நெருங்கிய தன்மையை, பாராட்டினாய் - (நீ முன்னே விரும்பிக்) கொண்டாடினாய்; மற்று எம் பல்லின் - ஆனால் (இப்போது அந்த) எம் பற்களினது, பறி முறை -

விழுந்து முளைத்த தன்மையை, பாராட்டினையோ - (நீ விரும்பிக்) கொண்டாடினையோ ! (இல்லையே)

ஓ - எதிர்மறை.

மற்று - வினைமாற்று.

'செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின' என்றார் குறுந்தொகையிலும் (337).

நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
ஐவகை பாராட்டி னாய்;மற்றெம் கூந்தல்
செய்வினை பாராட் டினையோ ஐய !

ஐய - தலைவனே! நெய் இடை நீவி - எண்ணெயை (எமது கூந்தல்) இடத்துத் தடவியதால், மணி ஒளி விட்டன்ன - நீலமணி ஒளி விட்டது போன்ற, ஐ வகை - (எமது கூந்தல் முடிக்கப்படும்) ஐந்து வகைகளையும், பாராட்டினாய் - (நீ முன்னே விரும்பிக்) கொண்டாடினாய்; மற்று எம் கூந்தல் செய்வினை - ஆனால் (இப்போது நீ வேறு வகையாக முடித்து) எமது கூந்தலிற் செய்யத்தக்க செயல்களால், பாராட்டினையோ-(அதனை விரும்பிக்) கொண்டாடினையோ ! (இல்லையே)

'நீவ' என்னும் எச்சம் 'நீவி' எனக் காரணப் பொருளில் வந்தது.

ஐவகையாவன - குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை ; இவற்றுள் முதல் இரண்டும் வகுத்து முடிப்பன ; இறுதி இரண்டும் விரித்து முடிப்பன; மற்றையது தொகுத்து முடிப்பது. முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்பன ஐவகையாம் என்பாரும், குளிர்ச்சி, அழகு, இருட்சி, நீட்சி, சுருட்சி என்பன ஐவகையாம் என்பாரும், வேறு கூறுவாரும் உளர்.

'பொம்மல் ஓதி நீவியோனே' எனவும், 'நறுமென் கூந்தல் மெல்லணையேமே' எனவும் (குறுந்தொகை 379, 270) வருதலின், கூந்தலை நீவுதலும் அதனை அணையாகக் கொள்ளுதலும் கூந்தற் செய்வினையின்பாற்படும்.

குளனணி தாமரைப் பாசரும் பேய்க்கும்
இளமுலை பாராட்டி னாய்;மற்றெம் மார்பின்
தளர்முலை பாராட் டினையோ ஐய !

ஐய - தலைவனே ! குளன் அணி - குளத்தை அழகு செய்யும், தாமரை பாசரும்பு ஏய்க்கும் - தாமரையின் பசுமையான அரும்புகளை ஒக்கும், இள முலை - (எமது நிரம்பாத) இள முலைகளை, பாராட்டினாய்-(நீ முன்னே விரும்பிக்) கொண்டாடினாய் ; மற்று எம் மார்பின்•

ஆனால் (இப்போது) எமது மார்பினை இடங்கொண்ட, தளர் முலை - (எமது இடை) தளர்தற்குக் காரணமாய (போதுகளை ஒக்கும் அம்) முலைகளை, பாராட்டினையோ - (நீ விரும்பிக்) கொண்டாடினையோ! (இல்லையே)

'மார்பின் முலை' - 'மார்பின்' என மிகைபடக் கூறியது அவை மார்பு முற்றும் இடங்கொண்டு நிற்றலை உணர்த்தற்கு.

'(நோய்) தீர்மருந்து' என்பது போலத் 'தளர்முலை' என நின்றது.

முன்னர் 'அரும்பு ஏய்க்கும்' என்றதால், பின்னர்ப் 'போது ஏய்க்கும்' என்பது பெற்றும்; 'பொங்கல் வெம்முலைகள் என்னும் போது' என்றார் சிந்தாமணியிலும் (2805); போது - அலர்கின்ற முகை. 'அரும்பிற்கும் உண்டோ அலாது நாற்றம்...அமிர்தமன்றோ முதிரும் முலையார் முயக்கு' (வெண்பாமாலை 337). ஆகவின் தோழி இவ்வாறு கூறினாள்.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

அடர்பொன் அவிரேய்க்கும் அவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகும் நும்மையாம் எங்கண்
படர்கூற நின்றதும் உண்டோ தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை?

தொடர் கூர - (எமது தீவினைத்) தொடர்பு மிக்க காரணத்தால், துவ்வாமை - (உம்மை) நுகராமை (ஆகிய பயன்), வந்தக்கடை - வந்து சேர்ந்தபொழுது, அடர் பொன் அவிர் ஏய்க்கும் - தகடாகிய பொன்னின் ஒளியை ஒக்கும், அ அரி வாட - அழகிய (எமது) நிறம் கெட, சுடர் காய்சுரம் போகும் நும்மை - (எம்மைப் பிரிந்து) சூரியன் (சினந்து) காய்கின்ற காட்டிற் போகும் உம்மை, யாம் - யாங்கள், எங்கண் படர் கூற - எம்மிடத்துள்ள வருத்தத்தைச் சொல்லி (விலக்க), நின்றதும் உண்டோ - (எம்மிடத்து) உள்ளதாகிய ஒரு நல்வினையும் உண்டோ? (இல்லையே)

ஓ - எதிர்மறை.

இதனால் தோழிக்கு இழிவும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (21)

கலி. 23

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தலைவி தானும் உடன்செல்ல விரும்பினாள். அதற்கு அவன் உடன்படாது பிரிய, அவனை நோக்கி அவள், "நீர் பிரியின் என் உயிர் நீங்கும்" எனக் கூறுகின்றாள்.

இலங்கொளி மருப்பின் கைம்மா உளம்புநர்
புலங்கடி கவணையின் பூஞ்சினை உதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்
தனியே இறப்ப யாஅனொழிந் திருத்தல்
நகுதக் கன்றிவ் வழுங்க லூர்க்கே;
இனியான்,
உண்ணலும் உண்ணேன்; வாழலும் வாழேன்;
தோள்நலம் உண்டு துறக்கப் பட்டோர்
வேள்நீர் உண்ட குடையோர் அன்னர்;
நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோர்
அல்குநர் போகிய ஊரோர் அன்னர்;
கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடினர் இட்ட பூவோர் அன்னர்;
எனவாங்கு,
யானும் நின்னகத் தனையேன்; ஆனாது
கொலைவெங் கொள்கையொடு நாயகப் படுப்ப
வலைவர்க் கமர்ந்த மடமான் போல
நின்னுங்கு வரூஉமென் நெஞ்சினை
என்னுங்கு வாரா தோம்பினை கொண்மே!

(தரவு)

இலங்கொளி மருப்பின் கைம்மா உளம்புநர்
புலங்கடி கவணையின் பூஞ்சினை உதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்
தனியே இறப்ப யாஅனொழிந் திருத்தல்

நகுதக் கன்றிவ் வழுங்க லூர்க்கே ;
இனியான்,
உண்ணலும் உண்ணேன் ; வாழலும் வாழேன் ;

இலங்குஒளி மருப்பின் - விளங்குகின்ற ஒளியினையுடைய கொம்புகளைக் கொண்ட, கைம்மா உளம்புநர் - யானைகளை வருத்து பவர் (ஆகிய வேடர்), புலம் - (தினைப்) புலத்தினின்றும், கடி - (யானை களை) ஓட்டும், கவணையின் - கவண் கல்லாலே, பூஞ்சினை உதிர்க்கும் - அழகிய (மரக்) கிளைகளிலுள்ள பூக்களை உதிர்க்கின்ற, விலங்கு மலை - (ஒன்றற்கு ஒன்று) குறுக்கிட்டுக் கிடக்கின்ற மலைகள், வெம்பிய - (சூரிய வெப்பத்தால்) கொதித்தலைப் பெற்ற, போக்கு அருவெஞ்சுரம்- போதற்கரிய வெய்ய காட்டில், தனியே இறப்ப - தனியே (நீ) போக, யான் ஒழிந்து இருத்தல் - யான் (நின்னைவிட்டுப்) பிரிந்து (தனித்து) இருத்தல், இ அழுங்கல் ஊர்க்கு - இந்த ஒலியையுடைய ஊரிலுள்ள பெண்களுக்கு, நகுதக்கன்று - சிரித்தற்குத் தக்க காரியமாகும் ; இனி யான் - (ஆகையால்) இனிமேல் யான், உண்ணலும் உண்ணேன் - உண்ணுதலும் செய்யேன் ; வாழலும் வாழேன் - (உயிர்) வாழ்தலும் செய்யேன் ;

நகுதக்கன்று - இதில் அன் சாரியை.

சினை - ஆகுபெயர்.

கவண் - கல்லெறிதற்குக் கருவியாகக் கயிற்றால் செய்யப்பட்ட கருவி ; இஃது ஆகுபெயராய்க் கல்லை உணர்த்திற்று.

ஊர் - ஆகுபெயர்.

ஏ - அசை.

(தாழிசை)

தோள்நலம் உண்டு துறக்கப் பட்டோர்
வேள்நீர் உண்ட குடையோர் அன்னர் ;

தோள் நலம் உண்டு - (தம்) தோளின் இன்பம் (தம் தலைவரால்) உண்ணப்பட்டு, துறக்கப்பட்டோர் - (பின் அவரால்) விடப்பட்ட மக ளிர், வேள்நீர் - விரும்பிய நீர், உண்ட - குடிக்கப்பட்ட, குடை ஓர் அன்னர் - ஓலை ஏனத்தை ஒருதன்மையாக ஒப்பர் ;

' நீர்வேட்கையுற்றவர் பனையோலையைக் குடைவாகச் செய்துகொண்டு நீருண்டு, பின்னர் அதனை உடனே எறிந்துவிடுவர். அது மிதியுண்டு சிலநாளில்

அழிவுறும்; அதுபோலத் தம் இன்பத்தைப் பெற்ற கணவரால் துறக்கப்பட்ட மகளிரும் சிறுமையுற்றுச் சின்னாளில் இறந்தொழிவர்' என்பது கருத்து.

நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோர்
அல்குநர் போகிய ஊரோர் அன்னர்;

புரிந்து நல்குநர் - விரும்பி அருளின கணவரால், நலன் - (தம்) அழகு, உணப்பட்டோர் - உண்ணப்பட்டுத் துறக்கப்பட்ட மகளிர், அல்குநர் - குடி இருப்பவர், போகிய ஊர் ஓர் அன்னர்-(குடியிருப்பை விட்டு) நீங்கிய (பாழ்) ஊரை ஒருதன்மையாக ஒப்பர்;

'குடிகளால் துறக்கப்பட்ட ஊர் பொலிவழிந்து பாழாவது போலக் கணவரால் துறக்கப்பட்டார் அழகொழிந்து இறப்பர்' என்பது கருத்து.

கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடினர் இட்ட பூவோர் அன்னர்;

புரிந்து கூடினர் - விரும்பிக் கூடிய கணவரால், குணன் - (தம் நல்) இயல்பு, உணப்பட்டோர் - உண்ணப்பட்டுத் துறக்கப்பட்ட மகளிர், சூடினர் இட்ட பூ ஓர் அன்னர் - சூடிக்கொண்டவர் (பின்னர்) எறிந்த பூவினை ஒருதன்மையாக ஒப்பர்;

'அணிந்தவர் எறிந்த பூ வாடி அழிந்துவிடுவதுபோலக் கணவரால் துறக்கப்பட்ட மகளிரும் வாடி அழிவர்' என்பது கருத்து.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

யானும் நின்னகத் தனையேன்; ஆனாது
கொலைவேங் கொள்கையொடு நாயகப் படுப்ப
வலைவர்க் கமர்ந்த மடமான் போல
நின்னாங்கு வரூஉமென் நெஞ்சினை
என்னாங்கு வாரா தோம்பினை கொண்மே!

யானும் நின்னகத்து அனையேன் - யானும் நின்னிடத்து அம் மூன்றின் தன்மையையும் ஒத்திருக்கின்றேன்; ஆனாது கொலை வெங் கொள்கையொடு-தவறாமல் கொலை செய்யும் கொடிய கருத்தோடு, நாய்

அகப்படுப்ப - நாய் (ஓடிக்) கௌவ, வலைவர்க்கு அமர்ந்த மடமான் போல - (அந்நாய்க்குப் பிடிகொடாமல்) வேடரிடத்தில் தங்கிய இளமையையுடைய மானைப்போல, நின்னுங்கு வரூஉம் என் நெஞ்சினை - (யான் எனக்கு உரியதென்று நினைத்துப் பிடிக்கவும் பிடிபடாமல் நினக்குரியதாக) நின்னிடத்து வரும் எனது மனத்தை, என்னுங்கு வாராது ஓம்பினை கொண்மே - என்னிடத்து (மீண்டும்) வாராமல் பாதுகாத்து (நின்னிடத்தே நிறுத்திக்) கொள்க !

தலைவனுக்கு வலைவரும், தலைவிக்கு நாயும், நெஞ்சத்திற்கு மானும் உவமை.

'கொள்' என்பது 'கொண்மே' என நின்றது.

இதனால் தலைவிக்கு இழிவும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இது கொச்சகம்.] (22)

கலி. 24

பொருளின்பொருட்டுப் பிரிய எண்ணிய தலைவன் தலைவிபால் ஒப்பற்ற அன்புகொண்டு ஒழுகுவானுயினன். அவ்வொழுக்கக் குறிப்பால் அவன் பிரிவனே எனத் தலைவி ஐயுற்றுவந்தாள் ; ஒரு நாள் புணர்ச்சியின் பின்னர் அவசத்துயிலில் அவன் அரற்றிய மொழிகளால் தனது ஐயம் தெளிவுற்றாள். பின்னர் அவள் தோழியை நெருங்கித் தலைவன் நீங்கின் தன்னுயிர் நீங்கும் என்னும் செய்தியை அவனுக்கு அறிவிக்குமாறு கூறுகின்றாள்.

நெஞ்சு நடுக்குறக் கேட்டும் கடுத்தும்தாம்
அஞ்சிய தாங்கே அணங்காகும் என்னும்சொல்
இன்தீங் கிளவியாய் வாய்மன்ற ; நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானும்
இதுவொன் றுடைத்தென எண்ணி அதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்
பாயல்கொண் டென்தோள் கனவுவார் ஆய்கோல்
தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
இடுமருப் பியானை இலங்குதேர்க் கோடும்

நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருள் முற்றும் அளவென்றார்; ஆயிழாய்!
தாமிடை கொண்ட ததுவாயின் தம்மின்றி
யாமுயிர் வாழும் மதுகை இலேமாயின்,
தொய்யில் துறந்தார் அவரெனத் தம்வயின்
நொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் உயிர்.

இன் தீம் கிளவியாய்-மிக இனிய சொற்களை உடைய தோழியே, நெஞ்சு நடுக்குற - (ஒருவர் தம்) மனம் நடுக்கமுறும்படி, கேட்டும் - (பலகாலும்) கேட்டும், கடுத்தும் - (கேட்ட அதனை உண்டோ இல்லையோ என்று) ஐயுற்றும், தாம் அஞ்சியது - தாம் அஞ்சியிருந்த காரியம், ஆங்கே அணங்காகும் - அவ்விதமே வருத்தத்தைத் தருவதாகும், என்னும் சொல் - என்னும் பழமொழி, மன்ற வாய் - மிகவும் உண்மை; (அஃது எங்ஙனம் எனில்) நின் கேள் - நின் உறவினர், புதுவது பல் நாளும் பாராட்ட - புதியதொரு பொருளாகப் பல நாளும் (என்னைப்) பாராட்டுதலாலே, யானும் இது ஒன்று உடைத்து என எண்ணி - யானும் இப்பாராட்டுதல் ஒரு பிரிவை உடையது என்று கருதி, அது தேர-அப்பிரிவை ஆராயாநிற்க, மாசு இல் வண் சேக்கை - குற்றமற்ற பெரிய படுக்கையில், மணந்த புணர்ச்சியுள் - புணர்ந்த புணர்ச்சியிடத்தில், என் தோள் பாயல் கொண்டு - என் தோளின்மேலே உறக்கங்கொண்டு, கனவுவார் - வாய் பிதற்றுகின்றவர், ஆய்கோல் நிரை தொடி - ஆராய்ந்தெடுத்த திரட்சி பெற்ற செறிந்த தொடியணிந்த, முன் கையாள் - முன் கையை உடையவள், கையாறு கொள்ளாள் - துன்பம் கொள்ளாதவளாய், இடுமருப்பு யானை - குத்தும் கொம்பினையுடைய யானைகள், இலங்கு தேர்க்கு ஓடும் - விளங்குகின்ற கானல் நீரை (உண்மை நீரென்று நினைத்து அதனைக்) குடிக்க ஓடுகின்ற, நெடுமலை வெஞ்சுரம் போகி - பெரிய மலைகளையும் கொடிய காடுகளையும் கடந்துபோய், நடு நின்று - (போர் செய்ய எழுந்த இரு பெருவேந்தர்க்கும்) இடையே நின்று, செய்பொருள் முற்றும் அளவு - செய்யவேண்டுவதாகிய சமாதானத்தைச் செய்துமுடித்து வருமளவும், கடி மனை காத்து ஓம்ப வல்லுவள்கொல் - (தனக்குக்) குறிக்கப்பட்ட இல்லறத்தைப் பெரிதுங் காக்கக் கூடியவளோ, என்றார் - என்று கூறினார்; ஆயிழாய் - ஆராய்ந்தெடுத்த அணிகளை உடையவளே! தாம் இடை கொண்டது - நம்

காதலர் (நாம் கூடிவாழும் காலத்தின்) இடையே (தம் மனத்திற்) கொண்ட காரியம், அது ஆயின் - பொருள்வயிற் பிரிவாயின், தம் இன்றி யாம் உயிர் வாழும் மதுகை இலேம் ஆயின் - அவரைப் பிரிந்து யாம் உயிர்வாழும் வலி இல்லேமாயின், தொய்யில் துறந்தார் அவர் என - (அவள் மார்பில்) தொய்யில் எழுதுதலை (முன் நீங்காத) அவர் (இப்பொழுது எழுதாமல் அவளைத்) துறந்தார் என்று, நொய் யார் நுவலும் பழி - அற்ப மகளிர் கூறும் பழி, தம்வயின் நிற்ப - தம் மிடத்தில் நிற்க, என் உயிர் தம்மொடு போயின்று சொல் - என்னு யிர் அவரோடுகூடப் போயிற்று (என்று நீ அவரிடம்) சொல்.

கொல்லோ - ஓ - அசை.

காத்து ஓம்ப - ஒருபொருட் பன்மொழி.

போயின்று - னகரம் திரியாமல் நின்றது.

உயிர் நீங்குதல் உறுதியாதலின் இறந்த காலத்தாற் கூறினாள்.

தொய்யில் - 18-ஆம் கலியின் குறிப்பை நோக்குக.

இதனால் தலைவிக்கு இழிவும், தோழிக்கு அச்சமும் பிறந்தன.

[இது கலிவெண்பா.] (23)

கலி. 25

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கி, "நீர் பிரியின் நும் செயலைப் பீடிலார் தொடர்புபோலப் பலர்க்கும் எடுத்துக் காட்டித் தூற்றுவன தலைவிபால் பல உள" எனக் கூறி அவன் செலவை நீக்குகின்றாள்.

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவரென் றுலகேத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை அரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை உயர்மலை முற்றிய முழங்கழல்
ஒள்ளுரு அரக்கில்லை வளிமகன் உடைத்துத்தன்

உள்ளத்துக் கிளைகளோ டுயப்போகு வான்போல
எழுவுறழ் தடக்கையின் இனம்காக்கும் எழில்வேழம்
அழுவஞ்சூழ் புகையழல் அதர்பட மிதித்துத்தம்
குழுவொடு புணர்ந்துபோம் குன்றழல் வெஞ்சுரம்
இறத்திரால் ஐயமற் றிவள்நிலைமை கேட்டீமின் :

மணக்குங்கால் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்கால் கலுழ்பானாக் கண்ணெனவும் உளவன்றே
சிறப்புச்செய் துழையராப் புகழ்பேற்றி மற்றவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்!

ஈங்குநீர் அளிக்குங்கால் இறைசிறந் தொருநாள்நீர்
நீங்குங்கால் நெகிழ்போடும் வளையெனவும் உளவன்றே
செல்வத்துள் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவர்
ஒல்கிடத் துலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்!

ஒருநாள்நீர் அளிக்குங்கால் ஒளிசிறந் தொருநாள்நீர்
பாராட்டாக் கால்பசக்கும் நுதலெனவும் உளதன்றே
பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்கால் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்!

எனவாங்கு,

யாம்நிற் கூறுவ தெவனுண் டெம்மினும்
நீநற் கறிந்தனை ; நெடுந்தகை ! வானம்
துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலும்நின்
அளிமாறு பொழுதின்இவ் வாயிழை கவினே.

(தரவு) .

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவரென் றுலகேத்தும் அரசர்கள் அகத்தாக்
கைபுனை அரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை உயர்மலை முற்றிய முழங்கழல்
ஒள்ளுரு அரக்கில்லை வளிமகன் உடைத்துத்தன்

உள்ளத்துக் கிளைகளோ டுயப்போகு வான்போல
எழுவுறழ் தடக்கையின் இனம்காக்கும் எழில்வேழம்
அழுவஞ்சூழ் புகையழல் அதர்பட மிதித்துத்தம்
குழுவோடு புணர்ந்துபோம் குன்றழல் வெஞ்சுரம்
இறத்திரால் ஐயமற் றிவள்நிலைமை கேட்டீமின் :

வயக்குறு - விளங்குகின்ற, *மண்டிலம்* - கண்ணாடியினுடைய, *வடமொழி பெயர்* - வடமொழிப் பெயராகிய 'தர்ப்பணம்' என்பதை, *பெற்ற* - (உடன்) பெற்ற, *முகத்தவன்* - ஆனனன், (அஃதாவது 'தர்ப்பணானனன்' என்னும் திருதராட்டிரனுடைய), *மக்களுள்* - பிள்ளைகளுக்குள்ளே, *முதியவன்* - மூத்தவனாகிய துரியோதனனது, *புணர்ப்பினால்* - சூழ்ச்சியினால், *ஐவர் என்று உலகு ஏத்தும் அரசர்கள்* - ஐவர் என்று உலகத்தோர் புகழும் (தருமபுத்திரர் முதலிய) அரசர்கள், *அகத்தர் ஆ(க)* - உள்ளிருப்பவராக, *கை புனை அரக்கு இல்லை* - கையால் புனையப்பட்ட அரக்கு மாளிகையை, *கதழ் எரி சூழ்ந்தாங்கு* - விரைந்து செல்லும் நெருப்புச் சூழ்ந்தாற்போல, *களி திகழ் கடாஅத்த* - களிப்பு விளங்குகின்ற மதத்தினையுடைய, *கடுங்களிறு அகத்த ஆ(க)* - சிறந்த யானைகள் உள்ளே இருப்பனவாக, *உயர்மலை* - உயர்ந்த மலையில், *முளிகழை* - காய்ந்த மூங்கிலை, *முற்றிய* - சூழ்ந்த, *முழங்கு அழல்* - ஒலிக்கின்ற நெருப்பை, *ஒள் உரு அரக்கு இல்லை* - ஒள்ளிய உருவத்தினையுடைய அரக்கு மாளிகையை, *வளி மகன் உடைத்து* - வாயுபுத்திரனான வீமன் உடைத்து (வழி செய்துகொண்டு), *தன் உள்ளத்து கிளைகளோடு* - தன் மனத்திற்குப் பொருந்தின சுற்றத்தோடு, *உய போகுவான் போல* - தப்பித்துக்கொள்ளப் போவானைப் போல, *எழு உறழ் தட கையின்* - தூண் போன்ற பருத்த கைகளையுடைய, *இனம் காக்கும் எழில் வேழம்* - (தம்) இனத்தைக் காக்கும் அழகினையுடைய யானைகள், *அழுவம் சூழ் புகை அழல்* - (காட்டின்) பரப்பைச் சூழ்ந்த புகையையுடைய நெருப்பின்கண், *அதர் பட மிதித்து* - வழியுண்டாக (மூங்கில்களை ஒடித்து) மிதித்து, *தம் குழுவொடு* - தம் கூட்டத்தொடு, *புணர்ந்து போம்* - கூடிப் போகும், *குன்று* - குன்றையுடைய, *அழல்வெஞ்சுரம்* - வெப்பம் வீசுகின்ற வெய்ய காட்டை, *இறத்திரால்* - கடந்து செல்வீராயின், *ஐய* - தலைவரே, *மற்று இவள் நிலைமை கேட்டீமின்* - பின்னை இவளுடைய நிலைமையைக் கேட்பீராக :

'அழல் சூழ்ந்த அரக்கு மாளிகைக்குள் அகப்பட்டுக்கொண்ட வீமசேனன் தன் உடன்பிறந்தாரையும் தாயினையும் தூக்கிக்கொண்டு ஒரு வழிசெய்து வெளிப்பெயர்ந்தமைபோல அழல் சூழ்ந்த காட்டினின்றும் யானைகள் தம் கூட்டத்தோடு நெருப்பிடையே வழியுண்டாக்கிக்கொண்டு வெளிப்பெயரும்' என்பது கருத்து.

ஆனனம்-முகம்; தர்ப்பணானனன் - கண்ணாடி போலும் முகமுடையவன். தான் பிறரைப் பார்க்க இயலாததாய்த் தன்னைப் பிறர் பார்க்கும் இயல்பிற்றாய் இருப்பது கண்ணாடி; ஆதலின் அது குருடனான திருதராட்டிரன் முகத்திற்கு உவமையாயிற்று.

'இறத்திராயின்' என்பது 'இறத்திரால்' என நின்றது.

'ஆக' என்பது ஈறுகெட்டு நின்றது.

(தாழிசை)

மணக்குங்கால் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்கால் கலுழ்பானாக் கண்ணெனவும் உளவன்றே
சிறப்புச்செய் துழையராப் புகழ்பேற்றி மற்றவர்
புறக்கோடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்!

உழையர் ஆ(க) - ஒருவர் (தம்) இடத்தே இருந்தாராக, சிறப்பு செய்து - (அவர்க்குச்) சிறப்புக்களைச் செய்து, புகழ்பு ஏற்றி - (அவரைப்) புகழ்ந்து வாழ்த்தி, மற்று அவர் புறக்கொடையே - பின்பு அவர் திரும்பிப் போனவுடனே, பழி தூற்றும் - (அவரைப்) பழிச் சொற்களால் தூற்றுகின்ற, புல்லியார் தொடர்பு போல் - அற்பருடைய உறவு போல, மணக்கும் கால் - (நீ) கூடி இருக்குங்காலத்தில், மலர் அன்ன தகையவாய் - (நீல) மலர்களைப்போன்ற அழகினை உடையனவாயிருந்து, நீ சிறிது தணக்கும் கால் - நீ சிறிது பிரியுங்காலத்தில், கலுழ்பு ஆனா - அழுதல் நீங்காத, கண் எனவும் உள அன்றே - 'கண்கள்' என்னும் சில பகைகளும் உள அல்லவோ!

கண்களுக்குப் புறங்கூறுவார் உவமை.

ஈங்குநீர் அளிக்குங்கால் இறைசிறந் தொருநாள்நீர்
நீங்குங்கால் நெகிழ்போடும் வளையெனவும் உளவன்றே
செல்வத்துள் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவர்
ஒல்கிடத் துலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்!

செல்வத்துள் சேர்ந்து - (ஒருவர்க்குச்) செல்வம் உண்டான போது (அவருடன் நீங்காது) சேர்ந்திருந்து, அவர் வளன் உண்டு -

அவர் செல்வத்தை நுகர்ந்து, மற்று அவர் ஒல்கு இடத்து - பின்பு அவர் தாழ்வுற்ற காலத்தில், உலப்பு இலா உணர்வு இலார்-(அவர்க்கு) உதவுதல் இல்லாத உணர்வில்லாதவருடைய, தொடர்பு போல் - உறவு போல, ஈங்கு நீர் அளிக்கும் கால் - இவ்விடத்தில் நீர் (கூடி இருந்து) அருள்செய்யுங்காலத்தில், இறை சிறந்து - முன்கையிலே சிறந்து விளங்கி, ஒரு நாள் நீர் நீங்கும் கால் - ஒரு நாள் நீர் நீங்குங் காலத்தில், நெகிழ்பு ஓடும் வளை எனவும் உள அன்றே - கழன்று ஓடும் 'வளைகள்' என்னும் சில பகைகளும் உள அல்லவோ !

வளைகளுக்கு உணர்விலார் உவமை.

ஒருநாள்நீர் அளிக்குங்கால் ஒளிசிறந் தொருநாள்நீர்
பாராட்டாக் கால்பசக்கும் நுதலெனவும் உளதன்றே
பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்கால் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல் !

பொருந்திய கேண்மையின் - (இருவர் மனமும்) பொருந்திய நட்பாலே, மறை உணர்ந்து - (ஒருவருடைய) இரகசியங்களை அறிந்து, அ மறை - அந்த இரகசியங்களை, பிரிந்தக்கால் - (அவர்) நீங்கிய பொழுது, பிறர்க்கு உரைக்கும் - பிறர்க்கு வெளிப்படுத்தும், பீடு இலார் தொடர்பு போல் - பெருமை இல்லாதவர் உறவுபோல, ஒரு நாள் நீர் அளிக்கும் கால் - ஒரு நாள் நீர் அன்பு செய்யும் பொழுது, ஒளி சிறந்து - ஒளி மிக்கு, ஒரு நாள் நீர் பாராட்டாக்கால் - ஒரு நாள் நீர் அன்பு செய்யாதவிடத்து, பசக்கும் - பசலைநிறம் காட்டும், நுதல் எனவும் உளது அன்றே - 'நெற்றி' என்னும் ஒரு பகையும் உளது அன்றே !

ஒளி - கலவியால் வரும் அழகிய நிறம்.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

யாம்நிற் கூறுவ தேவனுண் டெம்மினும்
நீநற் கறிந்தனை ; நெடுந்தகை ! வானம்

துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலும்நின்
அளிமாறு பொழுதின்இவ் வாயிழை கவினே.

யாம் நின் கூறுவது எவன் உண்டு - யாம் நினக்குக் கூறுகின்ற வார்த்தையால் என்ன பயன் உண்டு? எம்மினும் நீ நற்கு அறிந்தனை - எம்மைக்காட்டிலும் நீ (அப்பகையுண்மையை) நன்கு அறிந்துள்ளாய்; நெடுந்தகை-பெரியோனே! நின் அளி மாறு பொழுதின் - நினது அன்பு மாறும் பொழுது, இ ஆயிழை கவின் - இந்த ஆராய்ந்தெடுத்த அணிகளையுடையாளது அழகு, வானம் துளி மாறு பொழுதின் - மேகம் மழைத்துளி பெய்யாத காலத்தில், இ உலகம் போலும் - இவ்வுலகம் (கெடுமாறு) போல ஆம்.

நற்கு - (நன்கு) னகரம் றகரமாயிற்று; விகாரம்.

ஏ - அசை.

இதனால் தோழிக்கு இழிவும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (24)

கலி. 26

கொடுங்கோல் மன்னர் நாட்டிலிருந்து தன் நிழல் அடைந்த குடிகட்கு நன்மை செய்யக் கருதிய தலைவன் இளவேனிற் காலத்தில் தான் வந்துவிடுவதாகத் தலைவிக்குக் கூறிப் பிரிந்தான். அக்காலத் தொடக்கத்தில் அவன் வாராமை கண்டு ஆற்றாத தலைவி தோழியை நோக்கி, "நங்காய், நமக்கு அருள் செய்ய வேண்டுவதாகிய இந்நாள் தலைவர் வந்திலர்" எனக் கூறி வருந்தினாள். அதனைக் கேட்ட தோழி, "தோழி, அவர் வருகின்றார் என்பதனை முன்னறிவிக்கவே இளவேனிற்காலம் தூதாய் வந்திருக்கின்றது. இனி நீ வருந்தாதே" எனக் கூறி அவள் துன்பம் தணிய வற்புறுத்துகின்றாள்.

*ஒருகுழை ஒருவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்
பருதியம் செல்வன்போல் நனையூழ்த்த செருந்தியும்
மீனேற்றுக் கொடியோன்போல் மிஞிறார்க்கும் காஞ்சியும்
ஏனோன்போல் நிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்
ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரிய இலவமும் ஆங்குத்
தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப்*

போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றால் இளவேனில் மேதக !

பல்வரி இனவண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் தொலைந்தவென் தடமென்தோள் உள்ளுவார்
ஒல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புகழ் உலகேத்த விருந்துநாட் டுறைபவர் !

திசைதிசை தேனார்க்கும் திருமருத முன்துறை
வசைதீர்ந்த என்நலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தம்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந் துலகேத்த ஏதில்நாட் டுறைபவர் !

அறல்சாஅய் பொழுதோடெம் அணிநுதல் வேறாகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை அருளுவார்
ஊறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
ஆறின்றிப் பொருள்வெஃகி அகன்றநாட் டுறைபவர் !

எனநீ,

தெருமரல் ; வாழி தோழி ! நம் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே !

(தரவு)

ஒருகுழை ஒருவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்
பருதியம் செல்வன்போல் நனையூழ்த்த செருந்தியும்
மீனேற்றுக் கொடியோன்போல் மிஞிறார்க்கும் காஞ்சியும்
ஏனோன்போல் நிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்
ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரிய இலவமும் ஆங்குத்
தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப்
போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றால் இளவேனில் மேதக !

ஒரு குழை ஒருவன் போல் - ஒரு குழையை அணிந்த பலராமனைப்போல (வெண்மையான), இணர் சேர்ந்த மராஅமும் - கொத்துக்களாகப் பொருந்திய வெண்கடப்பமலரும், பருதி அம் செல்வன் போல் - சூரியனாகிய அழகிய கடவுளைப் போல (ச் செந்நிறமான), நனை ஊழ்த்த செருந்தியும் - அரும்புகள் முற்றிய செருந்திமலரும், மீன் ஏற்று கொடியோன் போல் - ஆண் (சுறா) மீனின் (உருவம் எழுதப் பெற்ற) கொடியையுடைய காமனைப் போல (க் கருமையான), மிஞிறு ஆர்க்கும் காஞ்சியும் - வண்டுகள் ஒலிக்கும் காஞ்சிமலரும், ஏனோன் போல்-(காமன் தம்பியான) சாமன் போல (ப் பொன்னிறமான), நிறம் கிளர்பு - நிறம் விளங்கி, கஞலிய ஞாழலும் - நெருங்கிய ஞாழல்மலரும், ஆன் ஏற்று கொடியோன் போல் - இடபத்தின் (உருவம் எழுதப் பெற்ற) கொடியையுடைய சிவபெருமானைப் போல (ச் சிவப்பான), எதிரிய இலவமும் - (மலரும் பருவத்தோடு) கூடிய இலவமலரும், தீது தீர் சிறப்பின் - குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய, ஐவர்கள் நிலை போல - (மேற்கூறிய) ஐவர்களின் (நிறத்தின்) தன்மைபோல, போது அவிழ் மரத்தோடு-மலர்கள் மலர்ந்த (பிற) மரங்களோடு, பொருகரை-(நீர்) மோதுகின்ற கரைகளில், கவின் பெற-அழகு பெற, இளவேனில்-இளவேனிற்காலமானது, மே தக - சிறப்பு மிக, நோ தக - (காதலரைப் பிரிந்த மகளிர்க்கு) வருத்தம் மிக, வந்தன்று - வந்துவிட்டது !

ஆங்கு, ஆல் - அசை.

காமன் தம்பி சாமன் ஆதலைச் 'சாமனார் தம்முன்' (கலி. 94) என்றும், 'காமனுஞ் சாமனும் கலந்த காட்சிய' (சிந். 43) என்றும் வரும் அடிகளால் அறிக.

பலராமன் ஒரு குண்டலம் அணிந்தவன் என்பதை 'வளைநாஞ்சில் ஒரு குழை ஒருவனை' (பரி. 1 - 5) என வரும் அடியால் அறிக.

(தாழிசை)

பல்வரி இனவண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் தொலைந்தவென் தடமென்தோள் உள்ளுவார்
ஒல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புகழ் உலகேத்த விருந்துநாட் டுறைபவர் !

ஒல்குபு - (ஆள்பவர் கலக்க) வருந்தி, நிழல் சேர்ந்தார்க்கு - (தம்மை) நிழலாக அடைந்த குடிகளை, உலையாது - (அவர்கள்) வருந்தாதபடி, காத்து ஓம்பி - பாதுகாத்து, வெல்புகழ் உலகு ஏத்த -

(தாம் அப்பகையரசரை) வென்ற புகழை உலகத்தார் புகழ, விருந்து நாட்டு உறைபவர் - புதிய நாட்டில் இருக்கின்ற தலைவர், பல் வரி இன வண்டு - பல வரிகளையுடைய கூட்டமாகிய வண்டுகள், புதிது உண்ணும் பருவத்து - புதியதாகிய தேனை உண்ணும் (இந்த) இளவேனிற்காலத்தில், தொல் கவின் தொலைந்த - பழைய அழகு கெட்ட, என் தடமென்தோள் உள்ளுவார் - என்னுடைய அகன்ற மென்மையான தோள்களை நினையார்!

சேர்ந்தார்க்கு - உருபு மயக்கம்.

உள்ளுவார் - குறிப்பு மொழி.

திசைதிசை தேனார்க்கும் திருமருத முன்துறை
வசைதீர்ந்த என்நலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தம்நீழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந் துலகேத்த ஏதில்நாட் டுறைபவர்!

நசை கொண்டு - (நம்மைக் காத்தற்கு உரியர் இவர்தாம் என்று) ஆசை கொண்டு, தம் நீழல் சேர்ந்தாரை - தம் குடைநிழற் கீழ் வந்தடைந்த குடிமக்களை, தாங்கி-காப்பாற்றி, தம் இசை பரந்து உலகு ஏத்த - தமது புகழ் (உலகு எங்கும்) பரத்தலாலே (அந்த) உலகத்தார் புகழ, ஏதில் நாட்டு உறைபவர் - அயல் நாட்டில் இருக்கின்றவர், திசை திசை தேன் ஆர்க்கும் - எல்லாத் திசைகளிலும் வண்டுகள் ஒலிக்கும், திருமருத முன் துறை - 'திருமருத முன்துறை' என்னும் வையைத் துறையிலுள்ள சோலையில், வசை தீர்ந்த என் நலம் - குற்றமற்ற என் அழகு, வாடுவது அருளுவார் - வாடுதலை (நீக்கி) அருளார்!

திருமருத முன்துறை - ஆகுபெயர்.

அருளுவார் - குறிப்புமொழி.

அறல்சாஅய் பொழுதோடெம் அணிநுதல் வேறுகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை அருளுவார்
ஊறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
ஆறின்றிப் பொருள்வெஃகி அகன்றநாட் டுறைபவர்!

ஊறு அஞ்சி - (முன்பு நாட்டை ஆண்ட அரசர் செய்த) துன்பத்திற்கு அஞ்சி, நிழல் சேர்ந்தார்க்கு - (தம்) குடைநிழற்கீழ் வந்து அடைந்தவரை, உலையாது - (அவர்) வருந்தாதபடி, காத்து ஓம்பி -

பாதுகாத்து, ஆறு இன்றி பொருள் வெஃகி - அறநெறி இன்றிப் பொருளை விரும்பி, அகன்ற - (அக்காரணத்தினுல் ஆட்சி) நீங்கிய, நாட்டு உறைபவர் - (அரசர்) நாட்டில் தங்கியிருக்கின்றவர், அறல் சாஅய் பொழுதோடு - அரித்து ஓடும் நீர் சுருங்கின (இளவேனிற்) காலத்தில், எம் அணி நுதல் - எமது அழகிய நெற்றி, வேறுகி - வேறுபட்டு, திறல் சான்ற பெருவனப்பு இழப்பதை - வலிமை அமைந்த பெரிய அழகை இழத்தலை, அருளுவார்-(அகற்றி) அருளார்!

சேர்ந்தார்க்கு, பொழுதோடு - உருபு மயக்கம்.

அருளுவார் - குறிப்புமொழி.

(தனிச்சொல்)

எனநீ,

என நீ - என்று கூறி நீ,

(சுரிதகம்)

தெருமரல் ; வாழி தோழி !நம் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே !

தெருமரல் - (மனம்) கலங்காதே ; பொரு முரண் யானையர்-போர் செய்யும் வலி அமைந்த யானையையுடையவரும், போர் மலைந்து எழுந்தவர்-(பகைவரோடு) போர் செய்து (வீரத்தோடு) நின்றவரும், செரு மேம்பட்ட வென்றியர் - போரிற் சிறந்த வெற்றியையுடையவருமாகிய, நம் காதலர் - நமது அன்பர், வரும் என - வருவர் என்று, அவர் வாய் மொழி தூதே - அவருடைய உண்மை உரைக்கும் தூதாகவே, வந்தன்று - (இளவேனிற் காலம்) வந்தது ! தோழி வாழி- (இனித்) தோழி (நீ இனிது) வாழ்வாயாக !

காதலர் வரும் என முடிக்க. பல்லோர் படர்க்கையில் 'செய்யும்' என்னும் முற்று வாராதென்பது விதியாயினும் ஈண்டு வந்தமை காண்க.

இதனுல் தலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

[இது கொச்சகம்.] (25)

கலி. 27

தலைவன் இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாகத் தலைவிக்குக் கூறிப் பிரிந்தான். அக்கால வரவின்கண் அவன் வரவில்லை. ஆதலின், அவள் பெரிதும் வருந்தித் தோழியை நோக்கி, "நங்காய், நம் காதலர் நம்மை மறப்பினும் மறக்க; இக்காலத்தில் இவ்வூரின்கண் தாம் விளையாடும் விளையாட்டையும் மறந்தாரோ!" எனக் கூறினாள். பின்னர்த் தோழி தலைவன் வரவுணர்ந்து அதனை அவளுக்குக் கூறுகின்றாள்.

ஈதலிற் குறைகாட்டாது அறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம்நந்தப்
பேதுறு மடமொழிப் பிணையெழில் மானோக்கின்
மாதரார் முறுவல்போல் மணமௌவல் முகையூழ்ப்பக்
காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போல் கழல்குபு
தாதொடும் தளிரொடும் தண்ணறல் தகைபெறப்
பேதையோன் வினைவாங்கப் பீடிலா அரசன்நாட்
டேதிலான் படைபோல இறுத்தந்த திளவேனில்!

நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலும் குயிலெள்ள
நலம்பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க!
கலம்பூத்த அணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பானுக் கூடலும் உள்ளார்கொல்!

கன்மிசை மயிலாலக் கறங்கியூர் அலர்தூற்றத்
தொன்னலம் நனிசாய நம்மையோ மறந்தைக்க!
ஒன்னாதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்கொல்!

மையெழில் மலருண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினால் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க!
தைஇய மகளிர்தம் ஆயமோ டமர்ந்தாடும்
வையைவார் உயரெக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல்!

எனவாங்கு,

நோய்மலி நெஞ்சமோ டினையல்; தோழி!
நாமில்லாப் புலம்பாயின் நடுக்கஞ்செய் பொழுதாயின்

காமவேள் விழவாயின் கலங்குவள் பெரிதென
ஏமுறு கடுந்திண்டேர் கடவி
நாமமர் காதலர் துணைதந்தார் விரைந்தே!

(தரவு)

ஈதலில் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம்நந்தப்
பேதுறு மடமொழிப் பிணையெழில் மான்நோக்கின்
மாதரார் முறுவல்போல் மணமௌவல் முகையூழ்ப்பக்
காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போல் கழல்குபு
தாதோடும் தளிரோடும் தண்ணறல் தகைபெறப்
பேதையோன் வினைவாங்கப் பீடிலா அரசன்நாட்
டேதிலான் படைபோல இறுத்தந்த திளவேனில்!

ஈதலில் குறை காட்டாது - கொடுத்தல் தொழிலிலே (பொருட்) குறைவைக் காட்டாமல், அறன் அறிந்து ஒழுகிய - இல்லறம் (நடத்தும் முறைமையை) அறிந்து நடந்த, தீது இலான் செல்வம் போல் - தீவினை இல்லாதவனுடைய செல்வம் (பெருகுமாறு) போல, தீம் கரை மரம் நந்த - இனிதாகிய (நீரையுடைய ஆற்றங்) கரையிலே மரங்கள் தழைக்கவும், பேது உறு - (கேட்போர்) மயக்கம் உறுதற்குக் காரணமான, மடமொழி - மெல்லிய மொழியினையும், பிணைமான் எழில் நோக்கின் மாதரார் - பெண்மானது அழகையுடைய நோக்கம்போலும் நோக்கினையும் உடைய பெண்களுடைய, முறுவல் போல் - பற்களைப் போல, மணம் மௌவல் முகை ஊழ்ப்ப - மணத்தையுடைய காட்டு மல்லிகையின் அரும்பு மலரவும், காதலர் புணர்ந்தவர் - (தம்) காதலரைக் கூடினவருடைய, கதுப்பு போல் - கூந்தல் போல, கழல்குபு - விரிந்து, தாதொடும் தளிரொடும் - மகரந்தப் பொடிகளாலும் தளிர்களாலும், தண் அறல் - குளிர்ச்சியையுடைய (அலை அலைத்து உற்றறுண்) கருமணல், தகை பெற - அழகு பெறவும், பேதையோன் வினை வாங்க - அறிவில்லாத அமைச்சன் (அரசாங்கத்) தொழிலை மேற்கொள்ள, பீடு இலா அரசன் நாட்டு - (அதனால்) வலிமையற்ற அரசன் நாட்டில், ஏதிலான் படை போல - பகையரசன் சேனை (வந்து தங்குமாறு) போல, இளவேனில் இறுத்தந்தது - இளவேனில் வந்து தங்கிற்று!

'நந்த, ஊழ்ப்ப, தகைபெற இளவேனில் இறுத்தந்தது' என முடிக்க.

(தாழிசை)

நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலும் குயிலெள்ள
நலம்பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க !
கலம்பூத்த அணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பானுக் கூடலும் உள்ளார்கோல் !

நிலம் பூத்த மரமிசை - நிலத்தில் தோன்றிய மரங்களின்மே லிருந்து, நிமிர்பு ஆலும் - நிமிர்ந்து கூவும், குயில் எள்ள - குயில்கள் (நம்மை) இகழவும், நலம் பூத்த - நன்மை விளங்கிய, நிறம் சாய - (நமது) நிறம் கெடவும், நம்மையோ மறந்தைக்க - நம் மையோ (அவர் மறப்பினும்) மறக்க! கலம் பூத்த - அணிகள் பொலிவு பெற்ற, அணியவர் - அழகினையுடையவராகிய பரத்தையருடைய, காரிகை மகிழ் செய்ய - அழகு (தம் மனத்திற்கு) மகிழ்ச்சியைச் செய் தலினாலே, புலம் பூத்து - (தம்) அறிவு பொலிவு பெற்று, புகழ்பு ஆனு- (அதனால் பிறர்) புகழ்தல் நீங்காத, கூடலும் உள்ளார்கொல் - மதுரை யையும் (அவர்) நினையாரோ !

'மறக்க' என்னும் வியங்கோள் 'மறந்தைக்க' என்னும் திரிசொல்லா யிற்று.

கன்மிசை மயிலாலக் கறங்கியூர் அலர்தூற்றத்
தொன்னலம் நனிசாய நம்மையோ மறந்தைக்க !
ஒன்னுதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்கோல்!

கல்மிசை மயில் ஆல - (நம் சாயல் கெட்டமை கண்டு) மலைமேலே மயில் (ஆரவாரித்து) ஆடவும், கறங்கி ஊர் அலர் தூற்ற - ஆரவாரித்து ஊரிலுள்ளார் பழியைப் பரப்பவும், தொல் நலம் நனி சாய - (நமது) பழைய அழகு மிகக் கெடவும், நம்மையோ மறந்தைக்க - நம்மையோ (அவர் மறப்பினும்) மறக்க! ஒன்னுதார் - பகைவரை, கடந்து அடூஉம்- நேர் நின்று (போர் செய்து) அழிக்கும், உரவு நீர் - கடலிலே பொருந் திய, மா கொன்ற - (சூரவன்மா ஆகிய) மா மரத்தை அழித்த, வெல் வேலான் குன்றின்மேல்-வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடைய முருகனுடைய (திருப்பரம்)குன்றின்மேல், விளையாட்டும் விரும்பார் கொல் - (பரத்தையருடன் விளையாடும்) விளையாட்டையும் (அவர்) விரும்பாரோ !

ஊர் - ஆகுபெயர்.

மையெழில் மலருண்கண் மருளூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினல் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க !
தைஇய மகளிர்தம் ஆயமோ டமர்ந்தாடும்
வையைவார் உயரெக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல் !

மை எழில் மலர் உண்கண் - கரியனவாகிய அழகினையுடைய (நீல) மலர் போலும் (மை)உண்ட (நம்) கண்கள், மகிழ் கொள்ள - மகிழ்ச்சி கொள்ளும்படி, மருளூட்டி - மருளூட்டுதலைச் செய்து, பொய்யினல் புரிவுண்ட - (தாம் செய்த) பொய்யாலே (நம் மனம் தம்மிடத்தில்) விருப்பங்கொள்ளும்படி செய்த, நம்மையோ மறந்தைக்க - நம்மையோ (அவர் மறப்பினும்) மறக்க! தைஇய மகளிர்தம் ஆயமோடு - (கோலம்) செய்தலையுடைய பரத்தையர் கூட்டத்தோடு, அமர்ந்து ஆடும்-விரும்பி விளையாடும், வையை வார் உயர் எக்கர் நுகர்ச்சியும் - வையையாற்றின் நீண்ட உயர்ந்த மணல் திட்டிலே (தாம் பரத்தையரோடு) கொள்ளும் (இன்ப) நுகர்ச்சியையும், உள்ளார்கொல் - (அவர்) நினையாரோ !

மகளிர்தம் - தம் - சாரியை.
மருளூட்டல் - நாவின் முனையால் கண்ணிமைகளை மெல்லத் தடவல்.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று கூறி,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

நோய்மலி நெஞ்சமோ டினையல்; தோழி !
நாமில்லாப் புலம்பாயின் நடுக்கஞ்செய் பொழுதாயின்
காமவேள் விழவாயின் கலங்குவள் பெரிதெனு
ஏமுறு கடுந்திண்டேர் கடவி
நாமமர் காதலர் துணைதந்தார் விரைந்தே !

தோழி - தோழியே ! நோய் மலி நெஞ்சமோடு இனையல் - நோய் மிக்க மனத்தோடு வருந்தாதே ; நாம் இல்லா புலம்பு ஆயின் - (இது) நாம் இல்லாத தனிமைக் காலமாதலானும், நடுக்கம் செய் பொழுதாயின் - (இது பிரிந்தார்க்கு) நடுக்கத்தைச் செய்கின்ற (இள வேனிற்) காலமாதலானும், காம வேள் விழவாயின் - (இது) மன்மதனுக்குச் செய்யும் திருவிழாக் காலமாதலானும், பெரிது கலங்குவள்

என - (நம் தலைவி) பெரிதும் கலங்குவாள் என்று (உணர்ந்து), ஏம் உறு - (பகைவர்) கலக்கம் உறுதற்குக் காரணமான, கடுந்திண்தேர் விரைந்து கடவி - கடிய வலிய தேரை விரைந்து செலுத்தி, நாம் அமர்காதலர் - நாம் விரும்பும் அன்பர், துணை தந்தார் - (தாம்) துணையாம் தன்மையை (நமக்கு)க் கொடுத்தார் !

ஏ - அசை.

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (26)

கலி. 28

இளவேனிற்கால வரவின்கண் ஆற்றாத தலைவி தலைவன்பால் தூதுவிடக் கருதினாள். அதற்குத் தோழி, " ஆயிழாய், நம் தலைவர் நம்மைக்காட்டிலும் பிரிந்து உறையும் ஆற்றல் இல்லாதவர்; விரைவில் வந்துவிடுவர். இனி நீ வருந்தாதே" எனக் கூறி வற்புறுத்துகின்றாள்.

பாடல்சால் சிறப்பின் சினையவும் சுனையவும்
நாடினர் கொயல்வேண்டா நயந்துதாம் கொடுப்பபோல்
தோடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கண்
தோடுறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெறச்
செய்யவள் அணியகலத் தாரமொ டணிகொள்பு
தொய்யகம் தாழ்ந்த கதுப்புப்போல் துவர்மணல்
வையைவார் அவிரறல் இடைபோழும் பொழுதினான்

விரிந்தானா மலராயின் விளித்தாலும் குயிலாயின்
பிரிந்துள்ளார் அவராயின் பேதுறூஉம் பொழுதாயின்
அரும்படர் அவலநோய் ஆற்றுவள் என்னாது
வருந்தநோய் மிகுமாயின் வணங்கிறை! அளியென்னோ!

புதலவை மலராயின் பொங்கரின வண்டாயின்
அயலதை அலராயின் அகன்றுள்ளார் அவராயின்
மதலையில் நெஞ்சொடு மதனிலள் என்னாது
நுதலூரும் பசப்பாயின் நுணங்கிறை! அளியென்னோ!

தோயின அறலாயின் சுரும்பார்க்கும் சினையாயின்
மாவின தளிராயின் மறந்துள்ளார் அவராயின்
பூவெழில் இழந்தகண் புலம்புகொண் டமையாது
பாயல்நோய் மிகுமாயின் பைந்தொடி! அளியென்னோ!

எனவாங்கு,

ஆயிழாய்! ஆங்கனம் உரையாதி; சேயார்க்கு
நாம்தூது மொழிந்தனம் விடல்வேண்டா; நம்மினும்
தாம்பிரிந் துறைதல் ஆற்றலர்
பரிந்தெவன் செய்தி வருகுவர் விரைந்தே!

(தரவு)

பாடல்சால் சிறப்பின் சினையவும் சுனையவும்
நாடினர் கோயல்வேண்டா நயந்துதாம் கொடுப்பபோல்
தோடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கண்
தோடுறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெறச்
செய்யவள் அணியகலத் தாரமோ டணிகொள்பு
தொய்யகம் தாழ்ந்த கதுப்புப்போல் துவர்மணல்
வையைவார் அவிரறல் இடைபோழும் பொழுதினான்

பாடல் சால் சிறப்பின் - (புலவர்) பாடலைப் பெறுதற்கு அமைந்த சிறப்பினையுடைய, சினையவும் சுனையவும் - கொம்புகளில் உள்ள பூக்களும் சுனைகளில் உள்ள பூக்களும், நாடினர் கொயல் வேண்டா - (தம்மைத்) தேடிவந்தவர் (வருந்திப்) பறித்தலை வேண்டாவாகி, நயந்து தாம் கொடுப்ப போல் - விரும்பித் (தம்மைத்) தாமே கொடுப்பன போல, தோடு அவிழ் கமழ் கண்ணி தையுபு - இதழ் விரிகின்ற வாசனை வீசுகின்ற மாலையைக் கட்டி, புனைவார்கண் - அணிகின்ற மகளிரிடத்தில், தோடு உற தாழ்ந்து-இதழ்கள் (பூமியைத்)தொடும்படி தாழ்ந்து, துறை துறை கவின்பெற - துறைகள் எல்லாம் அழகு பெறும்படி, செய்யவள் அணி அகலத்து - திருமகளது அழகிய மார்பிடத்துள்ள, ஆரமொடு அணி கொள்பு-முத்தாரத்தோடு அழகினால் (ஒப்பாதலைக்) கொண்டு, தொய்யகம் தாழ்ந்த - (சிவந்த) தலைக்கோலம் (நடுவே) தங்கின, கதுப்பு போல் - கூந்தலைப் போல, துவர் மணல் - (சில இடங்களில்) சிவந்த மணல்மேடுகளையுடைய, வையை வார் அவிர் அறல்

இடை - வைகையின் நீண்ட விளங்குகின்ற கருமணலின் இடையே, போழும் - (நீரானது) பிளந்து செல்கின்ற, பொழுதினான் - இள வேனிற்காலத்தே,

'கவின்பெற அறலிடை (நீர்) போழும் பொழுது' எனவும், 'செய்யவள் அணி அகலத்து ஆரமொடணி கொள்பு அறலிடை (நீர்) போழும் பொழுது' எனவும் கூட்டுக.

'துறை துறை' என்னும் அடுக்குப் பன்மைக்கண் வந்தது.

துவர்மணல் வையை வார் அறற்குத் தொய்யகம் தாழ்ந்த கதுப்பு உவமை.

பொழுதினான்-உருபு மயக்கம்.

(தாழிசை)

விரிந்தாறு மலராயின் விளித்தாலும் குயிலாயின்
பிரிந்துள்ளார் அவராயின் பேதுறூஉம் பொழுதாயின்
அரும்படர் அவலநோய் ஆற்றுவள் என்னாது
வருந்தநோய் மிகுமாயின் வணங்கிறை ! அளியென்னோ !

மலர் விரிந்து ஆறு ஆயின் - மலர்கள் மலர்ந்து ஒழியாதிருக்கு மானால், குயில் விளித்து ஆலும் ஆயின்-குயில்கள் (தம் பேடையை) அழைத்துக் கூவுமானால், அவர் பிரிந்து உள்ளார் ஆயின் - நம் தலைவர் (நம்மைப்) பிரிந்து நினையாரானால், பேது உறூஉம் பொழுது ஆயின் - (இது) மயக்கம் உறுத்தும் காலமாயிருக்குமானால், அரும்படர் - (பொறுத்தற்கு) அரிய நினைவையுடைய, அவலம் நோய் - துன்பத் தைச் செய்யும் (காம) நோய்க்கு, ஆற்றுவள் என்னாது-(இவள்) ஆற்றி இருப்பள் என்று (நீ) கருதாமல் (இவள் இறந்துவிடுவள் என்று எண்ணி), வருந்த நோய் மிகும் ஆயின் - (நீ) வருந்தும்படி (என் காம) நோய் மிகுமானால், வணங்கு இறை - வளைந்த முன்கையையுடைய வளே ! அளி என் - (அவர் வந்து நம்மாட்டுச் செய்யும்) அன்பு என்ன பயன் தரும் !

ஓ - அசை.

புதலவை மலராயின் பொங்கரின வண்டாயின்
அயலதை அலராயின் அகன்றுள்ளார் அவராயின்
மதலையில் நெஞ்சோடு மதனிலள் என்னாது
நுதலூரும் பசப்பாயின் நுணங்கிறை! அளியென்னோ !

மலர் புதலவை ஆயின் - மலர்கள் புதரிடத்தனவானால், *வண்டு பொங்கரின ஆயின்* - வண்டுகள் சோலை இடத்தனவானால், *அலர் அயலதை ஆயின்* - அலர் அயல் மகளிர் இடத்ததானால், *அவர் அகன்று உள்ளார் ஆயின்*-அவர் (நம்மைப்) பிரிந்து நினையாரானால், *மதலை இல் நெஞ்சொடு* - (இவள் ஒரு) பற்றுக்கோடும் இல்லாத நெஞ்சத்துடன், *மதன் இலள் என்னாது* - வலி இல்லாதவள் என்று கருதாமல், *பசப்பு நுதல் ஊரும் ஆயின்* - பசலை நிறம் (என்) நெற்றியிலே பரவுமானால், *நுணங்கு இறை* - நுண்மையான முன்கையையுடையவளே ! *அளி என்*-(அவர் வந்து நம்மாட்டுச் செய்யும்) அன்பு என்ன பயன் தரும் !

அயலதை - ஐ - அசை. ஓ - அசை.

தோயின அறலாயின் சுரும்பார்க்கும் சினையாயின்
மாவின தளிராயின் மறந்துள்ளார் அவராயின்
பூவெழில் இழந்தகண் புலம்புகோண் டமையாது
பாயல்நோய் மிகுமாயின் பைந்தொடீ ! அளியென்னோ !

அறல் - (அரித்து ஒழுகுகின்ற) நீர்த்துளிகள், *தோயின ஆயின்*-தேங்கி நின்றனவானால், *சினை* - கொம்புகளிலே, *சுரும்பு ஆர்க்கும் ஆயின்* - வண்டுகள் ஆரவாரிக்குமானால், *தளிர்* - தளிர்கள், *மாவின ஆயின்* - மாமரத்திடத்தனவானால், *அவர் மறந்து உள்ளார் ஆயின்* - நம் தலைவர் (நம்மை) மறந்துள்ளாரானால், *பூ எழில் இழந்த கண்* - பூவினது அழகை இழந்த கண்கள், *புலம்பு கொண்டு* - தனிமை கொண்டு, *பாயல் அமையாது* - தூக்கம் பொருந்தாமல், *நோய் மிகும் ஆயின்* - நோய் மிகுதியும் கொள்ளுமாயின், *பைந்தொடி* - பசிய வளையலை உடையாய்! *அளி என்* - (அவர் வந்து நம்மாட்டுச் செய்யும்)அன்பு என்ன பயன் தரும் !

ஓ - அசை.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

ஆயிழாய் ! ஆங்கனம் உரையாதி ; சேயார்க்கு
நாம்தூது மொழிந்தனம் விடல்வேண்டா ; நம்மினும்

தாம்பிரிந் துறைதல் ஆற்றலர்
பரிந்தேவன் செய்தி வருகுவர் விரைந்தே!

ஆய்இழாய்-ஆராய்ந்தெடுத்த அணிகளையுடைய தலைவியே! ஆங்கனம் உரையாதி - அங்ஙனம் சொல்லாதே; சேயார்க்கு - தூரத்திலிருக்கின்ற நம் தலைவர்க்கு, நாம் தூது மொழிந்தனம் விடல் வேண்டா - நாம் தூது மொழிந்து விடுதல் வேண்டா; நம்மினும் தாம் பிரிந்து உறைதல் ஆற்றலர் - நம்மைக்காட்டிலும் அவர் (இக்காலத்தில்) பிரிந்து இருத்தலை ஆற்றாராய், விரைந்து வருகுவர் - விரைந்து வருவார், பரிந்து எவன் செய்தி - (அதனால் நீ) வருந்தி என்ன காரியம் செய்கிறாய்!

மொழிந்தனம் - முற்றெச்சம்.

ஏ - அசை.

இதனால் தலைவிக்கு இழிவும், தோழிக்கு அச்சமும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (27)

கலி. 29

இளவேனிற்கால வரவின்கண் ஆற்றாது வருந்திய தலைவியைத் தோழி ஆற்றியிருக்குமாறு வற்புறுத்த, அதற்கு மாறாக வருந்தி இருந்தவளுக்கு அவள் தலைவனது வரவை உணர்ந்து பெருங்களிப்பால் கூறுகின்றாள்.

தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்
அல்லாந்தார் அலவுற ஈன்றவள் கிடக்கைபோல்
பல்பயம் உதவிய பசுமைதீர் அகல்ஞாலம்
புல்லிய புனிறொரீஇப் புதுநலம் ஏர்தர
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
(இளையவர் ஐம்பால்போல்)எக்கர்போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவள் திதலைபோல்
ஆயிதழ்ப் பன்மலர் ஐயகொங் குறைத்தர
மேதக இளவேனில் இறுத்தந்த பொழுதின்கண்

சேயார்கண் சென்றவென் னெஞ்சினைச் சின்மொழி!
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன் ! நிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப்பல் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தரூஉம் !

போழ்துள்ளார் துறந்தார்கண் புரிவாடும் கொள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் ! கரப்பென்மன் ! கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணும் இருந்தும்பி
யாழ்கொண்ட இமிழிசை இயல்மாலை அலைத்தரூஉம் !

தொடிநிலை நெகிழ்த்தார்கண் தோயுமென் ஆருயிர்
வடுநீங்கு கிளவியாய் ! வலிப்பென்மன் ! வலிப்பவும்
நெடுநிலாத் திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றம் கங்குல்வந் தலைத்தரூஉம் !

எனவாங்கு,

வருந்தினை ; வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னோக்கா தேகிநம்
அருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின் தேமொழி படர்ந்தே !

(தரவு)

தோல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்
அல்லாந்தார் அலவுற ஈன்றவள் கிடக்கைபோல்
பல்பயம் உதவிய பசுமைதீர் அகல்ஞாலம்
புல்லிய புனிற்றேர்இப் புதுநலம் ஏர்தர
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
இளையவர் ஐம்பால்போல் எக்கர்போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவள் திதலைபோல்
ஆயிதழ்ப் பன்மலர் ஐயகொங் குறைத்தர
மேதக இளவேனில் இறுத்தந்த பொழுதின்கண்

வயவு நோய் - கருப்பம் தங்கிய காலத்திற் பிறக்கும் வேட்கையாகிய நோய், தொல் எழில் வரைத்து அன்றி - பழைய அழகைக்

கெடுக்கின்ற அளவிலே நிற்பதன்றி, நலிதலின் - (அதற்குமேலும்) வருத்துவதனாலே, அல்லாந்தார் - (அதற்கு) வருந்திய சுற்றத்தார், அலவுற ஈன்றவள் கிடக்கைபோல் - (பின்னர்ப் பெரிதும்) வருந்தப் புத்திரனைப் பெற்றவள் நிலை போல, பல் பயம் உதவிய - பலவித மான (பயிர்களாகிய) பயனை (உண்டாக்கி) உதவிய காரணத்தினால், பசுமை தீர் அகல் ஞாலம்-பசுமைத் தன்மை நீங்கிய அகன்ற உலகம் (அத்தாய் தான் கொண்ட ஈன்ற அணிமை நீங்கிப் புதிய அழகைப் பெற்றாற் போல), புல்லிய - (தான்) கொண்ட, புனிறு ஒரீஇ - ஈன்ற அணிமை நீங்கி, புது நலம் ஏர்தர - புதிய அழகோடு தோன்றவும், வளையவர் வண்டல் போல் - வளையல்களை அணிந்த சிறு பெண்கள் செய்யும் சிற்றில் போல, வார் மணல் வடு கொள - பரந்த மணல் வடுவுடையவும், இளையவர் ஐம்பால் போல் - இளம்பெண்களுடைய கூந்தல் போல, எக்கர் போழ்ந்து - மணல் மேடுகளை அறுத்துக் கொண்டு, அறல் வார - நீர் ஒழுகவும், மாயவள் திதலை போல்-மாமை நிறத்தை உடையவளது தேமல் போல, மா ஈன்ற தளிர்மிசை - மாமரங்கள் தோற்றுவித்த (சிறிது முற்றிய) தளிர்களின்மேலுள்ள, ஆய்இதழ் பல் மலர்-அழகிய இதழ்களையுடைய பல மலர்களினுடைய, ஐய கொங்கு உறைத்தர - வியக்கத்தக்க மகரந்தப் பொடிகள் உதிர் தலைச் செய்யவும், மே தக - பெருமை மிகவும், இளவேனில் - இள வேனிற்காலம், இறுத்தந்த பொழுதின்கண் - வந்து தங்கிய பொழுதிலே,

'ஐ' என்னும் உரிச்சொல் 'ஐய' என ஈறு திரிந்தது. (சிந். 3019-ஆம் செய்யு ளின் உரை).

' ஏர்தர, வடுக்கொள, அறல்வார, உறைத்தர, மேதக இளவேனில் இறுத் தந்த பொழுது ' எனக் கூட்டுக.

பயன்தரும் நிலையிலுள்ள பயிர்களையுடைய நிலத்திற்குக் கருவுற்ற பெண் ணும், அறுவடையான நிலத்திற்குப் புதல்வனைப் பெற்றெடுத்த அம்மகளின் அழகற்றுச் செயலற்று நிற்கும் நிலையும், அந்நிலத்தினின்று தோன்றிய பயனுக் குப் புதல்வனும், பின்னர் இளவேனிற்காலத்தாற் பொலிவுறும் அந்நிலத் திற்கு ஈன்ற அணிமை நீங்கிப் புதிய அழகைப் பெறும் அம்மகளும் உவமை.

(தாழிசை)

சேயார்கண் சென்றவென் நெஞ்சினைச் சின்மொழி!
நீகூறும் வரைத்தன்றி நிறப்பென்மன் ! நிறைநீவி

வாய்விரிபு பனியேற்ற விரவுப்பல் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தரூஉம் !

சில்மொழி - சில சொற்களை கூறும் இயல்புடையாய் ! சேயார் கண் சென்ற - தூரத்திலிருக்கின்ற தலைவரிடத்திற் சென்ற, என் நெஞ்சினை - எனது மனத்தினை, நீ கூறும் வரைத்து அன்றி - நீ கூறும் அளவேயன்றி, நிறுப்பென் மன் - ஆற்றி நிறுத்துவேன் பெரிதும் ! (ஆனால்) நிறை நீவி - (நான் ஆற்றி) நிறுத்தலைக் கைவிடும் படி, வாய் விரிபு பனி ஏற்ற - வாய் விரிந்து பனியைப் பெற்று நின்ற, விரவு பல் மலர் தீண்டி - (பலவகையாகக்) கலத்தலையுடைய பல மலர்களைத் தீண்டி வந்து, நோய் சேர்ந்த - (பிரிந்தார்க்கு) நோய் செய் தற்குக் காரணமான, வைகலான் - இளவேனிற்காலத்தில், வாடை வந்து அலைத்தரூஉம் - வாடைக்காற்றானது வந்து வருத்தத்தைத் தரும் !

'தீங்கிளவி ஒன்று இரண்டுதான் மிழற்றும் ஒருநாட் காறும்' (சிந். 1353), *ஆகலின் 'சின்மொழி' என்றாள்.*

'நீவி' என்பதை 'நீவ' எனத் திரிக்க.

வைகலான் - உருபு மயக்கம்.

போழ்துள்ளார் துறந்தார்கண் புரிவாடும் கோள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் ! கரப்பென்மன் ! கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணும் இருந்தும்பி
யாழ்கொண்ட இமிழிசை இயல்மாலை அலைத்தரூஉம் !

சுடர் இழாய் - ஒளி பொருந்திய அணிகளை உடையவளே! போழ்து உள்ளார் - இளவேனிற்காலத்தை நினையாதவராய், துறந் தார்கண் -(நம்மைப்) பிரிந்திருந்தவரிடத்தில், புரி - (மனம்) விரும்புத லால், வாடும் கொள்கையை - (என் மேனி) வாடுகின்ற தன்மையை, சூழ்பு - (பிறர் அறியலாகாதென்று) எண்ணி, கரப்பென் மன் - மறைப் பேன் பெரிதும் ! கை நீவி - (ஆனால் யான் மறைப்பதைக்) கைவிடும் படி, வீழ்கதிர் - (சூரியனது) விழுகின்ற கதிர்கள், விடுத்த - மலரச் செய்த, பூ விருந்து உண்ணும் இருந்தும்பி - பூவிலிருந்து புதிய தேனை உண்ணுகின்ற கருமையான வண்டுகள், யாழ் கொண்ட - யாழி னது ஓசையையொத்த, இமிழ் இசை இயல்மாலை - ஒலிக்கின்ற ஓசை பொருந்திய மாலைப்பொழுதானது, அலைத்தரூஉம் - (வந்து) வருத்தத் தைத் தரும் !

'நீவி' என்பதை 'நீவ' எனத் திரிக்க.

கொண்ட - உவம உருபு.

ஆங்கு, ஏ - அசை.

தொடிநிலை நெகிழ்த்தார்கண் தோயுமேன் ஆருயிர்
வடுநீங்கு கிளவியாய்! வலிப்பேன்மன்! வலிப்பவும்
நெடுநிலாத் திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றம் கங்குல்வந் தலைத்தரூஉம்!

வடு நீங்குகிளவியாய் - குற்றம் நீங்கிய சொற்களை உடையவளே! தொடி - தொடிகள், நிலை - (நிற்கின்ற) இடத்தினின்றும், நெகிழ்த்தார்கண் - கழலும்படி செய்தவரிடத்தில், தோயும் என் ஆர் உயிர் - (போய்ப்) பொருந்தும் எனது அருமையான உயிரை, வலிப்பென் மன் - (அவரிடத்துச் சென்று பொருந்தாமல்) மீட்டுக்கொள்வேன் பெரிதும்! வலிப்பவும் - (யான் அங்ஙனம் மீட்கத்) துணியவும், நெடு நிலா - நீண்ட நிலா, திறந்து உண்ண - திறந்து உண்ணும்படி, நிரை இதழ் வாய் விட்ட - வரிசையாகப் பொருந்தின இதழ்கள் மலர்ந்த, கடிமலர் - வாசனையுள்ள பூக்கள், கமழ் நாற்றம் - வீசுகின்ற வாசனை, கங்குல் வந்து அலைத்தரூஉம் - இராக்காலத்தில் வந்து வருத்தத்தைச் செய்யும்!

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று சொல்லி,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

வருந்தினை; வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னோக்கா தேகிநம்
அருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின் தேமொழி படர்ந்தே!

வருந்தினை - வருந்தினாய்; வதிந்த நின் வளை நீங்க - (கையிலே) தங்கின நின் வளை கழலும்படி, சேய் நாட்டு - தூரதேயத்தில், பிரிந்து செய்பொருள் பிணி - பிரிந்திருந்து தேடும் பொருள் நோயால், பின் நோக்காது ஏகி - திரும்பிப் பாராமல் சென்று, திருந்து எயிறு இலங்கு - திருந்தின பற்கள் விளங்குதற்குக் காரணமான, நின் தே மொழி

படர்ந்து - நினது தேன்போலும் மொழியை நினைந்து, நம் அருந்துயர் - நமது அரிய துன்பத்தை, களைநர் வந்தனர் - களைபவராய்(த் தலைவர்) வந்தார்! (இனி நீ வருந்தாதே)

ஏ - அசை.

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (28)

கலி. 30

இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாகச் சொல்லிப் பொருள் தேடச் சென்ற தலைவன் அப்பருவம் வந்தும் வரவில்லை. அதனால் தலைவி பெரிதும் வருந்தி, "நம்மிடத்தில் தலைவர்க்கு அன்பு இல்லாதிருந்தாலும், இக்கால வரவினை அவர்க்குச் சொல்லுபவர் யாராவது இருப்பாரானால், முன்பு தாம் பரத்தையரோடு விளையாடிய விளையாட்டுக்களை நினைத்துக்கொண்டு வந்துவிடுவார்" என்று தோழியினிடத்திற் கூறினாள். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பாணன் போர்க்களத்திலுள்ள பாசறையை அடைந்து தலைவனை நோக்கிக் கூறுகின்றான்.

அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் அணிகொள
விரிந்தானாச் சினைதொறூஉம் வேண்டுந்தா தமர்ந்தாடிப்
புரிந்தார்க்கும் வண்டொடு புலம்புதீர்ந் தெவ்வாயும்
இருந்தும்பி இறைகொள எதிரிய வேனிலான்

துயிலின்றி யாம்நீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி அறியாத விரிமலர்த் தண்காவில்
குயிலாலும் பொழுதெனக் கூறுநர் உளராயின்!

பானாள்யாம் படர்கூரப் பணையெழில் அணைமென்தோள்
மானோக்கி னவரோடு மறந்தமைகு வான்மன்னோ
ஆனாச்சீர்க் கூடலுள் அரும்பவிழ் நறுமுல்லைத்
தேனார்க்கும் பொழுதெனத் தெளிக்குநர் உளராயின்!

உறலியாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னோ
பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையென் றறையுநர் உளராயின்!

எனவாங்கு,

தணியாநோய் உழந்தானைத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே!

(தரவு)

அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் அணிகோள
விரிந்தானச் சினைதோறூஉம் வேண்டுந்தா தமர்ந்தாடிப்
புரிந்தார்க்கும் வண்டோடு புலம்புதீர்ந் தெவ்வாயும்
இருந்தும்பி இறைகோள எதிரிய வேனிலான்

அருந்தவம் ஆற்றியார் - (முற்பிறப்பில்) செய்தற்கு அரிய தவத்தைச் செய்தவர், நுகர்ச்சி போல் - (அந்தத் தவத்தாற் பெறக்கூடிய பயனை மறுபிறப்பில்) நுகர்வது போல, அணி கோள - அழகு பெற, விரிந்து ஆன சினைதொறூஉம் - (அரும்புகள்) விரிந்து நீங்காத கொம்புகள்தோறும், வேண்டும் தாது அமர்ந்து ஆடி - (தாம்) விரும்பும் மகரந்தப் பொடிகளைப் பொருந்தியுண்டு, புரிந்து ஆர்க்கும் - விரும்பி ஒலி செய்கின்ற, வண்டொடு - வண்டுகளோடு, இருந்தும்பி - கரிய தும்பிகளும், புலம்பு தீர்ந்து - வருத்தம் நீங்கி, எ வாயும் இறை கொள-எவ்விடமும் தங்குதல் கொள்ளும்படி, எதிரிய - (மரங்கள் அவற்றை) எதிர்கொண்ட, வேனிலான் - இளவேனிற்காலத்தில்,

வேனிலான் - உருபு மயக்கம்.

(தாழிசை)

துயிலின்றி யாம்நீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி அறியாத விரிமலர்த் தண்காவில்
குயிலாலும் பொழுதெனக் கூறுநர் உளராயின்!

வெயில் ஒளி அறியாத - வெயிலினது ஒளியைக் கண்டறியாத, விரிமலர் தண் காவில் - விரிந்த மலர்களையுடைய குளிர்ச்சி பொருந்திய சோலைகளிலே, குயில் ஆலும் பொழுது என - குயில்கள் கூவும் காலம் (இக்காலம்) என்று, கூறுநர் உளராயின் - (தலைவற்கு எடுத்துச்) சொல்லுபவர் இருப்பாரானால், துயில் இன்றி - தூக்கம் இல்லாமல், யாம் நீந்த - நாம் (பிரிந்தார்க்குப் பெருந்துன்பத்தைச் செய்கின்ற யாமமாகிய கடலை) நீந்த, தொழுவை அம் புனல் ஆடி - மடுக்களிலுள்ள அழகிய நீரில் ஆடி, மயில் இயலார் மருவு உண்டு - மயில் போலும் சாயலையுடைய பரத்தையர் சேர்தலை நுகர்ந்து, மறந்து அமைகுவான் - (அவன் நம்மை) மறந்து (அவரிடத்தில்) தங்கி இருப்பான்!

'மன்' என்பது 'அவ்வாறு கூறுநர் இலர்; உளராயினும் நமக்கு அதனாற் பயனின்று' என்பது படநின்றது. ஒ - அசை. கீழ் வருவனவற்றிற்கும் இக் குறிப்பே கொள்க.

பானாள்யாம் படர்கூரப் பணையெழில் அணைமென்தோள்
மானோக்கி னவரோடு மறந்தமைகு வான்மன்னோ
ஆனாச்சீர்க் கூடலுள் அரும்பவிழ் நறுமுல்லைத்
தேனார்க்கும் பொழுதெனத் தெளிக்குநர் உளராயின்!

ஆனா சீர் கூடலுள் - நீங்காத சிறப்பினையுடைய மதுரை மாநகரில், அரும்பு அவிழ் நறுமுல்லை - அரும்புகள் கட்டு விடுகின்ற வாசனை பொருந்திய முல்லைப் பூக்களில், தேன் ஆர்க்கும் பொழுது என - வண்டுகள் ஒலிக்கும் காலம் (இக்காலம்) என்று, தெளிக்குநர் உளர் ஆயின் - (அவற்குத்) தெரிவிப்பார் இருப்பாரானால், பால் நாள் யாம் படர் கூர - நடு யாமத்தில் நாம் துன்பம் மிக, பணை எழில் அணை மென் தோள் - மூங்கிலின் அழகினைக் கொண்ட மெல்லிய தோள்களையுடைய, மான் நோக்கினவரோடு - மானினது பார்வை போன்ற பார்வையினையுடைய பரத்தையருடனே கூடி, மறந்து அமைகுவான் - (அவன் நம்மை) மறந்து (அவரிடத்தில்) தங்கி இருப்பான்!

'காமம் வித்துபு விளைக்கும்...யாமம்' (பரிபா-15) ஆகலின், 'பால்நாள் படர் கூர' என்றாள்.

உறலியாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னோ

பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையேன் றறையுநர் உளராயின்!

பெறல் அரும்பொழுதோடு - பெறுதற்கு அரிய இளவேனிற் காலத்தால், பிறங்கு இணர் - விளங்குகின்ற பூங்கொத்துக்களையுடைய, துருத்தி சூழ்ந்து - ஆற்றிடைக் குறையைச் சூழ்ந்து, வையை அறல் வாரும் என்று - வையை நதி (கரையில்) அறல் உண்டாகும்படி ஒழுகும் என்று, அறையுநர் உளராயின் - (அவற்குச்) சொல்லுபவர் இருப்பாரானால், உறல் யாம் ஒளி வாட - (தன்னை) அடைதற்கு உரிய நாம் ஒளி கெடும்படியாக, உயர்ந்தவன் விழாவினுள் - உயர்ந்தவனாகிய காமனுக்கு எடுத்த (இந்தத்) திருவிழாவில், விறல் இழையவரோடு - வெற்றியையுடைய அணிகளையுடைய பரத்தையரோடு, விளையாடுவான் - (அவன்) காம இன்பத்தை நுகர்வான்!

'விளையாடுவான்' என்பது இடக்கர்; 'இடக்கர் என்பது மறைத்து மொழிகிளவி.' - திவாகரம்.

பொழுதோடு - உருபு மயக்கம்.

அறல் - அலையால் அலைக்கப்பெற்றுப் படிப்படியாய் அமைந்து நிற்கும் நுண்கருமணலின் கிடக்கை.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று சொல்லி,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

தணியாநோய் உழந்தாளுத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி! பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே!

தணியா நோய் உழந்து - தணிதல் இல்லாத (காம) நோயால் வருந்தி, ஆறு தகையவள் - (முன்னே) கெடாத அழகை உடையவள், பணிபு நின் காமர் கழல் அடி சேரா - பணிந்து உனது அழகிய (வீரக்) கழலையணிந்த பாதத்தைச் சேராத, நாமம் சால் தெவ்வரின்- அச்சம் மிகுந்த பகைவரைக்காட்டிலும், பெரிது நடுங்கினள் - பெரி

தும் நடுங்கினாள்! தகை பெற - (ஆதலினால் அவள்) அழகு பெறும் படி, அணி கிளர் நெடுந்திண்தேர் - அழகு விளங்குகின்ற பெரிய வலிய தேரை, அயர்மதி - செலுத்துவாயாக!

'அயர்மதி' என்பதில் 'மதி' முன்னிலை அசை.

ஏ - அசை.

இதனால் தலைவிக்கு இழிவும், தலைவனுக்கு அசைவும் பிறந்தன.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (29)

கலி. 31

இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாகத் தலைவன் தலைவிக்குக் கூறி மண்ணாசையால் பிரிந்தான். முன்பனிக்காலமும் பின்பனிக் காலமும் வந்து வருத்த ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றியிருக்கு மாறு வற்புறுத்த, அதற்கு மாறாக வருந்தின தலைவிக்கு அவள் தலைவனது வரவுணர்ந்து பேருவகையால் கூறுகின்றாள்.

கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற
நெடுங்கயத் தயலயல் அயிர்தோன்ற அம்மணல்
வடுத்தூர வரிப்பபோல், ஈங்கைவா டுதிர்புகப்
பிரிந்தவர் நுதல்போலப், பீர்வீயக் காதலர்ப்
புணர்ந்தவர் முகம்போலப், பொய்கைபூப் புதிதீன
மெய்கூர்ந்த பனியொடு மேல்நின்ற வாடையால்
கையாறு கடைகூட்டக் கலக்குறூஉம் பொழுதுமன்
பொய்யேமென் றாயிழாய்! புணர்ந்தவர் உரைத்ததை;

மயங்கமர் மாறட்டு மண்வௌவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேல் தகைகாண விடுவதோ
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு
வயங்கிழை தண்ணென வந்தவிவ் வசைவாடை ?

தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ

நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை ?

பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மல்நாம் வனப்பார விடுவதோ
புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கள் பொதிசெய்யா
முகைவெண்பல் நுதிபொர முற்றிய கடும்பனி ?

எனவாங்கு,

வாளாதி வயங்கிழாய் ! வருந்துவள் இவளென
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி
மீளிவேல் தானையர் புகுதந்தார்
நீளுயர் கூடல் நெடுங்கொடி எழவே !

(தாவு)

கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற
நெடுங்கயத் தயலயல் அயிர்தோன்ற அம்மணல்
வடுத்தூர வரிப்பபோல் ஈங்கைவா டுதிர்புகப்
பிரிந்தவர் நுதல்போலப் பீர்வீயக் காதலர்ப்
புணர்ந்தவர் முகம்போலப் பொய்கைபூப் புதிதீன
மெய்கூர்ந்த பனியோடு மேல்நின்ற வாடையால்
கையாறு கடைகூட்டக் கலக்குறூஉம் பொழுதுமன்
பொய்யேமென் றுயிழாய் ! புணர்ந்தவர் உரைத்ததை ;

கடும்புனல் கால் பட்டு - மிக்க நீர் கால்வாய்களில் பொருந்தி, கலுழ் தேறி - கலக்கம் நீங்கி, கவின் பெற - அழகைப் பெறவும், நெடுங்கயத்து அயல் அயல் - நீண்ட குளங்களின் பக்கங்களில் எல்லாம், அயிர் தோன்ற - நுண்மணல் காணப்படவும், அ மணல் வடு தூர - அந்த மணலிலுள்ள அடையாளங்கள் மறையும்படி, வரிப்ப போல் - அழகைச் செய்வன போல, ஈங்கை வாடு உதிர்பு உக - ஈங்கைக் கொடியினுடைய வாடுதலைக் கொண்ட பூக்கள் உதிர்ந்து சிந்தவும், பிரிந்தவர் - (கணவரைப்) பிரிந்த பெண்களினுடைய, நுதல் போல - நெற்றியைப் போல, பீர் வீய - (முன்பு பூத்த) பீர்க்கம் பூ (இப்பொழுது) கெடவும், காதலர் புணர்ந்தவர் முகம் போல - (தாம் அன்பு

கொண்ட) தலைவரைக் கூடின பெண்களின் முகத்தைப் போல, பொய்கை பூ புதிது ஈன - குளமானது தாமரைப் பூவைப் புதிதாகப் பூக்கவும் (வரும்), பொழுது - இளவேனிற்காலம், ஆய்இழாய்-ஆராய்ந் தெடுத்த அணிகளை அணிந்த தோழியே! பொய்யேம் என்று - பொய் சொல்லமாட்டோம் (தப்பாமல் வருவோம்) என்று சொல்லி, புணர்ந் தவர் உரைத்ததை-கூடிய தலைவர் உரைத்த காலமாம்; மன் - அதனால் நாம் பெற்றதென்! மெய் கூர்ந்த - உடம்பு வளைதற்குக் காரணமாகிய, பனியொடு - பின்பனியாலும், மேல் நின்ற வாடையால் - அதற்கு முன்னுள்ள (முன்பனிக்காலத்து) வாடையாலும் (உண்டாகிய), கையாறு கடை கூட்ட - செயலற்று நிற்கும் நிலைமை இறப்பை (நமக்கு)க் கூட்டுதலினால், கலக்குறாஉம் - (மனம்) கலங்குகின்றது!

'பெற, தோன்ற, உக, வீய, ஈன (வரும்) பொழுது' எனக் கூட்டுக.

உரைத்ததை - திரிசொல்.

(தாழிசை)

மயங்கமர் மாறட்டு மண்வௌவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேல் தகைகாண விடுவதோ
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதோடு
வயங்கிழை தண்ணென வந்தவிவ் வசைவாடை ?

பயம் கெழு - (பல்பொருளும் பல்லுயிரும் தோன்றுதலாகிய) பயனோடு கூடிய, பல்கதிர் - (சந்திரனுடைய) பல கிரணங்கள், பால் போலும் பொழுதொடு - பாலைப்போல விளங்கும் இராப்பொழுதோடு, வயங்கு இழை - விளங்குகின்ற அணிகள், தண் என வந்த இ அசை வாடை - குளிரும்படி வந்த இந்த அசைகின்ற வாடைக் காற்றானது, மயங்கு அமர் - (இரண்டு சேனைகளும்) கலந்து செய்கின்ற போரில், மாறு அட்டு - மாறுபட்ட அரசனைக் கொன்று, மண் வௌவி - (அவன்) நாட்டைக் கைக்கொண்டு, தயங்கிய களிற்றின்மேல் - விளங் கிய யானையின்மேல், வருபவர் - வருந்தலைவரது, தகை காண - (வீரத்தால் தோன்றிய) அழகைக் காண, விடுவதோ - (நம்மை உயி ருடன்) விடுவதொன்றாகுமோ ?

'அசை வாடை விடுவதோ' என முடிக்க.

மாறு - ஆகுபெயர்.

தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை ?

நீள் கழை நிவந்த பூ - நீண்ட கரும்பில் வளர்ந்த பூக்களை, *நிறம் வாட* - நிறம் வாடும்படி, *தூற்றுபு* - (காற்றால்) தூற்றி, *தோள் அதிர்பு* - கைகள் (குளிரால்) நடுங்கி, *அகம் சேர* - (நம்) மார்பைச் சேரும்படி, *துவற்றும்* - தூறுகின்ற, *இ சில் மழை* - இந்தச் சிறு மழை, *தாள்* - (தமது) தாள்களால், *வலம் பட வென்று* - வெற்றி உண்டாகும்படி வென்றும், *தகை நல் மாமேல் கொண்டு* - இலக்கணம் பொருந்திய நல்ல குதிரையின்மேல் அமர்ந்து, *வாள் வென்று* - வாளாலே வென்றும், *வருபவர் வனப்பு ஆர* - வரும் தலைவரின் (வீரத்தால் பிறந்த) அழகை (நாம் கண்டு) நுகரும்படி, *விடுவதோ* - (நம்மை உயிருடன்) விடுவதொன்றாகுமோ ?

'சின்மழை விடுவதோ' என முடிக்க.

பகைவென்று திறைகொண்ட பாய்திண்தேர் மிசையவர்
வகைகொண்ட செம்மல்நாம் வனப்பார விடுவதோ
புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கள் போதிசெய்யா
முகைவெண்பல் நுதிபோர முற்றிய கடும்பனி ?

புகை என - புகையைப் போல, *புதல் சூழ்ந்து* - புதர்களைச் சுற்றிக்கொண்டு, *பூ அம் கள்* - மிக அழகிய தேனை, *பொதி செய்யா* - (உள்ளே) கொள்ளுதல் செய்யாத, *முகை வெண்பல் நுதி* - (முல்லை) அரும்புகள் போன்ற வெண்மையான பற்களின் முனைகள், *போர* - (ஒன்றோடொன்று) தாக்கும்படி, *முற்றிய கடும்பனி* - முதிர்ந்த கடுமையாகிய பனி, *பகை வென்று* - பகையரசர்களை வென்று, *திறை கொண்ட* - (அவர்களிடமிருந்து) கப்பம் வாங்கின, *பாய் திண் தேர் மிசையவர்* - பாய்கின்ற திண்ணிய தேர்மேல் வரும் தலைவரது, *வகை கொண்ட செம்மல் வனப்பு* - (பலவிதக்) கூறுபாட்டைக் கொண்ட தலைமையினையுடைய (வீரத்தாற் பிறந்த) அழகை, *நாம் ஆர* - நாம் (கண்டு) நுகரும்படி, *விடுவதோ* - (நம்மை உயிருடன்) விடுவதொன்றாகுமோ ?

'கடும்பனி விடுவதோ' என முடிக்க.

'புகையெனச் சூழ்ந்து முற்றிய கடும்பனி' என்றும், 'நுதிபொர முற்றிய கடும்பனி' என்றும் கூட்டுக.

இம்மூன்று தாழிசைகளிலும் வந்த ஒகாரங்கள் எதிர்மறைப் பொருளன.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

வாளாதி வயங்கிழாய்! வருந்துவள் இவளென
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி
மீளிவேல் தானையர் புகுதந்தார்
நீளுயர் கூடல் நெடுங்கொடி எழவே!

வயங்கு இழாய் - விளங்குகின்ற அணிகளை உடைய தலைவியே, வாளாதி - பேசாதே! இவள் வருந்துவள் என - தலைவி வருந்துவாள் என்று, நாள் வரை நிறுத்து தாம் சொல்லிய - (வரும்) நாளின் எல்லையைக் குறிப்பிட்டுத் தாம் சொல்லிய உறுதிமொழிகள், பொய் அன்றி - பொய் ஆகாவாறு, நீள் உயர் கூடல் - மிக உயர்ந்த (மதில்களையுடைய) மதுரையில், நெடுங்கொடி எழ - நீண்ட கொடிகள் உயரும்படி, மீளி வேல் தானையர் - இயமனையொத்த வேல் கொண்ட சேனையையுடைய தலைவர், புகுதந்தார் - நுழைந்தார்.

'வாளா என்கிளவி பேசா என்றாகும்.' - திவாகரம்.

ஏ - அசை.

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (30)

கலி. 32

இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாகச் சொல்லிச் சென்ற தலைவன் அக்கால வரவிலும் வரவில்லை. அதனால் தலைவி பெரிதும் வருந்தினாள். அதனைக் கண்ட தோழி முதலில் வேனிலை நோக்கி

அதன் செயலைக் கூறி, பின்னர்த் தலைவியை நோக்கி, "நங்காய், நம் காதலர் வருவர் எனக் கூற வந்த தூது இது" எனக் கூறி அவள் துயரை ஆற்றுகின்றாள்.

எஃகிடை தொட்டகார்க் கவின்பெற்ற ஐம்பால்போல்
மையற விளங்கிய துவர்மணல் ; அதுவது
ஐதாக நெறித்தன்ன அறலவிர் நீளைம்பால்
அணிநகை இடையிட்ட ஈகையம் கண்ணிபோல்
பிணிநெகிழ் அலர்வேங்கை விரிந்தபூ நெறிகொளத்

துணிநீரால் தூமதி நாளால் அணிபெற
ஈன்றவள் திதலைபோல் ஈர்பெய்யும் தளிரொடும்
ஆன்றவர் அடக்கம்போல் அலர்ச்செல்லாச் சினையொடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடும்
நல்லவர் நுடக்கம்போல் நயம்வந்த கொம்பொடும்
உணர்ந்தவர் ஈகைபோல் இணரூழ்த்த மரத்தொடும்
புணர்ந்தவர் முயக்கம்போல் புரிவுற்ற கொடியொடும்
நயந்தார்க்கோர் நல்லைமன் இளவேனில் எம்போல ?

பசந்தவர் பைதல்நோய் பகையெனத் தணித்துநம்
இன்னுயிர் செய்யும் மருந்தாகிப் பின்னிய
காதலர் எயிறேய்க்கும் தண்ணருவி நறுமுல்லைப்
போதாரக் கொள்ளும் கமழ்குரற் கென்னும்
தூது வந்தன்றே தோழி !
துயரறு கிளவியோ டயர்ந்தீகம் விருந்தே !

எஃகிடை தோட்டகார்க் கவின்பெற்ற ஐம்பால்போல்
மையற விளங்கிய துவர்மணல் ; அதுவது
ஐதாக நேறித்தன்ன அறலவிர் நீளைம்பால்
அணிநகை இடையிட்ட ஈகையம் கண்ணிபோல்
பிணிநேகிழ் அலர்வேங்கை விரிந்தபூ நேறிகோள

எஃகு இடை தொட்ட - கத்தரிக்கோல் நடுவிலே தீண்டிய, கார் கவின் பெற்ற - மேகத்தின் அழகைப் பெற்ற, ஐம்பால் போல் - கூந்த

லைப் போல, மை அற - மழை நீங்கிய காரணத்தால், துவர் மணல் விளங்கிய - உலர்ந்த மணல்கள் விளங்கின ; அதுஅது - அம்மணல் களின்மீது, ஐதாக நெறித்தன்ன - அழகாகப் பிடித்துவிட்டாற் போன்ற, அறல் அவிர் நீள் ஐம்பால் - நெறிப்பு விளங்குகின்ற நீண்ட கூந்தலிலே, அணி நகை இடை இட்ட - அழகிய நகைகளுக்கு இடையே பொருந்திய, ஈகை அம் கண்ணி போல் - பொன்னாலாகிய அழகிய தலைமாலை போல, பிணி நெகிழ் அலர் - கட்டுவிட்ட (பல) மலர்களுக் கிடையே, வேங்கை விரிந்த பூ நெறி கொள - வேங்கை மரத்தினது மலர்ந்த பூக்கள் வரிசை கொள்ளவும்,

'அதுஅது' என்னும் அடுக்குப் பன்மையை உணர்த்திற்று.

மணற்பரப்புக்குப் பெண்கள் கூந்தலும், பல நிறப் பூக்களைக் கொண்ட மணல்களின் நடுவிலே வேங்கை மரத்தினது மலர்ந்த பூக்கள் வரிசை கொண்ட மைக்குக் கூந்தலிலே பல அணிகளுக்கிடையே பொருந்திய பொன்னாலாகிய தலைமாலையும் உவமை.

துணிநீரால் தூமதி நாளால் அணிபெற
ஈன்றவள் திதலைபோல் ஈர்பெய்யும் தளிரோடும்
ஆன்றவர் அடக்கம்போல் அலர்ச்செல்லாச் சினையோடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலோடும்
நல்லவர் நுடக்கம்போல் நயம்வந்த கொம்போடும்
உணர்ந்தவர் ஈகைபோல் இணரூழ்த்த மரத்தோடும்
புணர்ந்தவர் முயக்கம்போல் புரிவுற்ற கொடியோடும்
நயந்தார்க்கோர் நல்லைமன் இளவேனில் எம்போல ?

துணி நீரால் - தெளிந்த நீராலும், தூ மதி நாளால் - தூய சந்திரனையுடைய நாட்களாலும், அணி பெற ஈன்றவள் - அழகு பெற(க் குழந்தையை)ப் பெற்றவளுடைய, திதலை போல் - திதலை யைப்போல, ஈர் பெய்யும் தளிரொடும் - ஈர்க்கையுடைய தளிர்களா லும், ஆன்றவர் அடக்கம் போல் - அறிவுள்ளார் (தம் காரியத்தை முடித்தற்குத் தக்க காலம் வருமளவும்) அடங்கி இருப்பது போல, அலர் செல்லா - (காலம் வருமளவும்) மலர்தலைச் செய்யாத, சினை யொடும் - (அரும்புகளையுடைய) கொம்புகளாலும், வல்லவர் யாழ் போல - வாசிக்கத் தெரிந்தவர் (யாழ் வாசிக்கும்பொழுது உண்டாகும்) யாழிசையைப் போல, வண்டு ஆர்க்கும் புதலொடும் - வண்டுகள் ஒலிக் கின்ற புதர்களாலும், நல்லவர் நுடக்கம் போல் - பெண்களுடைய

கூத்து(க் காண்பவர்களுக்கு இன்பத்தைச் செய்வதை)ப் போல, நயம் வந்த கொம்பொடும் - விருப்பம் வருதற்குக் காரணமான கொம்புகளாலும், உணர்ந்தவர் ஈகை போல் - (பொருள்களின் நிலையாமையை) உணர்ந்த பெரியோர்களின் தருமத்தைப்போல, இணர் ஊழ்த்த மரத்தொடும் - கொத்துக்கள் மலர்ந்த (எல்லார்க்கும் பயன்படும்) மரங்களாலும், புணர்ந்தவர் முயக்கம் போல்-(அன்பால்) கூடினவர்களுடைய ஆலிங்கனத்தைப்போல, புரிவு உற்ற கொடியொடும் - பின்னுதல் பொருந்திய கொடிகளாலும் (பொழில்கள் அழகுபெற), இளவேனில்-(வந்த) இளவேனிலே, எம்போல-(எம் தலைவர் எப்போது வருவரோ என்று விரும்பியிருக்கும்) எம்மைப்போல, நயந்தார்க்கு - விரும்பி இருந்தார்க்கு, ஓர் நல்லைமன் - (நீ) ஒரு நல்லையோ?

திதலை—மகவைப் பெற்றெடுத்தவளுடைய அடிவயிற்றில் ஈர்க்குப்போலக் காணப்படும் பல கோடுகளின் தொகை. 'தளிர்ப்புறத்து ஈர்க்கின் அரும்பிய திதலையர்' என்பது மதுரைக் காஞ்சி (707, 708).

'இளையோய், கிளையை மன்எங் கேள்வெய் யோற்கு' (புறம் 144) என்றவிடத்துப்போல, 'மன்' வினைப்பொருளில் வந்தது. இது 'வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித், திரிந்துவேறு படினுந் தெரிந்தனர் கொளலே' (தொல். இடை. 47) என்பதனாற் பெறப்பட்டது.

பசந்தவர் பைதல்நோய் பகையெனத் தணித்துநம்
இன்னுயிர் செய்யும் மருந்தாகிப் பின்னிய
காதலர் எயிறேய்க்கும் தண்ணருவி நறுமுல்லைப்
போதாரக் கொள்ளும் கமழ்குரற் கென்னும்
தூது வந்தன்றே தோழி!
துயரறு கிளவியோ டயர்ந்தீகம் விருந்தே!

பசந்தவர் - பசலை பூத்தவருடைய, பைதல் நோய் - வருத்தத்தைச் செய்யும் (காம) நோயை, பகை என தணித்து - (தனக்குப்) பகையாகக்கொண்டு போக்கி, நம் இன்னுயிர் செய்யும் மருந்தாகி - நம்முடைய இனிய உயிரை உண்டாக்கும் மருந்துமாய், எயிறு ஏய்க்கும் - (மகளிர்) பற்களைப்போன்ற, தண் அருவி நறு முல்லை போது - குளிர்ச்சியைக்கொண்ட அருவியினது பக்கத்திலுள்ள மணம் பொருந்திய முல்லை அரும்புகளை, கமழ் குரற்கு ஆர கொள்ளும் என்னும் - (இயற்கை) மணம் வீசுகின்ற (உங்கள்) கூந்தலுக்கு நிரம்பக் கொள்

னாங்கள் என்னும், துயர் அறு கிளவியோடு - (நாம்) துன்பம் நீங்குவதற்குக் காரணமான சொல்லோடு, பின்னிய காதலர் தூது வந்தன்று - (நம்மிடத்துத்) தொடுத்த அன்புடைய தலைவரது தூதாய் (இவ்விளவேனில்) வந்தது, தோழி - தோழியே! விருந்து அயர்ந்தீகம் - (நாம் இதற்கு) விருந்து செய்வோம் !

அயர்ந்தீகம் - வினைத்திரிசொல்.

வந்தன்றே - ஏ - அசை.

விருந்தே - ஏ - அசை.

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

[இது கொச்சகம்.] (31)

கலி. 33

இளவேனிற்கால வரவின்கண் ஆற்றாது வருந்திய தலைவியைத் தோழி ஆற்றி இருக்குமாறு வற்புறுத்தினாள். அவ்வுரையை உளம் கொள்ளாது வருந்திக்கொண்டிருந்தாட்கு அவள் தலைவனது வரவை உணர்ந்து பெருவகையால் கூறி ஆற்றுகின்றாள்.

வீறுசால் ஞாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோல் கயம்நந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுள் துப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கிதழ் அணிகயத் துதிர்ந்துகத்
துணிகய நிழல்நோக்கித் துதைபுடன் வண்டார்ப்ப
மணிபோல அரும்பூழ்த்து மரமெல்லாம் மலர்வேயக்
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று ! வாரார்நம்
போதெழில் உண்கண் புலம்ப நீத்தவர் !

எரியுரு உறழ இலவம் மலரப்
பொரியுரு உறழப் புன்குபூ உதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்பத்
தமியார்ப் புறத்தெறிந் தெள்ளி முனியவந்

தார்ப்பது போலும் பொழுதென் அணிநலம்
போர்ப்பது போலும் பசப்பு!

நொந்து, நகுவனபோல் நந்தின கொம்பு; நைந்துள்ளி
உகுவது போலும் என்னெஞ் செள்ளித்
தொகுபுடன் ஆடுவ போலும் மயில்; கையில்
உகுவன போலும் வளையென் கண்போல்
இருபறல் வாரும் பருவத்தும் வாரார்!
மிகுவது போலுமிந் நோய்!

நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல்போல்
இரங்கிசை மிஞிறொடு தும்பிதா தூதத்
தூதவர் விடுதரார் துறப்பார்கொல்? நோதக
இருங்குயில் ஆலும் அரோ!

எனவாங்கு,

புரிந்துநீ எள்ளும் குயிலையும் அவரையும் புலவாதி!
நீலிதழ் உண்கணாய்! நெறிகூந்தல் பிணிவிட
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி
மாலைதாழ் வியன்மார்பர் துணைதந்தார்
காலுறழ் கடுந்திண்தேர் கடவினர் விரைந்தே!

(தரவு)

வீறுசால் ஞாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோல் கயம்நந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுள் துப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கிதழ் அணிகயத் துதிர்ந்துகத்
துணிகய நிழல்நோக்கித் துதைபுடன் வண்டார்ப்ப
மணிபோல அரும்பூழ்த்து மரமெல்லாம் மலர்வேயக்
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று! வாரார்நம்
போதெழில் உண்கண் புலம்ப நீத்தவர்!

வீறு சால் - பெருமை மிக்க, ஞாலத்து - உலகத்தினது, வியல் அணி காணிய - பரந்த அழகைக் காணும்பொருட்டு, யாறு கண் விழித்த போல் - ஆறுகள் கண்களை விழித்துப் பார்த்தன போல, கயம் நந்தி கவின் பெற - (அவ்வாறுகளின் பக்கங்களிலுள்ள) குளங்கள் (நீர்) நிறைந்து அழகு பெறவும், மணி புரை வயங்கலுள் -(பளிங்கு) மணியைப் போன்ற கண்ணாடிக்குள்ளே, துப்பு எறிந்தவை போல - பவழங்கள் வீசப்பட்டுத் தோன்றுவன போல, பிணி விடு - கட்டு அவிழ்கின்ற, முருக்கு இதழ் - முருக்கம்பூவினுடைய இதழ்கள், அணி கயத்து உதிர்ந்து உக - அழகிய குளங்களிலே உதிர்ந்து சிந்தவும், துணி கயம் - தெளிந்த குளங்களிலே, நிழல் நோக்கி - (தம்) உருவத் தோற்றத்தைக் கண்டு, துதைபு - (அவ்விடத்தை) நெருங்கி, வண்டு உடன் ஆர்ப்ப - வண்டுகள் ஒரு சேர ஆரவாரம் செய்யவும், மரம் எல்லாம்-(கரையிலுள்ள) மரங்களெல்லாம், அரும்பு ஊழ்த்து - அரும்புகள் மலர்ந்து, மணி போல மலர் வேய-(பல) மணிகளைச் சூடினாற்போலப் பூக்களைச் சூடவும், காதலர் புணர்ந்தவர் - காதலையுடைய கணவரைக் கூடினவருடைய, கவவு கை - ஆலிங்கனம் செய்த கையானது, நெகிழாது - நழுவாதபடி, தாது அவிழ் வேனிலோ வந்தன்று-மகரந்தப் பொடிகளை அவிழ்க்கும் இளவேனிற்காலமோ வந்தது! நம் போது எழில் உண் கண் - நமது பூவினது அழகையுடைய(மை) உண்ட கண்கள், புலம்ப நீத்தவர் - வருந்த (நம்மைவிட்டு) நீங்கின தலைவரோ, வாரார் - வாரார் ஆயினர்!

வேனிலோ - ஓ - எதிரது தழுவிய எச்சப்பொருளது.

(தாழிசை)

எரியுரு உறழ இலவம் மலரப்
பொரியுரு உறழப் புன்குபூ உதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்பத்
தமியார்ப் புறத்தெறிந் தெள்ளி முனியவந்
தார்ப்பது போலும் பொழுதென் அணிநலம்
போர்ப்பது போலும் பசப்பு!

எரி உரு உறழ - நெருப்பின் நிறத்தைப் போல, இலவம் மலர - இலவமரங்கள் மலரவும், பொரி உரு உறழ - பொரியின் உருவைப் போல, புன்கு பூ உதிர - புன்கமரங்கள் பூக்களை உதிர்க்கவும், புது மலர் கோங்கம் - புதிய மலரையுடைய கோங்கு மரங்கள், பொன் என-

பொன் போல, தாது ஊழ்ப்ப - மகரந்தப் பொடிகளை உதிர்க்கவும், தமியார் - தனித்திருப்பாரை, புறத்து எறிந்து - வெளியே தள்ளி, எள்ளி முனிய - (யாரும்) இகழ்ந்து வெறுக்க, பொழுது - (இந்த) இளவேனிற்காலம், வந்து ஆர்ப்பது போலும் - வந்து ஆரவாரம் செய்வது போல இருக்கின்றது ! பசப்பு - (அதனால்) பசப்பானது, என் அணி நலம் போர்ப்பது - எனது அழகையுடைய நலத்தை மறைப்ப தொன்றுயிருக்கின்றது !

'போர்ப்பது போலும்' என்றவிடத்துப் 'போலும்' என்பது உரையசை, ஒப்பில் போலியாதலின்; கீழ் வருகின்ற பலவற்றிற்கும் இஃதொக்கும்.

நோந்து, நகுவனபோல் நந்தின கொம்பு ; நைந்துள்ளி
உகுவது போலும் என்னெஞ் செள்ளித்
தொகுபுடன் ஆடுவ போலும்மயில் ; கையில்
உகுவன போலும் வளையென் கண்போல்
இகுபறல் வாரும் பருவத்தும் வாரார் !
மிகுவது போலுமிந் நோய் !

நொந்து - (கணவரைப் பிரிந்த பெண்களை நாம் இகழ்தற்குக் காலம் வரவில்லையே என்று) வருந்தியிருந்து (அது வந்த பின்னர்), நகுவன போல் நந்தின கொம்பு - (நம் வருத்தங் கண்டு) சிரிப்பன போலக் கொம்புகள் (பூவொடு) வளர்ந்தன ; என் நெஞ்சு - (அதனைக் கண்டு) என் மனம், நைந்து - வருந்தி, உள்ளி - (தலைவரை) நினைந்து, உகுவது - அழிகின்றது ; மயில் எள்ளி தொகுபுடன் ஆடுவ - மயில்கள் இகழ்ந்து சேரத் திரண்டு ஆடுகின்றன ; வளை கையில் உகுவன - வளையல்கள் (என்) கையிலிருந்து (கழன்று) விழுகின்றன ; என் கண் போல் அறல் இகுபு வாரும் பருவத்தும் - என் கண்ணீர்போல நீர் இற்று இற்று ஒழுகும் இளவேனிற்காலத்தும், வாரார் - (தலைவர்) வாரார் ஆயினர் ! மிகுவது இ நோய் - (ஆதலால்) இந்த நோய் மிகுவ தொன்றாய் இருக்கின்றது !

கண் - ஆகுபெயர்.

நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல்போல்
இரங்கிசை மிஞிறொடு தும்பிதா தூதத்
தூதவர் விடுதரார் துறப்பார்கொல் ? நோதக
இருங்குயில் ஆலும் அரோ !

நரம்பின் தீங்குரல் - (யாழ்) நரம்பினது இனிய இசையை, நிறுக்கும் குழல் போல் - (தண்டிலே) நிறுத்தும் புல்லாங்குழலைப் போல, இரங்கு இசை - ஒலிக்கும் ஓசையையுடைய, மிஞிறொடு தும்பி - வண்டுகளும் தும்பிகளும், தாது ஊத - மகரந்தப் பொடிகளை உண்ண, நோ தக - (நம்) வருத்தம் மிக, இருங்குயில் ஆலும் - கரிய குயில்கள் கூவும்! அவர் தூது விடுதரார்-தலைவர் தூது விடாதவராய், துறப்பார்கொல் - (நம்மை) விட்டுவிடுவாரோ ?

அரோ - அசை.

கொல் - ஐயம்.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று (தலைவி சொல்லக் கேட்ட தோழி),

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

புரிந்துநீ எள்ளும் குயிலையும் அவரையும் புலவாதி !
நீலிதழ் உண்கணாய் ! நெறிகூந்தல் பிணிவிட
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி
மாலைதாழ் வியன்மார்பர் துனைதந்தார்
காலுறழ் கடுந்திண்தேர் கடவினர் விரைந்தே !

நீல் இதழ் உண் க(ண்)ணாய் - நீலப் பூப்போன்ற (மை) உண்ட கண்களையுடையவளே ! நீ புரிந்து - நீ மனம் வேறுபட்டு, எள்ளும் குயிலையும் - (உன்னை) இகழும் குயிலையும், அவரையும் - தலைவரையும், புலவாதி - வெறுக்காதே ! நெறி கூந்தல் பிணி விட - நெறிப்புடைய (உனது) கூந்தல் கொண்ட சிக்கு நீங்க, நாள்வரை நிறுத்து - (தாம் வரும்) நாள் எல்லையை வரையறுத்து, தாம் சொல்லிய - தாம் சொன்ன மொழிகள், பொய் அன்றி - பொய்யாகாதவாறு, மாலை தாழ் வியன் மார்பர் - மாலை தாழ்ந்த அகன்ற மார்பையுடைய தலைவர், கால் உறழ் கடுந்திண்தேர் - காற்றைப்போன்ற விரைவினையுடைய பலம் பொருந்திய தேரை, கடவினர் விரைந்து துனைதந்தார் - செலுத்தினவராய் மிக விரைந்து வந்தார் !

விரைந்தே - ஏ - அசை.

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

[இது கொச்சகம்.] (32)

கலி. 34

இளவேனிற்கால வரவின்கண் ஆற்றாது வருந்திய தலைவியைத் தோழி ஆற்றி இருக்குமாறு வற்புறுத்தினாள். அவ்வுரையை உளம் கொள்ளாது வருந்திக்கொண்டிருந்தாட்குத் தலைவனது வரவை யுணர்ந்து தோழி பேருவகையால் கூறி ஆற்றுகின்றாள்.

மன்னுயிர் ஏமுற மலர்ஞாலம் புரவீன்று
பன்னீரான் பாய்புனல் பரந்தூட்டி இறந்தபின்
சின்னீரான் அறல்வார அகல்யாறு கவின்பெற
முன்னொன்று தமக்காற்றி முயன்றவர் இறுதிக்கண்
பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர்போல்
பன்மலர் சினையுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
இன்னமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினான்

விரிகாஞ்சித் தாதாடி இருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன்! மறைப்பவும்
கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
எரிபொத்தி என்னெஞ்சம் சுடுமாயின் எவன்செய்கோ!

பொறைதளர் கொம்பின்மேல் சிதரினம் இறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பென்மன்! மறைப்பவும்
முறைதளர்ந்த மன்னவன் கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாரும் கண்ணாயின் எவன்செய்கோ!

தளையவிழ்பூஞ் சினைச்சுரும் பியாழ்போல இசைப்பவும்
கொளைதளரா தவர்தீமை மறைப்பென்மன்! மறைப்பவும்
கிளையழிய வாழ்பவன் ஆக்கம்போல் புல்லென்று
வளையானா நெகிழ்போடும் தோளாயின் எவன்செய்கோ!

எனவாங்கு,

நின்னுண்ணோய் நீயுரைத் தலமரல் எல்லாநாம்
எண்ணிய நாள்வரை இறவாது காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்
கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே.

(தரவு)

மன்னுயிர் ஏமுற மலர்ஞாலம் புரவீன்ற
பன்னீரான் பாய்புனல் பரந்தூட்டி இறந்தபின்
சின்னீரான் அறல்வார அகல்யாறு கவின்பெற
முன்ஞென்று தமக்காற்றி முயன்றவர் இறுதிக்கண்
பின்ஞென்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர்போல்
பன்மலர் சினையுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
இன்னமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினன்

மலர் ஞாலம் மன் உயிர் ஏமுற - அகன்ற உலகத்தில் பொருந்திய உயிர்கள் இன்பமுறும்படி, அகல் யாறு - அகன்ற ஆறுகள், பல் நீரால் - மிக்க நீர் ஓடுகின்ற கால்களாலே, பாய் புனல் - (தம்மிடத்து வந்து) பாயும் நீரை, பரந்து ஊட்டி - (தாம் எங்கும்) பரந்து உண்பித்து, புரவு ஈன்று - காத்தலைச் செய்து, இறந்த பின் - (அந்நீர்) வற்றிய பின்பு, சில் நீரால் அறல் வார - சிறிது நீர் ஓடுகின்ற கால்களாலே நீர் ஒழுக, கவின் பெற - (அவ்வாறுகள்) அழகு பெறும்படி, முன் ஒன்று தமக்கு ஆற்றி முயன்றவர் - முன்னே ஓர் உதவியைத் தமக்குச் செய்து (அதன்பொருட்டுப்) பெருமுயற்சியைச் செய்தவருடைய, இறுதிக்கண் - கேட்டில், பின் ஒன்று பெயர்த்து ஆற்றும் - பின்பு ஓர் உதவியைத் திரும்பச் செய்யும், பீடுடையாளர் போல்-பெருமையையுடைய தொழிலை ஆளுவாரைப் போல, சினை பல் மலர் உக - (அந்நீரையுண்ட மரங்களின்) கிளைகள் பல மலர்களை (அவ்வாறுகளிலே) உதிர்க்கவும், சுரும்பு இமிர்ந்து வண்டு ஆர்ப்ப - சுரும்புகள் ஒலி செய்து வண்டுகள் ஆரவாரிக்கவும், இன் அமர் இளவேனில் - இனிமை பொருந்திய இளவேனிற்காலம், இறுத்தந்த பொழுதினன் - வந்து தங்கிய பொழுதிலே,

பொழுதினன் - உருபு மயக்கம்.

'ஏமம் உற' என்பது 'ஏமுற' என நின்றது.

'பெருநீர்', 'சிறுநீர்' என்னுது 'பன்னீர்', 'சின்னீர்' என்றமை மரூஉ வழக்கு; அவை இங்கு ஆகுபெயராய் நின்றன.

'கவின் பெற மலர் உக' எனக் கூட்டுக.

(தாழிசை)

விரிகாஞ்சித் தாதாடி இருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பேன்மன் ! மறைப்பவும்

கரிபோய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
எரிபொத்தி என்னெஞ்சம் சுடுமாயின் எவன்செய்கோ !

விரி காஞ்சி தாது ஆடி - மலர்ந்த காஞ்சிப்பூவின் மகரந்தப் பொடிகளில் ஆடி, இருங்குயில் விளிப்பவும் - கரிய குயில்கள் கூவவும், பிரிவு அஞ்சாதவர் தீமை - பிரிந்து உறைதற்கு அஞ்சாத தலைவருடைய கொடுமையை, மறைப்பென் - மறைப்பேன், மன் - அதனால் பெற்ற பயன் என்! மறைப்பவும் - மறைப்பினும், கரி பொய்த்தான் கீழ் இருந்த - பொய்ச்சாட்சி சொன்னவன் (வந்து தன்) கீழ்(த் தங்கி) இருந்த, மரம் போல-மரம் (அழகு கெடுமாறு) போல, கவின் வாடி - (என்) அழகு கெடும்படி, என் நெஞ்சம் எரி பொத்தி- என் மனம் (காமத்)தீ மூண்டு, சுடுமாயின் எவன் செய்கோ - (என்னைச்) சுடுமானால் (அதற்கு யான்) என்ன செய்வேன் !

பொறைதளர் கொம்பின்மேல் சிதரினம் இறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பேன்மன்! மறைப்பவும்
முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாரும் கண்ணாயின் எவன்செய்கோ !

பொறை தளர்கொம்பின்மேல்-(பூவின்)பாரத்தால் தளர்ந்த கிளைகளின்மேல், சிதர் இனம் இறை கொள - வண்டின் கூட்டம் தங்குதல் கொள்ளவும், நிறை தளராதவர் தீமை - (தாம் கொண்ட) கோட்பாட்டினின்றும் தளராதவருடைய கொடுமையை, மறைப்பென் - மறைப்பேன், மன் - அதனால் பெற்ற பயன் என்! மறைப்பவும் - மறைப்பினும், முறை தளர்ந்த மன்னவன்கீழ் - (நாட்டை ஆளும்) முறைமை தளர்ந்த அரசன் (ஆளுகையின்) கீழ் இருந்த, குடி போல - குடிகள் (கலங்குமாறு) போல, கலங்குபு - கலங்கி, பொறை தளர்பு - பொறுத்தல் தளர்ந்து, கண் பனி வாரும் ஆயின் - கண்கள் நீரைக் கொட்டுமானால், எவன் செய்கோ - (அதற்கு யான்) என்ன செய்வேன் !

கண்கள் பொறை தளர்தல் - கண்கள் நீரைத் தம்மிடத்தே அடக்கி வைக்கும் ஆற்றலை இழத்தல்.

'இறைகொள' என்ற இடத்து உம்மை விகாரத்தால் தொக்கது.

தளையவிழ்பூஞ் சினைச்சுரும் பியாழ்போல இசைப்பவும்
கோளைதளரா தவர்தீமை மறைப்பேன்மன் ! மறைப்பவும்

கிளையழிய வாழ்பவன் ஆக்கம்போல் புல்லென்று
வளையாஅ நெகிழ்போடும் தோளாயின் எவன்செய்கோ !

தளை அவிழ் பூ சினை - முறுக்கு அவிழ்ந்த அழகிய பூக்களிலே, சுரும்பு யாழ் போல இசைப்பவும் - வண்டுகள் யாழ் இசை போல ஒலிக்கவும், கொளை தளராதவர் தீமை - (தாம் கொண்ட) கோட்பாட்டினின்றும் தளராதவருடைய கொடுமையை, மறைப்பென் - மறைப்பேன், மன் - அதனால் பெற்ற பயன் என் ! மறைப்பவும் - மறைப்பினும், கிளை அழிய வாழ்பவன்-(தன்) சுற்றம் கெட வாழ்கின்றவன், ஆக்கம் போல் - செல்வம் (பொலிவு கெடுமாறு) போல, புல்லென்று - பொலிவு கெட்டு, வளை - வளையல்கள், தோள் - கைகளில், ஆஅ - (தங்குதல்) அமையாவாய், நெகிழ்பு ஓடும் ஆயின் - கழன்று ஓடுமானால், எவன் செய்கோ - (யான் அதற்கு) என்ன செய்வேன் !

யாழ், சினை - ஆகுபெயர்.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

நின்னுண்ணோய் நீயுரைத் தலமரல் எல்லா !நாம்
எண்ணிய நாள்வரை இறவாது காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்
கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே.

எல்லா - தோழியே ! நின் உள் நோய் - நினது மன நோயை, நீ உரைத்து அலமரல் - நீ (எடுத்துக்) கூறி வருந்தாதே, நாம் எண்ணிய நாள் வரை இறவாது - (அவர் வருவர் என்று) நாம் எண்ணி இருந்த நாள் எல்லை கடவாமல், கண் உறு பூசல்-கண் உறுகின்ற துன்பத்தை, கை களைந்தாங்கு - கை நீக்கினாற்போல, காதலர் பண்ணிய மாவினர் புகுதந்தார் - (நம்) காதலர் அலங்கரித்த குதிரையை உடையராய்ப் புகுந்தார்.

ஏ - அசை.

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (33)

கலி. 35

தன்னை ஆற்றி இருக்குமாறு தோழி வற்புறுத்தியும், "ஆயிழாய், நம் காதலர் வருவேம் என்று கூறிச் சென்ற காலம் இதுவன்றோ?" என்று கூறி வருந்திய தலைவிக்குத் தோழி தலைவன் வரவுணர்ந்து, " துன்பங்கொள்ளாதே, அவர் வந்துவிட்டார் " எனக்கூறி அவளை மீண்டும் ஆற்றுகின்றாள்.

மடியிலான் செல்வம்போல், மரன்நந்த அச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோல், பல்சினை மிஞிறார்ப்ப
மாயவள் மேனிபோல், தளிரீன அம்மேனித்
தாய சுணங்குபோல், தளிர்மிசைத் தாதுக
மலர்தாய பொழில்நண்ணி மணிநீர கயம்நிற்ப
அலர்தாய துறைநண்ணி அயிர்வரித் தறல்வார
நனியெள்ளுங் குயில்நோக்கி இனைபுகு நெஞ்சத்தால்
துறந்துள்ளார் அவரெனத் துனிகொள்ளல் எல்லாநீ ;

வண்ணவண் டிமிர்ந்தானா வையைவார் உயரெக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ
கண்ணிலா நீர்மல்கக் கவவிநாம் விடுத்தக்கால்
ஒண்ணுதால் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை !

மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ
வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கால்
ஒளியிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை!

நிலன்நாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடும் நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை !

எனவாங்கு,

உள்ளுதொ றுடையுநின் உயவுநோய்க் குயிர்ப்பாகி
எள்ளறு காதலர் இயைதந்தார் புள்ளியல்

காமர் கடுந்திண்தேர்ப் பொருப்பன்
வாய்மை அன்ன வைகலொடு புணர்ந்தே.

(தாவு)

மடியிலான் செல்வம்போல் மரன்நந்த அச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறுார்ப்ப
மாயவள் மேனிபோல் தளிரீன அம்மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத் தாதுக
மலர்தாய பொழில்நண்ணி மணிநீர கயம்நிற்ப
அலர்தாய துறைநண்ணி அயிர்வரித் தறல்வார
நனியெள்ளுங் குயில்நோக்கி இனைபுகு நெஞ்சத்தால்
துறந்துள்ளார் அவரெனத் துனிகோள்ளல் எல்லாநீ;

மடி இலான் செல்வம் போல் - சோம்பல் இல்லாதவனது செல்வம் (பெருகுமாறு) போல, மரன் நந்த - மரங்கள் (பூக்களைப் பூத்துத்) தழைக்கவும், அ செல்வம் படி உண்பார் - (அங்ஙனம் முயன்று பெற்ற) அச்செல்வத்தை (வருந்தாது தாம்) படியாகப் பெற்று உண்பாரது, நுகர்ச்சி போல் - அநுபவம் போல, பல் சினை மிஞிறு ஆர்ப்ப - (அம்மரங்களின்) பல கிளைகளிலுள்ள அப்பூக்களில் இருக்கும் (தேனை உண்டு) வண்டுகள் ஒலி செய்யவும், மாயவள் மேனி போல் - மாமை நிறத்தையுடையவளது நிறத்தைப் போல, தளிர் ஈன - (மரங்கள்) தளிர்களை விடவும், அ மேனி தாய சுணங்கு போல் - அந்த மாமை நிறத்திலே பரந்த தேமலைப்போல, தளிர்மிசை-(அந்தத்) தளிர்களின்மீது, தாது உக - மகரந்தப்பொடிகள் சிந்தவும், மலர் தாய பொழில் நண்ணி-(அந்த) மலர்கள் பரந்த சோலையை அடைந்து, மணி நீர கயம் நிற்ப - பளிங்குபோலும் நீரினை உடையனவாகிய குளங்கள் (வற்றாமல்) நிற்கவும், அலர் தாய துறை நண்ணி - மலர்கள் பரந்த துறைகளை அடைந்து, அறல் அயிர் வரித்து வார - நீர் நுண்மணல்களை அழகு செய்து ஒழுகவும், நனி எள்ளும் குயில் நோக்கி - (இவற்றால் வருந்துவதோடு அமையாமல் இவற்றின் மேலும்) அதிகமாக இகழும் குயிலைப் பார்த்தும், இனைபு உகு நெஞ்சத்தால் - வருந்தி அழியும் மனத்தால், அவர் துறந்து உள்ளார் என-தலைவர் (நம்மைத்) துறந்து (இனி) நினையார் என்று கருதி, எல்லா நீ துனி கொள்ளல் - தோழி நீ (மனத்தில்) வெறுப்பைக் கொள்ளாதே ;

‘நந்த, ஆர்ப்ப, ஈன, உக, நிறப்ப, வார, நோக்கித் துனிகொள்ளல்’ என்றும், ‘ குயில்நோக்கித் துனிகொள்ளல் ’ என்றும் கூட்டுக.

சினை - ஆகுபெயர்.

இளவேனில் வருமளவும் கூவாதொழிந்த குயில் அக்கால வரவின்கண் கூவியது தலைவியின் மொழிக்குத் தோற்று அடங்கியிருந்து பின் அவள் பிரிவுத் துன்பம் உற்ற அக்காலத்தே அவளை நோக்கிப் பழம்பகையால் நனி எள்ளியது போன்றிருக்கின்றது.

(தாழிசை)

வண்ணவண் டிமிர்ந்தாறு வையைவார் உயரெக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ
கண்ணிலா நீர்மல்கக் கவவிநாம் விடுத்தக்கால்
ஒண்ணுதால் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை !

ஒள் நுதால் - ஒளி பொருந்திய நெற்றியையுடையவளே ! நிலா-(நாம் நிறுத்தின அளவில்) நில்லாவாய், கண் நீர் மல்க-கண்கள் நீரால் நிரம்ப, கவவி நாம் விடுத்தக்கால் - (கையாலே) தழுவி (அவரை) நாம் விட்டபொழுது, நமக்கு அவர் வருதும் என்று உரைத்ததை - நமக்கு அவர் வருவேம் என்று உரைத்த காலம், வண்ணம் வண்டு இமிர்ந்து-நிறத்தையுடைய வண்டுகள் ஒலித்து, ஆறு - (இன்பம்) நீங்காத, வையை வார் உயர் எக்கர் - வையையாற்றின் நீண்ட உயர்ந்த மணல் மேட்டில், தண் அருவி நறு முல்லை - குளிர்ச்சி பொருந்திய அருவி நீராலே வளர்ந்த மணம் பொருந்திய முல்லைப் பூவின், தாது உண்ணும் பொழுது அன்றோ - தாதை உண்ணும் (இந்த) இளவேனிற்கால மன்றோ !

உரைத்ததை - திரிசொல்.

மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ
வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கால்
ஒளியிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை !

ஒளி இழாய் - ஒளிபொருந்திய அணிகளை அணிந்தவளே! வினை-(நீர் கைக்கொண்ட) காரியம், வலன் ஆக என்று - வெற்றி பெறுவதாக என்று கூறி, வணங்கி நாம் விடுத்தக்கால் - (அவரைத்) தொழுது நாம் விட்டபொழுது, நமக்கு அவர் வருதும் என்று உரைத்ததை - நமக்கு அவர் வருவேம் என்று கூறிய காலம், மல்கிய , (வளம்)

மிகுந்த, துருத்தியுள் - ஆற்றிடைக்குறையிலே, அவர் மகிழ் துணை புணர்ந்து - அவர் (தம்மை) விரும்பும் பரத்தையரைக் கூடி, வில்லவன் விழவினுள் - (கரும்பு) வில்லையுடைய காமனுக்கு நிகழ்த்துகின்ற திரு விழாவிலே, விளையாடும் பொழுது அன்றோ - விளையாடும் (இந்த) இளவேனிற்காலமன்றோ !

ஆற்றிடைக்குறை-ஆற்றின் இடையிலுள்ள தீவு; இதனை 'அரங்கம்' என்பர்.

நிலன்நாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடும் நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை !

சுடர் இழாய் - விளங்குகின்ற அணிகளை அணிந்தவளே ! பல நாடும் - (இறந்து போவோமோ ஆற்றி இருப்போமோ என்று) பல வற்றை ஆராயும், நெஞ்சினேம் - மனத்தை உடையோமாய், நாம் பரிந்து விடுத்தக்கால் - நாம் வருந்தி (அவரை) விட்டபொழுது, அவர் நமக்கு வருதும் என்று உரைத்ததை - அவர் நமக்கு வந்துவிடுவேம் என்று கூறிய காலம், நிலன் நாவில் திரிதரூஉம் - நிலத்திலுள்ளார் நாவிலே வழங்கும், நீள் மாட கூடலார் - நீண்ட மாளிகைகளையுடைய மதுரையிலுள்ளவர், புலன் நாவில் - அறிவினையுடைய (சான்றோர்) நாவில், பிறந்த சொல் - உண்டாகிய பாடல்களின், புதிது உண்ணும் பொழுது அன்றோ - புதுமையை அனுபவிக்கும் (இந்த) இளவேனிற் காலமன்றோ !

நிலன் - ஆகுபெயர்.
புலன் - கல்விப் பயனாகிய அறிவுடைமை.
சொல் - ஆகுபெயர்.

(தனிச்சொல்)

எனவாங்கு,

என - என்று சொல்லி,

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

உள்ளுநோ யுடையும்நின் உயவுநோய்க் குயிர்ப்பாகி
எள்ளறு காதலர் இயைதந்தார் புள்ளியல்

காமர் கடுந்திண்டேர்ப் பொருப்பன்
வாய்மை அன்ன வைகலோடு புணர்ந்தே.

உள்ளுதொறு உடையும் - (தம்மை) நினைக்கும் பொழுதெல்லாம் (நெஞ்சு) அழியும், நின் உயவு நோய்க்கு-நினது வருத்தத்தையுடைய (காம) நோய்க்கு, உயிர்ப்பு ஆகி - இறப்பைச் செய்வதாகி, புள் இயல்-பறவையினது (பறத்தல்) தன்மையை உடைத்தாகிய, காமர் கடுந் திண்தேர் - அழகிய கடிய வலிய தேரையுடைய, பொருப்பன் வாய்மை அன்ன - பொதிய மலையினையுடைய பாண்டியனது தப்பாத மொழியினையொத்த, வைகலொடு புணர்ந்து - (குறித்த எல்லை தப்பாத) நாளோடு கூடி, எள் அறு காதலர் - (நம்மை) இகழ்ந்து இருத்தல் நீங்கின அன்பர், இயைதந்தார் - (நம்மைக்) கூடுதலைச் செய்தார்.

உயிர்ப்பு—இறத்தல் ; இதனை 'உயிர்ப்பதும் ஓம்பி ஒன்றும் உரையலை' என்னும் சிந்தாமணி அடியால் அறிக. (1989)

ஏ - அசை.

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

[இஃது ஒத்தாழிசைக் கலிப்பா.] (34)

கலி. 36

இளவேனிற்கால வரவினைக் கண்டு தலைவி ஆற்றாளாய் வருந்தினாள். அதனைக் கண்ட தோழி பெரிதும் வருந்தித் தன் ஆற்றாமையைத் தலைவிக்குக் கூறி அவளைக் குறிப்பால் ஆற்றுகின்றாள்.

கோடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து
நெடுமிசைச் சூழு மயிலாலும் சீர
வடிநரம் பிசைப்பபோல் வண்டொடு சுரும்பார்ப்பத்
தொடிமகள் முரற்சிபோல் தும்பிவந் திமிர்தர
இயனெறீஇ யவைபோல எவ்வாயும் இம்மெனக்
கயனணி பொதும்பருள் கடிமலர்த் தேனூத
மலராய்ந்து வயின்வயின் விளிப்பபோல் மரனூழ்ப்ப

இருங்குயில் ஆலப் பெருந்துறை கவின்பெறக்
குழவி வேனில் விழவெதிர் கொள்ளும்
சீரார் செவ்வியும் வந்தன்று
வாரார் தோழிநங் காத லோரே !

பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல் !
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள் !

நனியறல் வாரும் பொழுதென வெய்ய
பனியறல் வாருமென் கண் !

மலையிடைப் போயினர் வரல்நசைஇ நோயொடு
முலையிடைக் கனலுமென் நெஞ்சு !

காதலின் பிரிந்தார் கொல்லோ ! வறிதோர்
தூதொடு மறந்தார் கொல்லோ நோதகக்
காதலர் காதலும் காண்பாம் கொல்லோ !
துறந்தவர் ஆண்டாண் டுறைகுவர் கொல்லோ ! யாவது ?
நீளிடைப் படுதலும் ஒல்லும் ; யாழநின்
வாளிடைப் படுத்த வயங்கீர் ஓதி
நாளணி சிதைத்தலும் உண்டென நயவந்து
கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவியின் உயிர்க்குமென் நெஞ்சே!

கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து
நெடுமிசைச் சூழு மயிலாலும் சீர
வடிநரம் பிசைப்பபோல் வண்டோடு சுரும்பார்ப்பத்
தொடிமகள் முரற்சிபோல் தும்பிவந் திமிர்தர
இயனெழீஇ யவைபோல எவ்வாயும் இம்மெனக்
கயனணி பொதும்பருள் கடிமலர்த் தேனூத
மலராய்ந்து வயின்வயின் விளிப்பபோல் மரனூழ்ப்ப
இருங்குயில் ஆலப் பெருந்துறை கவின்பெறக்
குழவி வேனில் விழவெதிர் கொள்ளும்
சீரார் செவ்வியும் வந்தன்று
வாரார் தோழிநங் காத லோரே !

கொடுமிடல் - கொடிய வலியினையுடைய, நாஞ்சிலான்-கலப்பைப் படையினையுடைய பலராமனது, தார் போல் - (துளசி) மாலையைப் போல, மராத்து நெடுமிசை - வெண்கடம்ப மரத்தின் உயர்ந்த மேல் இடத்தில், சூழும் மயில் ஆலும் - சுற்றியிருக்கின்ற மயில்கள் ஆரவாரிக்கும், சீர - சிறப்பினையுடைய, வண்டொடு சுரும்பு - (அம்மரத்திலே) பெண் வண்டுகளோடு ஆண் வண்டுகள், வடி நரம்பு இசைப்ப போல் - (விரலால்) எறிந்த (யாழ்) நரம்புகள் இசைப்பன போல, ஆர்ப்ப - ஒலி செய்யவும், தொடி மகள் - 'தொடி' என்னும் அணியையுடைய விறலி, முரற்சி போல் - ஆலாபம் செய்வது போல, தும்பி வந்து இமிர்தர - தும்பிகள் வந்து ஒலி செய்யவும், கயன் அணி பொதும்பருள் - குளங்கள் அழகு செய்கின்ற இளமரச் சோலையில், எ வாயும்-எவ்விடத்திலுமுள்ள, கடி மலர் - மணமுள்ள மலர்களில், இயன் எழீஇயவை போல - வாச்சியங்களிலிருந்து எழுந்த இசைகளைப் போல, இம்மென - இம்மென்னும் ஓசை உண்டாகும்படி, தேன்-வண்டுகள், ஊத - ஒலி செய்யவும், மரன் ஆய்ந்து - மரங்கள் (அணிய உரியவரை) ஆராய்ந்து, வயின் வயின் விளிப்ப போல்-(தத்தம்) இடங்களிலே அழைப்பன போல, மலர் ஊழ்ப்ப - மலர்களை மலரவும், இருங்குயில் ஆல - கரிய குயில்கள் ஆரவாரிக்கவும், பெருந்துறை கவின் பெற - பெரிய நீர்த்துறைகள் (பூவால்) அழகு பெறவும், விழவு எதிர்கொள்ளும் - (காமனுக்கு நிகழ்த்தும்) திருவிழாவை எதிர்கொள்ளும், குழவி வேனில் - இளவேனிலாகிய, சீர் ஆர் செவ்வியும் - சிறப்புப் பொருந்திய காலமும், வந்தன்று - வந்துவிட்டது, தோழி - தோழியே, நம் காதலோரே வந்திலர்-நம் அன்பரோ(இன்னும்) வாராராயினர்!

குழவு - இளமை ; அதனையுடையது குழவி.

பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல் !
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள் !

நுதல் - (எனது) நெற்றி, பாஅய் பாஅய் - (பசலை நிறம்) பரவிப் பரவி, பசந்தன்று - (முற்றும்) பசந்துவிட்டது ! தோள்-(என்) தோள்கள், சாஅய் சாஅய் - மெலிந்து மெலிந்து, நெகிழ்ந்தன - (முற்றும்) மெலிந்துவிட்டன !

நனியறல் வாரும் பொழுதென வெய்ய
பனியறல் வாருமென் கண் !

என் கண் - என் கண்கள், நனி அறல் வாரும் பொழுது என - (இக்காலம்) பெரிதும் நீர் ஒழுகும் இளவேனிற்காலமென்று(எண்ணி), வெய்ய - வெம்மையையுடைய, பனி அறல் வாரும் - துன்பக் கண்ணீரைச் சிந்தும்!

மலையிடைப் போயினர் வரல்நசைஇ நோயொடு
முலையிடைக் கனலுமென் நெஞ்சு!

என் நெஞ்சு - எனது மனம், மலையிடை போயினர் - மலையிடத்தே போனவருடைய, வரல் நசைஇ - வருகையை விரும்பி, நோயொடு - காமத்தீயாலே, முலையிடை கனலும்-(என்னுடைய) முலையெல்லாம் காந்தும்!

காதலின் பிரிந்தார் கொல்லோ! வறிதோர்
தூதொடு மறந்தார் கொல்லோ ! நோதகக்
காதலர் காதலும் காண்பாம் கொல்லோ !
துறந்தவர் ஆண்டாண் டுறைகுவர் கொல்லோ ! யாவது ?
நீளிடைப் படுதலும் ஒல்லும் ; யாழநின்
வாளிடைப் படுத்த வயங்கீர் ஓதி
நாளணி சிதைத்தலும் உண்டென நயவந்து
கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவியின் உயிர்க்குமென் நெஞ்சே!

காதலின் - (காதலர் நம்மிடத்துக்கொண்ட) காதலிலிருந்து, பிரிந்தார் கொல்லோ - நீங்கினரோ ! நோ தக - (நம்) துன்பம் மிக, வறிது - (அவர்) அன்பின்றி, ஓர் தூது - ஒரு தூது (நம்மிடை விடுதலையும்), மறந்தார் கொல்லோ - மறந்தாரோ ! காதலர் காதலும் - அவர் (நம்மிடத்தில் நிகழ்த்தும்) காதலையும், காண்பாம் கொல்லோ - (நாம் இறந்துபடாமல் இருந்து) காண்போமோ ! துறந்தவர் ஆண்டு ஆண்டு - (நம்மை இங்ஙனம் விட்டு) நீங்கியவர் அந்தந்த இடங்களிலே, உறைகுவர் கொல்லோ - இருந்தேவிடுவாரோ ! யாவது - (இவற்றுள் நிகழ்வது) யாதோ (என்று தலைவி கூறக்கேட்ட தோழி), நீள் இடைப்படுதலும் ஒல்லும் - (கூடியிருந்த தலைவர்) தூர தேசத்தில் பிரிந்திருந்தலும் (இவ்வுலக இயற்கைக்குப்) பொருந்தும்; நின் வாள்

இடை படுத்த-(ஆயினும் அப்பிரிவு) நின் வாளாலே வகுப்புச் செய்த, வயங்கு ஈர் ஓதி-விளங்குகின்ற நெய்ப்புடைய (நின்) கூந்தலிடத்தே, நாள் அணி சிதைத்தலும்-நாள்தோறும் செய்யப்படும் அழகை(ச் செய் யாவாறு) கெடுத்தலும், உண்டு என - உண்டெனக் கருதி, நயவந்து - விரும்பி, கேள்வி அந்தணர் கடவும் - வேதங்களில் வல்ல அந்தணர் நடத்தும், வேள்வி ஆவியின் - யாகத்தினின்றும் தோன்றும் புகை போல, என் நெஞ்சு உயிர்க்கும் - என் மனம் நெட்டுயிர்ப்புக் கொள்ளு கின்றது! (எனத் தன் ஆற்றாமை கூறித் தலைவியைக் குறிப்பால் ஆற்றுவித்தாள்.)

யாழ, ஏ - அசை.

ஒடு - அசை ; 'இன்றொடு நாளைக குறுக வருமரோ கூற்று' (வெண்பா யாலை - பொதுவியல் ; பெருங்காஞ்சி.)

இதனால் தோழிக்கும் தலைவிக்கும் சூழ்ச்சி தோன்றிற்று.

[இது கொச்சகம்] (35)

செய்யுள் முதற்குறிப்பகராதி

	பக்கம்		பக்கம்
அணைமருள்	51	தொடங்கற்கண்	7
அரிதாய	41	தொல்லெழில்	105
அரிமான்	55	நடுவிகந்	28
அருந்தவம்	110	நெஞ்சு	85
அரும்பொருள்	67	படைபண்ணிப்	63
அறனின்றி	12	பல்வளம்	71
ஆறறி	1	பாஅல்	19
இடுமுள்	45	பாடல்சால்	101
இலங்கொளி	82	பாடின்றிப்	59
ஈதலில்	97	பால்மருள்	75
உண்கடன்	77	மடியிலான்	131
எஃகிடை	119	மரையா	23
எறித்தரு	32	மன்னுயிர்	127
ஒருகுழை	92	வயக்குறு	87
கடும்புனல்	114	வலிமுன்	15
கொடுமிடல்	135	வறியவன்	37
செருமிகு	47	வீறுசால்	122
செவ்விய	69	வேனில்	25

சில குறிப்புக்கள்

1. பாலைத் திணை

*பாலையாவது பெரும்பாலும் முல்லையும் குறிஞ்சியும் தம் தன்மையில் திரிந்து நீரின்றித் துயர் செய்வது.

முதற்பொருள் :—

நிலமுதற்பொருள்—*பாலை, பாலை சார்ந்த இடம்.*

காலமுதற்பொருள்—*வேனிற்காலம் (இளவேனில் - சித்திரை, வைகாசி, முதுவேனில்—ஆனி, ஆடி), பின்பனிக் காலம் (மாசி, பங்குனி), நண்பகல்.*

கருப்பொருள் :—

தெய்வம்—*துர்க்கை.*

மக்கள்—*எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்.*

தலைவன்—*விடலை, மீளி, காளை.*

ஊர்—*குறும்பு.*

விலங்கு—*வலியழிந்த யானை, புலி, செந்நாய்.*

பறவை—*புறா, பருந்து, கழுகு, எருவை, கருங்காக்கை.*

மரம்—*வற்றிய இருப்பை, ஓமை, உழிஞை, ஞெமை, குரா, மரா, பாதிரி.*

வாத்தியம்—*சூறைகோட் பறை, நிரைகோட்பறை, பாலையாழ்.*

பண்—*பாலை.*

வினை—*ஆறலைத்தல், சூறையாடல்.*

உரிப்பொருள் .—*பிரிதல், பிரிதலின் நிமித்தம்.*

---

*முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்.

—சிலப்பதிகாரம் காடுகாண் காதை 64 - 66.

2. மெய்ப்பாடு

அச்சம்:—பயம்; தெய்வம், விலங்கு, கள்வர், தமக்கு இறைவ ராயினோர், புலவி (ஊடலின் முதிர்ச்சி) முதலிய பகுதியான் பிறப்பது.

அசைவு:—பழைய தன்மை கெட்டு வருந்தல்.

அருள்:—மக்கள் முதலிய சுற்றத்தாரை அருளுதல்.

ஆராய்ச்சி:—ஒரு பொருளை நன்று தீது என்று பகுத்தறிதல்.

இடுக்கண்:—மலர்ந்த நோக்கமின்றி மையல் (மயக்கம்) நோக்கம் பட வரும் இரக்கம்.

இழிவு:—பிறரால் இகழப்பட்டு எளியனாதல்.

உவகை:—மகிழ்ச்சி.

கருதல்:—மறந்ததனை நினைத்தல்.

கைம்மிகல்:—ஒழுக்கக்கேடு.

சூழ்ச்சி:—சுழற்சி; மனத் தடுமாற்றம்.

தன்மை:—சாதித் தன்மை; அவையாவன: பார்ப்பாராயின் குந்திமிதித்துக் குறுநடைகொண்டு வந்து தோன்றலும், அரசராயின் எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து சேறலும் என்று இன்னோரன்ன வழக்கு நோக்கிக் கொள்க.

நகை:—சிரிப்பு; எள்ளல், இளமை, பேதைமை, மடமை என்னும் நான்கும் பொருளாகத் தோன்றுவது.

நடுக்கம்:—அன்பும் அச்சமும் முதலாயின உடம்பில் புலப்படும் முறையால் உள்ளம் நடுங்குதல்.

நலிதல்:—பிறர்க்கு இன்னா செய்தல்.

புணர்வு:—காமப் புணர்ச்சி முதலாயின.

மருட்கை:—வியப்பு; புதிதாகக் கண்டனவும், மிகப் பெரியனவும், மிகச் சிறியனவும், ஒன்று ஒன்றாய்த் திரிந்தனவும் என நான்கும் பற்றித் தோன்றுவது.

திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார்

இயற்றிய நூல்கள்

			ரூ.	அ.
1.	திருக்கோவையார் இயல்பு	....	0	5
2.	மலர் வனம்	....	0	5
3.	திருமுருகாற்றுப்படை— பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும்		0	5
4.	அரிசிங்கு	...	0	5
5.	மேக தூதம்	....	0	3
6.	பல்வகைக் கட்டுரைகள்	....	0	14
7.	கலித்தொகை மூலமும் விளக்கவுரையும் (பாலைக்கலி)	...	1	4
8.	சிலப்பதிகார மூலமும் விளக்கவுரையும் (அச்சில்)			

கிடைக்குமிடம் :—

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Sadhu Press, Madras.